பக்கங்கள்: பதினெட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 18 வள்ளுவர் ஆண்டு 2034 ஐப்பசி 02 ஞாயிற்றுக்கிழமை (19-10-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:325

# பயங்கரவாதப் பட்டியலில் புலிகளை நீக்க அமெரிக்காவுக்கு நோர்வே பரிந்துரைக்கும்

## விசேட செய்தியை சொல்ஹெய்ம் எடுத்துச் செல்வார் தமிழ்ச்செல்வனுடனான சந்திப்பையடுத்து நடவடிக்கை

ஒஸ்லோ,ஒக்ரோபர்19

**பயங்கரவாத அமைப்புக்களின் பட்டியலில் இருந்து விடுதலைப் புலிகள் அமைப்பை நீக்கும்படி நோர்வே அமெரிக்காவுக்கு பரிந்துரை செய்யவிருக்கின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது.**

**விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனின் கோரிக்கையை அடுத்து இது தொடர்பான விசேட செய்தி ஒன்றை சமாதானக் குழுவின் ஆலோசகர் எரிக் சொல்ஹெய்ம் அமெரிக்காவுக்கு எடுத்துச்செல்லவிருக்கின்றார் என்று ஒரு தகவல் தெரிவித்தது.**

நோர்வே சென்றிருந்த விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழு நோர்வே சமாதானக் குழுவின் விசேட ஆலோசகர் எரிக் சொல்ஹெய்முடன் கடந்த வியாழனன்று பேச்சுக்களை நடத்தியது.

அமெரிக்கா தனது பயங்கரவாத அமைப்புக்கள் பட்டியலில் விடுதலைப் புலிகளை மீண்டும் சேர்த்திருப்பது குறித்து தமது அமைப்பின் அதிருப்தியை தமிழ்ச்செல்வன் சொல்ஹெய்மிடம் எடுத்துக்கூறினார்.

தனிநாட்டுக் கோரிக்கையை விடுதலைப் புலிகள் தளர்த்தி, போர் ஓய்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டு, அமைதிப் பேச்சுக்களில் கலந்துகொண்டிருக்கும் இந்தக் கட்டத்தில், உலகின் பல்வேறு நாடுகள் தங்கள் கடும்பிடியைத் தளர்த்தி விடுதலைப் புலிகளின் அணியைத் தங்கள் மண்ணில் வரவேற்றுக்கொண்டிருக்கும் தருணத்தில் அமெரிக்கா மட்டும் பிடிவாதமாக நிற்பது வெவ்வேறு மட்டங்களில் அதிருப்தியைத் தோற்றுவித்திருக்கிறது. தமிழீழத்திலும், தமிழர்கள் புலம்பெயர் நாடுகளிலும் உள்ள வெவ்வேறு அரசியல், சமூக, புத்திஜீவி மட்டங்களில், அமெரிக்காவின் இந்தப் புலிப் புறக்கணிப்புப் போக்கு, பெரும் அதிருப்தியைத் தோற்றுவித்திருக்கிறது. பல அமைப்புகள் அமெரிக்காவிடம் இது தொடர்பாக நேரடியாக (18ஆம் பக்கம் பார்க்க)

### பிரதமர் இன்று இந்தியா பயணம்

கொழும்பு,ஒக்.19

இந்தியாவுக்கு இரு நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இன்று புறப்படுகின்றார்.

இந்த விஜயத்தின்போது இந்தியப் பிரதமர் வாஜ்பாய், வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந் சின்ஹா ஆகியோர் உட்பட பலரை பிரதமர் ரணில் சந்தித்துப் பேசுவார்.

இலங்கையில் மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகள் மற்றும் வர்த்தக உறவுகள் தொடர்பாக அவர் பேச்சுக்கள் நடத்துவார். (ம-3-6)

### அம்பாறையில் 7 சிறுவர்கள் புலிகளால் ஒப்படைப்பு

அம்பாறை,ஒக்.19

அம்பாறை மாவட்டத்தில் விடுதலைப் புலிகளுடன் இணைய முன்வந்த ஏழு சிறுவர்கள் அவர்களின் பெற்றோரிடம் நேற்றுக் கையளிக்கப்பட்டனர்.

அக்கரைப்பற்றில் உள்ள விடுதலைப் புலிகளின் அரசியல் துறை அலுவலகத்தில் வைத்து யுனிசெவ் அமைப்பின் அதிகாரிகள் முன்னிலையில் மட்டு-அம்பாறை துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் குயிலின்பனால் சிறுவர்கள் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டனர் (ம-3-12)

### களுவாஞ்சிக்குடியில் நேற்று ஹர்த்தால்

மட்டக்களப்பு,ஒக்.19

மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிக்குடியில் நேற்றுமுன்தினம் விசேட அதிரடிப்படை சிப்பாய் ஒருவரால் வர்த்தகர் ஒருவர் அச்சுறுத்தப்பட்டார். பொது மகன் ஒருவர் தாக்கப்பட்டார்

இச்சம்பவத்தை கண்டித்து களுவாஞ்சிக்குடியில் நேற்றுக் கடைகள் மூடப்பட்டு ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

பிரஸ்தாப சிப்பாய் அப்பகுதியில் உள்ள கடை ஒன்றுக்குச் சென்று கட்டடப் பொருள்கள் கொள்வனவு செய்ய முயன்றார் என்றும்-

அச்சமயம் வர்த்தகர், பிரஸ்தாப சிப்பாய் முன்தரவேண்டிய நிலுவைப் பணம் குறித்துப் பிரஸ்தாபித்த போது வர்த்தகருக்கு அவர் அச்சுறுத்தல் விடுத்தார் என்றும் -

அதன் பின் அக்கடைக்கு வந்த பொதுமகன் ஒருவரை வழிமறித்துத் தாக்கினார் என்றும் -

(18ஆம் பக்கம் பார்க்க)

# ஆளும் தரப்பு எம்.பிக்கள் சிலர் பொ.ஐ.முன்னணிக்கு ஆதரவாம்!

## மங்கள சமரவீர தெரிவிப்பு

கொழும்பு,ஒக்.19

ஐக்கிய தேசிய முன்னணியைச் சேர்ந்த பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கு ஆதரவு தர முன்வந்துள்ளனர் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பேச்சாளரான மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் டிசெம்பர் மாதம் 16ஆம் திகதி கொழும்பில் நடத்தப்படவிருக்கும் அரசுக்கு எதிரான மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணியில் அவர்கள் கலந்துகொள்வர் என்றும் - அவர் தெரிவித்திருக்கிறார்.

ஆர்ப்பாட்டத்தின் பின்னர் அந்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவுடன் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் தேசிய முன்னணி ஒன்று உருவாக்கப்படும் என்றும் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் சுமார் பத்து லட்சம் பேர் வரையிலான மக்களை தாங்கள் இணைக்கவுள்ளதாகவும் -

தற்போது உயர்ந்துள்ள வாழ்க்கைச் செலவீனம், பொய்யான சமாதானப் பேச்சுவார்த்தை, இன்னும் வேறு பல விடயங்களையும் பிரதிபலித்துக் காட்டும் வகையில் இந்த ஆர்ப்பாட்டப் பேரணி அமையவுள்ளன என்றும் - அவர் மேலும் கூறினார். (ஐ-3)



அயர்லாந்து சென்ற விடுதலைப் புலிகளின் அரசியல் குழுவினர் நேற்று வன்னி திரும்பினர். கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதானத்தில் வந்திறங்கிய அவர்களை புலிகளின் நீதி, நிர்வாகப் பொறுப்பாளர் பரா வரவேற்று அழைத்துச் செல்கிறார்..

# வருட இறுதிக்குள் பேச்சு ஆரம்பிக்கும்

## பிரதமர் நம்பிக்கை தெரிவிப்பு

கொழும்பு,ஒக்.19

விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கான திகதி, இடம், காலவரையறை என்பன நிர்ணயிக்கப்படவேண்டியுள்ளது. அநேகமாக இந்தப் பேச்சுக்கள் இவ்வருட இறுதிக்குள் மீள ஆரம்பிக்கப்படும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளார். கடந்த வியாழக்கிழமை ஜனாதிபதியைச் சந்தித்துக் கலந்துரையாடிய சமயமே பிரதமர் ரணில் இப்படித் தெரிவித்துள்ளார்.

நேரடிப் பேச்சுக்கான திகதி, இடம், காலவரையறை என்பன தொடர்பான (18ஆம் பக்கம் பார்க்க)

### புலிகள்-முஸ்லிம்கள் நேற்று சந்திப்பு

குரங்குபாஞ்சான் முகாம் பகுதியில் முஸ்லிம்கள் விவசாயம் செய்வது தொடர்பாக விடுதலைப் புலிகளுக்கும் - கிண்ணியா முஸ்லிம் பிரமுகர்களுக்கும் இடையில் நேற்று சந்திப்பு ஒன்று இடம்பெற்றது.

அந்த முகாமைச் சூழவுள்ள 220 முஸ்லிம் விவசாயிகள் தமது விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள விடுதலைப் புலிகள் ஏற்கனவே அனுமதி வழங்கியிருந்தனர்.

இந்த நடவடிக்கையை ஆரம்பிகக தேவையான ஏற்பாடுகள் பற்றி நேற்று நடந்த சந்திப்பில் ஆராயப்பட்டது.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் ஏற்பாட்டில் நடந்த இச் சந்திப்பில், விரைவில் அப்பகுதியில் விவசாய நடவடிக்கையை ஆரம்பிப்பது என முடிவு செய்யப்பட்டது.(ம-3-5)

# அயர்லாந்து சென்ற புலிகள் குழு நேற்றுப் பகல் வன்னி திரும்பியது

## கேணல் கருணா மட்டுநகர் சென்றார்

அயர்லாந்து, டென்மார்க், நோர்வே ஆகிய நாடுகளுக்குச் சென்றிருந்த விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழு நேற்று கிளிநொச்சி திரும்பியது.

இடைக்கால நிர்வாக சபை தொடர்பான வரைவு குறித்து சட்ட வல்லுநர்களுடன் ஆராய்வதற்காக தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர் கடந்த 2ஆம் திகதி அயர்லாந்து சென்றிருந்தனர்.

விடுதலைப் புலிகளின் சட்ட அறிஞர்கள் மற்றும் சர்வதேச சட்ட அறிஞர்கள் ஆகியோருடன் கலந்துரையாடல்களை நடத்தியபின் டென்மார்க், நோர்வே ஆகிய நாடுகளுக்கும் இக்குழுவினர் சென்றிருந்தனர்.

தமது விஜயங்களை முடித்துக் கொண்டு நேற்று முற்பகல் 10.30 மணிக்கு தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர் ஹெலி மூலம் கிளிநொச்சி வந்தடைந்தனர்.

மட்டு. அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி கேணல் கருணா கொழும்பில் இருந்து நேரடியாக மட்டக்களப்புக்குச் சென்றார்.

இறுதியாக்கப்பட்ட வரைவு குறித்து தமிழ்ச்செல்வன் தலைவர் பிரபாகரனுடன் நேற்று கலந்துரையாடவிருந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (ம-3-6-12)

**ஹம்பாந்தோட்டையில் பிரதமர் தலைமையில்**

# ஐக்கிய தேசிய முன்னணியின் பிரசாரப்பணி 24 முதல் ஆரம்பம்

கொழும்பு,ஒக்.19

அடுத்த வருட முற்பகுதியில் இடம்பெறும் என எதிர்பார்க்கப்படும் மாகாண சபைத் தேர்தலுக்கான பிரசார வேலைகளை ஐக்கிய தேசிய முன்னணி எதிர்வரும் 24ஆம் திகதி ஹம்பாந்தோட்டையில் ஆரம்பிக்கும்.

'சமாதானத்தை நோக்கிய பயணம்' என்ற தொனிப் பொருளுடன் ஆரம்பிக்கப்படும் பிரசாரப் பணி மூன்று தினங்கள் அங்கு இடம்பெறவுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், தொகுதி அமைப்பாளர்கள் இந்தப் பிரசாரத்தில் ஈடுபடுவர். (18ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளர்ச்சியை எதிர்கொள்ள முடியாது பொலிவியா அதிபர் பதவி விலகினார்

லாபாஸ்,ஒக்.19

பொலிவியாவில் கடந்த சில வாரங்களாகத் தொடர்ந்த மக்கள் கிளர்ச்சியைத் தாக்குப்பிடிக்க முடியாமல் அதிபர் கொன்சலோ சான் ஜஸ் டி லொஜாடா நேற்றுப் பதவி விலகினார். துணைப் பிரதமர் கர்லோஸ் மெஸா அதிபராகப் பொறுப் பேற்றார்.


லொஜாடா

இயற்கை எரிவாயுவை அமெரிக்காவுக்கும் மெக்ஸிக்கோவுக்கும் ஏற்றுமதி செய்வது உட்பட அதிபர் லொஜாடா அறிமுகப்படுத்திய சுதந்திர வர்த்தகக் கொள்கைகளுக்கு பொலிவிய மக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர். அத்துடன் நாடளாவிய ரீதியில் குறிப்பாகத் தலைநகர் லாபாஸில் பெரும் கிளர்ச்சி வெடித்தது.

இதனை அடக்கமுடியாமல் திணறினார் அதிபர். தொடர்ந்து அதிகரித்து வந்த கிளர்ச்சியில் குறைந்தது 70 பேர்வரை உயிரிழந்தனர்.

கிளர்ச்சியில் ஈடுபட்ட மக்கள் அதிபர் லொஜாடா பதவி விலக வேண்டும் என்று வற்புறுத்தினர். ஆனால், அவர் பதவி விலக மறுத்து வந்தார். இதனால் மக்கள் கிளர்ச்சி விரிவடைந்தது.

இந்நிலையில் தனது ராஜினாமா கடிதத்தை லொஜாடா காங்கிரஸ் மன்றத்தில் சமர்ப்பித்தார். காங்கிரஸின் செயலாளர் அந்த ராஜினாமா கடிதத்தை சபையில் வாசித்தார்.

'தனது ராஜினாமாவால் பொலிவியாவின் பிரச்சினைகள் தீர்ந்து விடுமென்று தான் கருதவில்லை என்றும்-

நாடு எதிர்நோக்கும் சிக்கல்களுக்கு தீர்வு காண்பது எளிதான விடயமல்ல என்றும் -

ராஜினாமா கடிதத்தில் லொஜாடா கேட்டுள்ளார்.

அதிபர், பதவி விலகியதையடுத்து பொலிவியாவில் அமைதி திரும்பத் தொடங்கியுள்ளதாக இறுதியாகக் கிடைத்த தகவல்கள் தெரிவித்தன. (ஒ)

# காஷ்மீர் முதல்வர் வீட்டைத் தாக்கிய இரு தீவிரவாதிகள் சுட்டுக்கொலை!

ஸ்ரீநகர்.ஒக்.19

இந்தியாவின் ஜம்மு காஷ்மீர் மாநில முதல்வர் முப்தி முஹமது சய்யீத்தின் வீட்டைத் தாக்க முயன்ற 2 தீவிரவாதிகள் பாதுகாப்புப் படையினருடன் நடந்த துப்பாக்கிச் சண்டையில் இறந்தனர். இச்சம்பவம் நேற்று நடந்தது.

ஜம்முவில் உள்ள சய்யீத்தின் இல்லத்தின் மீது தீவிரவாதிகள் வெள்ளிக்கிழமை கடும் தாக்குதல் நடத்தினர். பாதுகாப்புப் படையினர் பதில் தாக்குதல் நடத்தியபோது தாக்குப்பிடிக்க முடியாத தீவிரவாதிகள் அருகில் இருந்த கட்டி முடிக்கப்படாத வணிக வளாகத்துக்குள் ஒளித்துக் கொண்டனர்.

அத்தீவிரவாதிகளுடன் பாதுகாப்புப் படையினர் 5 மணிநேரம் துப்பாக்கிச் சண்டை நடத்தினர்.

இதில் அதிகாரி ஒருவர் உட்பட எல்லைப் பாதுகாப்புப் படையினர் 5 பேர் காயமடைந்தனர்.

வணிக வளாகத்தில் இருந்து தப்பிச் செல்ல முயன்ற ஒரு தீவிரவாதியை நேற்றுக் காலை 8 மணி அளவில் பாதுகாப்புப் படையினர் சுட்டுக்கொன்றனர்.

மற்றொரு தீவிரவாதி நேற்று பகல் 10.15 மணி அளவில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

சய்யீத் வீட்டின் மீது தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியபோது இந்தியப்படையினர் இருவர் கொல்லப்பட்டனர். மேலும் 12 பேர் காயமடைந்தனர்.


கொல்லப்பட்ட இரு தீவிரவாதிகளின் சடலங்களுடன் இந்தியப்படையினர்.

# இஸ்ரேலியத் தாக்குதலில் மூன்று பலஸ்தீனியர்கள் பலி!

ஜெருசலேம்,ஒக்.19

காஸாவில் இஸ்ரேலியப் படையினர் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையில் ஹமாஸ் இயக்கத்தின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் உட்பட 3 பலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டனர்.

ராவாப் பகுதியில் இடம்பெற்ற சம்பவத்தில் ஹமாஸ் இயக்கத்தின் உள்ளூர்ப் பொறுப்பாளரான தராக் அபு அல் ஹுசைன்(வயது 25) என்பவரும், மற்றொரு தீவிரவாதியும், அத் தீவிரவாதியின் மைத்துனியுமே கொல்லப்பட்டவர்களாவர்.

இஸ்ரேலியப் படையினர் தற்காலிகமாகத் தங்கப் பயன்படுத்தி வந்த கட்டடம் ஒன்றின் மீது குண்டுத் தாக்குதல் நடத்த தீவிரவாதிகள் தயாராகிக் கொண்டிருந்ததாகவும் - இது குறித்து தகவல் அறிந்த இஸ்ரேலியப் படையினர் தீவிரவாதிகளை இலக்கு வைத்து ஷெல் தாக்குதல் நடத்தியதாகவும் இஸ்ரேலிய இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

இத்தாக்குதல் சம்பவத்தில் மேலும் 10 பலஸ்தீனியர்கள் காயமடைந்து சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ஒ)


காயமடைந்த பலஸ்தீனர் ஒருவரை தூக்கிச் செல்கின்றனர்

உலக அரங்கில்

# காஷ்மீர் பிரதேச மக்களுக்கு சுயநிர்ணய உரிமை அவசியம்

## இஸ்லாமிய நாடுகள் அமைப்பு தீர்மானம்

புத்ரஜயா,ஒக்.19

காஷ்மீர் பிரச்சினை தொடர்பான விவகாரத்தில் பாகிஸ்தானுக்கு ஆதரவான வகையில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது இஸ்லாமிய நாடுகள் அமைப்பு.

மலேஷியாவில் புத்ரஜயா நகரில் நடைபெற்ற இதன் இருநாள் மாநாடு நேற்றுமுன்தினம் நிறைவுபெற்றது. பாகிஸ்தான் அதிபர் பர்வேஷ் முஷாரப்பும் இதில் பங்கேற்றார். ஜம்மு காஷ்மீர் மக்களுக்கு சுய நிர்ணய உரிமை தரப்படவேண்டும் என்று கோரியுள்ள இஸ்லாமிய நாடுகள் அமைப்பு காஷ்மீரில் மனித உரிமைகள் மீறப்படுவதாகவும் இந்தியா மீது புகார் கூறியுள்ளது. இத்தகைய தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளதன மூலம் பாகிஸ்தானின் நிலைக்கு ஆதரவு தெரிவிக்கின்றது இந்த அமைப்பு.

காஷ்மீர் பிரச்சினைக்கு தீர்வு காண இந்தியா மேற்கொண்டு வரும் முயற்சியை இத்தீர்மானம் கவனத்தில் கொள்ளவில்லை. இந்தியாவுடன் இருதரப்பு பேச்சு நடத்துவது உட்பட சாத்தியமுள்ள அனைத்து வழிகளையும் கையாண்டு தீர்வு காணலாம் என பாகிஸ்தான் கூறிவருவது இத்தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஐ.நா. தீர்மானத்தின் அடிப்படையில் ஜம்முகாஷ்மீர் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை வழங்கப்படவேண்டும் என்ற கோரிக்கைக்கு இஸ்லாமிய நாடுகள் அமைப்பு ஆதரவு தெரிவிக்கிறது. காஷ்மீரில் மனித உரிமைகள் மீறப்படுகிறதா என்பதை நேரில் ஆராய சர்வதேச மனித உரிமைகள் அமைப்பின் பிரதிநிதிகளை இந்தியா அனுமதிக்கவேண்டும் என்றும் மாநாட்டில் வலியுறுத்தப்பட்டது.

ஜம்முகாஷ்மீர் மக்களின் விருப்பத்துக்கு உகந்த வகையில் பிரச்சினைக்குச் சுமுகத்தீர்வு காணப்படவேண்டும் என்று தீர்மானம் வலியுறுத்துகிறது. அமைதிகாண பாகிஸ்தான் தெரிவித்த யோசனையை இந்தியா நிராகரித்தது குறித்து கவலை வெளியிட்ட இஸ்லாமிய நாடுகள் அமைப்பு தனது முடிவை இந்தியா மறு பரிசீலனை செய்யவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளது. (ஒ)

# அயோத்தி இராமர் கோயில் விவகாரம்; இந்து பரிஷத் பேரணி முறியடிப்பு!

இந்தியாவில் சர்ச்சைக்குரிய இடத்தில் இராமர் கோயில் கட்ட அயோத்தியில் ஊர்வலம் செல்லமுயன்ற நூற்றுக்கணக்கான ராம பக்தர்கள் கைதாகி விடுதலை செய்யப்பட்டனர்.

சிவராமசேவகர்புரத்தில் ராமர் கோயில் கட்ட உறுதிமொழி எடுக்கும் சங்கல்ப சபை நடைபெறும் இடம் பிற்பகலுக்குப் பிறகும் வெறிச்சோடிக் காணப்பட்டது.

ராமசேவகர்புரத்துக்குள் ராமபக்தர்கள் எவரும் நுழைந்து விடாதபடி பொலீஸார் அரணாக நின்றிருந்தனர். எப்பகுதியிலிருந்தும் இராமசேவகர் புரத்துக்கு நுழைய முடியாமல் தடுத்தனர்.

கல்வீச்சில் ஈடுபட்ட இராம சேவகர்கள் மீது பொலீஸார் தடியடிப் பிரயோகம் செய்தனர். கண்ணீர்ப் புகைக் குண்டுகளையும் வீசினர்.

# ஆந்திர முதல்வரின் மனைவி திருப்பதியில் தாலி தானம்

திருப்பதி வெங்கடாஜலபதிக்கு ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடுவின் மனைவி புவனேஸ்வரி தனது தாலிக் கொடியை காணிக்கையாகச் செலுத்தினார். மேலும் தனது அனைத்து நகைகளையும் அவர் உண்டியலில் இட்டார்.

திருப்பதி ஆலயத்துக்கு செல்லும் வழியில் இடம்பெற்ற கண்ணிவெடித் தாக்குதலில் கணவர் உயிர் பிழைத்ததற்காக அவர் இந்த காணிக்கையைச் செலுத்தினார். சந்திரபாபு நாயுடு, மனைவிக்கு கோயிலில் வைத்து புதிய தாலி கட்டினார்.


திருப்பதி கோயிலில் வெங்கடாஜலபதியை வழிபட்ட ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு.

## சவூதியில் தேர்தல்

மன்னராட்சி நடைபெறும் சவூதியில் முதன் முறையாகத் தேர்தல் நடைபெறவிருக்கிறது. இதற்கான அறிவிப்பும் வெளியிடப்பட்டுள்ளது.

உள்நாட்டு விவகாரங்களில் மக்களின் பங்களிப்பை ஈடுபடுத்தும் நோக்குடனேயே தேர்தல் நடத்த திட்டமிடப்பட்டிருக்கிறது.

1932ஆம் ஆண்டிற்குப் பின் சவூதியில் மன்னர் ஆட்சி நிலவியது. அன்று முதல் இன்று வரை அங்கு தேர்தல் நடைபெறவில்லை. தற்போது அங்கு முதல்முறையாகத் தேர்தல் நடத்த மன்னரும், இளவரசரும் திட்டமிட்டிருக்கின்றனர். இதற்கான அறிவிப்பை அங்கு நடைபெற்ற மனிதஉரிமை மாநாட்டில் வைத்து உள்துறை அமைச்சர் நயீப்பின் அப்துல் அசிஸ் வெளியிட்டார்.

# வெட்டிப் பிரிக்கப்பட்ட இரட்டையர் மயக்க நிலையிலிருந்து மீண்டனர்!

டல்லாஸ்,ஒக்.19

தலைகள் ஒட்டிப் பிறந்து சத்திர சிகிச்சை மூலம் பிரிக்கப்பட்ட எகிப்திய இரட்டையர்கள் மயக்க நிலையிலிருந்து மீண்டுவிட்டதாகவும் -

இரு குழந்தைகளும் தமது அவயவங்களை அசைக்கத் தொடங்கியுள்ளதாகவும் -

மருத்துவர்கள் தெரிவித்தனர்.

எகிப்தைச் சேர்ந்த இரண்டு வயதான அஹமட் மற்றும் மொஹமட் பிறக்கும் போது தலைகள் ஒட்டிப் பிறந்திருந்தன. இக்குழந்தைகள் அமெரிக்காவின் டல்லாஸ் சிறுவர் மருத்துவ மையத்தில் சத்திரசிகிச்சை மூலம் கடந்த ஞாயிற்றுக்கிழமை பிரிக்கப்பட்டனர். சத்திரசிகிச்சையின் பின்னர் தொடர்ந்து மயக்கமான நிலையிலேயே இருந்தனர். தற்போது குழந்தைகள் இரண்டும் குணமடையும் சாத்தியங்கள் தெரியத் தொடங்கியுள்ளதாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

டல்லாஸ் சிறுவர் மருத்துவ மையத்தின் இயக்குநர் டாக்டர் ஜேம்ஸ் தோமஸ் கூறுகையில் -

குழந்தைகள் இரண்டும் அருகே எவராவது பேசுகையில் கண்களைத் திறந்து பார்ப்பதாகவும் -

தமது பெயர்களைக் குறிப்பிட்டு அழைக்கப்படும்போது அழைத்த குரலைத் தேடுவதாகவும் - தெரிவித்தார்.

சுமார் 34 மணித்தியாலங்கள் இடம்பெற்ற சத்திரசிகிச்சையின் பின்னர் அஹமட்டை விட மொஹமட் விரைவாக குணமடைந்து வருவதாகவும் அவர் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| | ரா. | | சனி |
| செவ். | இராசிச் சக்கரம் | | சந். |
| | | | வியா. |
| | | சூ. பு. வெ. கே. | |

# இந்த வார இராசி பலன்

## 19.10.2003 - 25.10.2003

**மாற்றம்:**

**19.10.2003இல் பூசம் கடகராசியில் சந்திரன் நிற்கும். சமாதானப் பேச்சுக்கள் தொடரும். திட்டமிட்ட செயற்பாடுகள் நன்மைதரும். உலகநாடுகள் உன்னிப்பாய்க் கவனித்து சில அழுத்தங்களை இருதரப்பினருக்கும் கொடுத்துக் கொண்டிருக்கும். இந்தியாவில் தீவிரவாதச் செயற்பாடு அதிகரித்தாலும் கடும் நடவடிக்கைகள் தொடரும். மத்திய கிழக்கில் அமெரிக்கா கடுமையாக நடந்து கொள்ளும். அழிவுகள் தொடரும். இந்துசமுத்திரப் பிராந்திய நாடுகளில் காற்றழுத்தத்தால் மழைவீழ்ச்சி அதிகரிக்கும் எனக் கிரகநிலைகள் காட்டுகின்றன.**

### மேடம்

தேடிய தேட்டமெல்லாம் புத்திரரைச் சேர்ந்தால் புண்ணியம் செய்துள்ளீர்கள். கடகடவெனக் கோபம். நல்லபெயர் எடுக்கமுடியாது. காசுவரும். நண்பர்கள் பகைப்பர். பொறுப்பான வேலைகள் வரும். இடமாற்றத்தால் தடுமாற்றம் வரும். சளித்தொல்லை வரும். மருந்துத்துறை, வியாபாரத்துறை, செய்தித்துறையினர் போன்றோர் நன்மைகள் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: திங்கள், புதன், வெள்ளி.*

### இடபம்

கருத்துவேற்றுமை உங்கள் குடும்பத்தில் வரும். எடுத்தெறிந்து பேசுவீர்கள். இடமாற்றம் ஏற்படும். தூரத்துஉறவு முறையினர் வருவர். வியாழனால வீடு மனைச் சிறப்பு, வாகனச்சிறப்புக் கொடுக்கும். வரவுக்கு மீறிய செலவு, அதிகயோசனை பொருளைப்பற்றிக் கொடுக்கும். குருத்தொழில் செய்பவர்கள் சிறப்பு அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: புதன், வெள்ளி.*

### மிதுனம்

எதிர்பாலாருடன் அடிக்கடி வாக்குக்கலகம் ஏற்படும். பொருள் வரவு குறையும். அடிக்கடி மறதியும், வாதவிறைப்பும் கொடுக்கும். தூரத்துச் செய்திகள் மனக்குறையைத் தீர்க்கும். புத்திரர் அல்லது சகோதரர்கள் சிறப்பு அடைவர். பிரயாணங்களைத் தவிர்க்கவும் அல்லது இழப்பு வரும். சந்தைவியாபாரிகள் சிறப்பு அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: புதன், வெள்ளி.*

### கடகம்

எதிர்பார்த்தது நடக்காது. மனக்குழப்பங்கள் கொடுக்கும். பொருள் வரும். தொழில்ஸ்தானத்தில் சில பிரச்சினைகள் வந்து போகும். நண்பர்களால் உதவிகள் கிடைக்கும். ஆலய தரிசனம், அயலவர்கள் உதவி, நல்லவர்கள் வரவு இருக்கும். தூரத்துச் செய்திகள் மனஆறுதலைக் கொடுக்கும். பாதுகாப்புத்துறையினர், அரசியல் துறையினர், இலகியத்துறையினர், கலைத்துறையினர் நன்மை அடைவர்.

*அதிர்ஷ்டநாள்கள்: புதன், வெள்ளி.*

### சிங்கம்

கலகம் வந்து நியாயம் பிறக்கும். இடமாற்றங்கள் நன்மை தரும். புதிய திட்டங்கள் நன்மை கொடுக்கும். முழங்கால் வருத்தங்கள் வரலாம். சகோதரங்களுக்கு நன்மைகள் ஏற்படும். அயலவர்கள் உதவி செய்வார்கள். வாகனச் செலவுகள் அதிகரிக்கும். நண்பர்களின் உதவிகள் நன்மை தரும். வியாபாரிகள், சந்தை வியாபாரிகள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: புதன், வெள்ளி.*

### கன்னி

வீடு கட்டுவதும் திருமணம் செய்வதுவும் அவரவர் வாழ்வில் சிறப்பைக் காட்டும். உங்கள் குடும்பத்திலும் சிறப்புக்கள் வரப் பேச்சுக்கள் நடக்கும். வாக்குக் கலகமும் வர இடமுண்டு. பிரயாணங்களைத் தவிர்க்கவும். புத்திரர்களுக்கு நன்மைகள் காட்டினாலும் வைத்தியச் செலவுகள் அதிகரிக்கும். பொருள் வரவு உண்டு. வாய்வுத் தொல்லை, சளித்தொல்லை என வருத்தும். செய்தித்துறை. கம்பியூட்டர், சங்கீதத்துறை, குருத்துறையினர்களுக்கு மாற்றங்களும் நன்மைகளும் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள்: திங்கள், புதன், வெள்ளி.*

### துலாம்

ஏன் மனக்குழப்பம்? உடல் நிலை தளம்பல் என மனம் சொன்னாலும் தெய்வ வழிபாட்டால் சாந்தி பெறலாம். எதையும் தாங்கி நடக்கவும். பொருள வரவு கொடுக்கும். இடமாற்றங்கள் நன்மை தரும். வாய்வு, சளி, விறைப்பு வந்து போகும். தூரத்துச் செய்திகள் ஆறுதல் தரும். குருத்தொழில், சட்டத்துறை, பாதுகாப்புத்துறையினர் நன்மைகள் அடைவார்கள்.

அதிர்ஷ்டநாள்கள்: திங்கள், புதன், வெள்ளி.

### விருச்சிகம்

அட்டமத்துச் சனி விபத்துக்கள், கலகங்களைக் கொடுக்கும். திடீர்மாறறங்கள் ஏற்படும். பொருள் செலவுகள் அதிகரிக்கும். இடமாற்றங்கள் நன்மை தராது. அயலவர்கள் குறை சொல்லித் திரிவர். தூரத்துச் செய்திகள் மனஆறுதலைத் தரும். வாய்வுத் தொல்லை, நாரிநோ, உடல் களைப்புக் கொடுக்கும். வியாபாரிகள், இரும்புத்துறையினர்கள் நன்மை அடைவர்.

*அதிர்ஷ்டநாள்கள்: திங்கள், புதன், வெள்ளி.*

### தனுசு

புதிய இடவசதிகள் ஏற்படும். நண்பர்கள், பெரியவர்கள் வருகை தருவர். புத்திரர் சிறப்பு அடைவர். திடீர் நன்மைகள் வரும். பிறருக்காக பேச்சு வாங்குவீர்கள். எதிர்பாலாருடன் நிதானமாக இருக்கவும். இடமாற்றங்கள் நன்மை தரும். அயலவர்களின் உதவிகள் கிடைக்கும். குருத்தொழில், சட்டத் தொழில், வியாபாரிகளுக்கு மாற்றங்களும் சிறப்பும் கொடுக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள்: திங்கள், புதன், வெள்ளி.*

### மகரம்

ஓடி ஓடித் தேடினாலும் விதிவழியில் நடப்பதுதான் நடக்கும். முழங்கால் வருத்தங்கள், நாரிநோ, சளித்தொல்லைகள் வரும். தொழில்ஸ்தானத்தில் பொருள்வரவு அதிகரிக்கும். இடமாற்றங்களால் நன்மைகள் ஏற்படும். சொந்தக்காரரால் மனவேதனை வரும். குடும்பத்தில் முறுகல் நிலை வரும் எனக் கிரகங்கள் காட்டுகின்றன. வியாழ பகவானுக்கு அர்ச்சனை செய்யவும்.

*அதிர்ஷ்ட நாள்: திங்கள்.*

### கும்பம்

நேற்று வரை நட்பு. இன்று பகை ஏன் வருகின்றது. கருத்து வேற்றுமைகள் சகஉத்தியோகத்தர்களுடன் ஏற்பட இடம் உண்டு. புதிய நடைமுறைகள் தொழில்ஸ்தானத்தில் ஏற்படும். வாகனச் செலவு அதிகரிக்கும். சகோதரங்களுடன் கருத்துவேற்றுமை வரலாம். இடமாற்றங்களைத் தவிர்க்கவும். குருத்தொழில், சந்தைத்தொழிலில் ஈடுபாடுடையவர்கள் நன்மை அடைவர்.

*அதிர்ஷ்டநாள்: திங்கள்,*

### மீனம்

அதிக உழைப்பு, உடல் களைப்பைக் கொடுக்கும். வயிற்றில் வருத்தம் வாய்வுக் குழப்படி வரும். தூரத்துச் செய்திகள் மனஆறுதலைக் கொடுக்கும். இடமாற்றங்கள் நன்மை தரும். பொருள் வரவு, மனஆறுதலைத் தரும். இனஜனக் கொண்டாட்டங்கள் அதிகரிக்கும். வியாபாரிகள், பிரயாணத்துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்: திங்கள்,*

**மகாதேவா ஜோதிடம்**

# நிமலராஜன் நினைவாக இன்று அஞ்சலிக் கூட்டமே நடைபெறும்

## ஆர்ப்பாட்டம் நடக்காது என பத்திரிகையாளர் சங்கம் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.19

ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் படுகொலை தொடர்பான விசாரணைகளை துரிதமாக்கும்படி கோரி இன்று நடத்தவிருந்த ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டுள்ளது என்று வட-இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம் அறிவித்துள்ளது.

ஆர்ப்பாட்டத்துக்குப் பதிலாக தமது சங்க அலுவலகத்தில் நினைவுக் கூட்டம் ஒன்றை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகவும் சங்கம் தெரிவித்துள்ளது.

அந்த அமைப்பு இது தொடர்பாக விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இன்று எமது சங்கத்தின் செயலாளராக கடமையாற்றிய மயில்வாகனம் நிமலராஜனின் சிரார்த்த தினமாகும். இவர் படுகொலை செய்யப்பட்டு மூன்று ஆண்டுகள் கடந்தும் அவருடைய கொலையின் மர்மம் இன்னும் முழுமையாக துலக்கப்படவில்லை. இது எமக்கு மட்டுமல்ல யாழ்குடாநாட்டில் உள்ள அனைத்து மக்களுடைய மனங்களிலும் நீங்க முடியாத ஆதங்கமாகப் பதிந்துள்ளது.

முன்னைய அரசின் ஆட்சிக் காலத்தில் இவரது வழக்கின் விசாரணைகள் கிடப்பில் போடப்பட்டமை யாரும் அறிந்ததே. இன்று அவருடைய வழக்கில் ஒரு சில முன்னேற்றங்கள் தென்படுகின்றன. ஆனால், இது விடயமாக எடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகளின வேகம் போதாமல் இருப்பது எமக்கு கவலையளிக்கிறது. ஆகவே, கொலை செய்த எதிரிகள் இனம் காணப்பட்டு உடனடியாக விசாரணைகள் துரிதப் படுத்தப்பட்டு அவர்களுக்கு உரிய தண்டனை வழங்கப்படவேண்டுமெனக் கோருகிறோம். தாமதிக்கப்பட்டு வழங்கப்படும் நீதி, நீதி மறுக்கப்படுவதற்கு ஒப்பானதாகும் (Justice delayed is justice denied). எனவே, இதைத் துரிதப்படுத்தக்கோரி, அவருடைய சிரார்த்த தினமான இன்று யாழ். பஸ் நிலையத்தில் மறியல் போராட்டம் ஒன்றை நடத்த முன்னர் ஏற்பாடு செய்திருந்தோம்.

இவ்வேளையில் எமது சங்கத்தை வழிநடத்தும் புத்திஜீவிகளின் ஆலோசனைப்படி இன்றைய ஆர்ப்பாட்டத்தை நிறுத்தி எமது அலுவலகத்தில் அன்னாரை நினைவு கூரும் அஞ்சலிக் கூட்டம் ஒன்றை இன்று காலை 10.00 மணிக்கு நடத்த ஒழுங்கு செய்துள்ளோம். இதில் ஆர்வலர்களைக் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம.

மேலும், அவருடைய படுகொலை வழக்கு சம்பந்தமாக நாங்கள் மேற்கொள்ளும் எந்த நடவடிக்கைகளும் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தாத வண்ணம் அமையவேண்டும் என்பதே எமது ஆலோசகர்களின் விருப்பமாகும். இதற்கமைய எமது ஆர்ப்பாட்டம் திட்டமிட்டபடி இன்று நடைபெறமாட்டாது என்பதை அறிவிக்க விரும்புகிறோம்.

கொடும்பாவி எரித்தலும், புகைப்படம் மூலம் விளம்பரம் தேடுதலும் நிமலராஜனின் வழக்கை துரிதப்படுத்துவதற்கு எவ்வகையிலும் உதவாது. அமரர் நிமலராஜனால் கடுமையாக விமர்சிக்கப்பட்டவர்களும், எச்சரிக்கை செய்யப்பட்டவர்களும் தமது சுயவிளம்பரத்திற்காக அவரை நேசக்கரங்களுடன் கட்டி அணைப்பது வேதனைக்கும், நகைப்பிற்குரியதுமாகும்.

- இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# புனர்வாழ்வுக்கழக நிதியுதவியில் கட்டப்பட்ட முன்பள்ளி திறப்பு

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நிதியுதவியுடன் நாவற்குழி தெற்கு, கைதடியில் அமைக்கப்பட்ட ஸ்ரீ மகா விஸ்ணு முன்பள்ளி கட்டடத் திறப்பு விழா நேற்றுக் காலை 11 மணியளவில் இடம்பெற்றது.

இத்திறப்பு விழாவில் தேசியக் கொடியை தென்மராட்சி கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவாணன் ஏற்றிவைத்தார். முன்பள்ளி நிலையத்தின் பெயர்ப்பலகையை யாழ். மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் செம்மணன் திரை நீக்கம் செய்துவைத்தார். முன்பள்ளிக் கட்டடத்தை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் யாழ். மாவட்டப் பொறுப்பாளர் ஜெயராஜ் திறந்துவைத்தார்.

யாழ் மாவட்ட முன்பள்ளிக் கல்விப் பணிப்பாளர் திருமதி யோகராஜா, 'அம்டா' நிறுவனத்தின் பிரதிநிதி ஹிரோஜினி ஒகாசுகே, கிராம அலுவலர் எஸ்.சபாநாதன் மற்றும் முன்பள்ளி ஆசிரியர்கள், தமிழர் புனர்வாழ்வுக் கழக பிரதேச இணைப்பாளர்கள், பொதுமக்கள் ஆகியோர் இவ்வைபவத்தில் கலந்துகொண்டனர்.

இம்முன்பள்ளியில் கல்வி கற்கும் 27 சிறுவர்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக்கழகம் அன்பளிப்புகளை வழங்கியது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் வழங்கப்பட்ட 70 ஆயிரம் ரூபா நிதியுதவியில் இம்முன்பள்ளிக் கட்டடம் அப்பகுதி மக்களின் பங்களிப்புடன் அமைக்கப்பட்டதாக ஸ்ரீ மகா விஸ்ணு சனசமூக நிலையத்தின் தலைவர் தெரிவித்தார். இந்நிகழ்வில் சிறுவர்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன.

(ஒ-8)



**நாவற்குழி தெற்கில் அமைக்கப்பட்ட ஸ்ரீ மகா விஸ்ணு முன்பள்ளி கட்டடத்தை தமிழர் புனர்வாழ்வுக் கழக யாழ். மாவட்டப் பொறுப்பாளர் ஜெயராஜ் நாடாவை வெட்டி திறந்து வைக்கிறார்.**

(படம் தேவா)




புலம் பெயர்ந்து வாழும் சகோதரர்களே!
எங்கள் குழந்தைகள் உயிர்காக்க
உதவிக் கரம் கொடுங்கள்

கணக்கு இல: 5-21-2022-431-4
(இலங்கை வங்கி, மேற்றரக்கிளை)

அரும்புகள்
சிறுவர் நிதியம்
யாழ். மருத்துவ மாணவர் ஒன்றியம்
021-222-2134
: 0777-678051

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனை பிரதிநிதி தேவை

01.கடையில் இருந்து விற்பனை செய்பவர்

02.வாகனத்தில் சென்று விற்பனை செய்பவர்

மேற்குறிப்பிட்ட இரண்டு பதவி வெற்றிடங்களுக்கும் முன்னனுபவம் வாய்ந்த விற்பனை பிரதிநிதி தேவை. ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற்றவராக இருத்தல் வேண்டும். உங்கள் சுயவிவரங்கள் அனைத்தும் உங்களின் சொந்தக் கையெழுத்தில் அமைந்திருத்தல் வேண்டும். உறவினர் அல்லாத தொழில் அதிபரின் சிபாரிசு கடிதத்துடன் கீழ்க்காணும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

**விளம்பர இல: 2078,**

(26-11-15) **C/o உதயன்.** (C/30896)


## தளபாடங்கள் கையளிப்பு

தென்மராட்சி,ஒக்.19

பளை வேம்பொடுகேணி சீ.சீ.த.க பாடசாலை ஆரம்பப் பிரிவுக்கான தள பாடங்கள் தேசிய கிறிஸ்தவ ஒன்றி யத்தினால் வழங்கப்படவுள்ளன.

வண.பிதா நேசகுமார் அடிகள் கடந்த வியாழக்கிழமை இந்த தள பாடங்களை பாடசாலை அதிபர் சி.இராமலிங்கத்திடம் கையளித்தார்.

(ஓ-117)


# கம்ப்யூட்டர் உலகம்

இலங்கையின் முழுமையான தமிழ் கணனி மாத சஞ்சிகை

வரும் இதழிலிருந்து புதிய தொடர்கள் ஆரம்பம்

★ கணனி அறிமுகம்(புதியவர்களுக்கானது) ★ MS Office ★ Computer Programming ★ HTML (எச்ரீஎம்எல்)
★ Virus(வைரஸ்) ★ இணையம்(Internet) ★ Page Maker(பேச் மேக்கர்) ★ Flash ★ ASP(ஏஎஸ்பீ) ★ Database

வரும் இதழின் சிறப்புக் கட்டுரை : OCR

இன்னும் ஏராளமான கட்டுரைகள், துணுக்குகள், போட்டிகள், கேள்வி பதில்கள்.
இன்றே சந்தாதாரராகுங்கள் : தனி இதழ் ரூபா 30/= வருட சந்தா ரூபா 300/= மட்டும்.

**கம்ப்யூட்டர் உலகம்**
மாத சஞ்சிகையின் சிறப்பு வெளியீடு

முழுமையான கணனி வழிகாட்டி

COMPLETE COMPUTER GUIDE

**நூற்றுக்கு மேற்பட்ட கட்டுரைகள், துணுக்குகள் மற்றும் கேள்வி பதில்கள்**

ஒவ்வொரு வீட்டிலும் இருக்கவேண்டிய கணனி புத்தகம்

**300 பக்கங்கள்** ரூபா 250/=

சந்தா படிவம்

❑ 12 மாத கம்ப்யூட்டர் உலகம் சஞ்சிகை ரூ. 300/=

❑ முழுமையான கணனி வழிகாட்டி ரூ. 250/=

பெயர் : ........................................

முகவரி : ........................................

காசுக்கட்டளையை "COMPUTER ULAGAM" என்ற பெயருக்கு 'DEHIWALA' தபாலகத்தில் மாற்றத்தக்க தாய் எடுத்து அனுப்பவேண்டிய முகவரி:

**COMPUTER ULAGAM,**
22-1/3, Galle Road, Dehiwala.

(C/30893) (25-11-15)


# மூன்றாம் ஆண்டு நினைவு



செய்திக்காய் 05 - 06 - 1961

செய்தியாய் 19 - 10 - 2000

எழுத்து, பேச்சு, ஊடகம்
ஆகியவற்றின் விடுதலை உரிமைக்காக உயிர் பறிக்கப்பட்ட
உண்மையாளன்

## மயில்வாகனம் நிமலராஜன்

அரசியல் வாதி யோடும்
ஆன்மிகத் தலைவரோடும்
துறைசார் சான்றோரோடும் ~ நீ
தொடர்ந்து பணிபுரிந்தாய்!


பத்திரிகைத் தொழிலில் ஒரு
முத்திரை பதித்திட்டாய்!
எட்டப்பனின் மைந்தனின் ~ பல
குட்டுடைத்தாய் பல கோணத்தில்!

நெஞ்சுரத்தின் துணையோடு ~ உயிர்
துச்சமென மதித்தவன் நீ
செய்தொழிலின் மாண்புயர்த்த
செய்திக்கே உயிர்கொடுத்தாய்!
உனது குரல் ஓங்கி ஒலிக்கட்டும்!

உனது நினைவுகளையே சுவாசிக்கும்:
- குடும்பத்தினர்.

(சி-30882) (25-15-11)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கலாவிநோதன், வில்லிசைப் புலவர், கலாபூஷணம், சர்வதேசக் கலைஞர்

### திரு. க.நா.கணபதிப்பிள்ளை J.P. (சின்னமணி)

அவர்கள் இன்று (19.10.2003) ஞாயிற்றுக்கிழமை வவுனியாவில் நடைபெறும் வடகிழக்கு மாகாண கல்வி அமைச்சின் இலக்கியப் பெருவிழாவில் ஆளுநர் விருது பெறுவதைப் பாராட்டி வாழ்த்துகின்றோம். வாழ்க பல்லாண்டு!

க. நா. கலைச்செல்வன் குடும்பம் கனடா, க. வி. கலைரூபன் குடும்பம் கனடா,
எஸ். பரமேஸ்வரன் குடும்பம் கனடா, ந. புவனேந்திரன் குடும்பம் நீர்வேலி,
வி. கேதீஸ்வரன் குடும்பம் ஜேர்மனி, க. பாலமுரளி குடும்பம் கனடா.

(25-11-15) (23812)

உ
சிவமயம்
"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"



# சங்கானைக் கல்விக் கோட்டம்

## சைவத் திருமுறை விழாவும் சைவநெறித் தொண்டு செயல் நிகழ்ச்சி பரிசளிப்பு விழாவும்

இடம: யா/மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம் மூளாய், சுழிபுரம்.

காலம்: சுபானு வருஷ ஐப்பசிமாதம் 2ஆம் நாள் 19.10.2003 ஞாயிறு காலை 8.00 மணி

தலைவர்: திரு. சி.செல்லையா அவர்கள்
(கோட்டக்கல்விப் பணிப்பாளர், சங்கானைக் கல்விக் கோட்டம்.)

### நிகழ்ச்சி நிரல்

※ காலை 8.00 மணி
மூளாய் வதிரன்புலோ சித்திவிநாயகர் தேவஸ்தானத்தில் பூஜையும் வழிபாடும்.

※ காலை 8.30 மணி
மூளாய் வதிரன்புலோ சித்திவிநாயகர் தேவஸ்தானத்தில் இருந்து மூளாய் வதிரன்புலோ முத்துக்குமாரசுவாமி ஆலய வழிபாட்டுடன் சுவடிகளும் நாயன்மார்களின் திருவுருவப் படங்களும் பாடசாலை விழா மண்டபத்திற்கு எடுத்து வருதல்.

※ காலை 9.30 மணி
மங்கள விளக்கேற்றல்
இறைவணக்கம்
வரவேற்பு நடனம்: யாழ். மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம்.

※ வரவேற்புரை:- திரு.ந.சபாரத்தினசிங்கி
(பதில் அதிபர். யா/வட்டு. மத்திய கல்லூரி)

※ அருளாசிகள்: ஸ்ரீமத் ராஜ்குமார்சுவாமிகள்
(ஸ்ரீகாயத்திரி காமகோடி பீடாதிபதி)
திரு. தி.பொன்னம்பலவாணர்
(சைவசித்தாந்தபண்டிதர் அர்ச்சகர். பொன்னாலை அருள்மிகு விநாயகர் தேவஸ்தானம்)

※ தலைமையுரை: திரு.சி.செல்லையா அவர்கள்
(கோட்டக்கல்விப் பணிப்பாளர். கல்விக்கோட்டம். சங்கானை)

※ சிறப்பு மலர் வெளியீடும் ஆசியுரையும்:
சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் அவர்கள்
(உதவிப் பணிப்பாளர். இந்துசமய கலாசார அலுவல்கள் அமைச்சு. யாழ்ப்பாணம்.)

※ வாழ்த்துரைகள்:
திருமதி றெஜீனா இருதயநாதன் அவர்கள்
(கல்விப் பணிப்பாளர். வலிகாமம் கல்வி வலயம்)
திரு. ப.விக்னேஸ்வரன் அவர்கள்
(கல்விப் பணிப்பாளர். யாழ். கல்வி வலயம்)
செல்வி ரஜனி கந்தசாமி அவர்கள்
(கலாசார உத்தியோகத்தர். வலி. மேற்கு பிரதேச செயலாளர். சங்கானை)

※ சிறப்புரை: திரு.சி.சரவணபவன் அவர்கள் (சிற்பி)
(ஓய்வுபெற்ற அதிபர். யா/வண்ணை வைத்தீஸ்வராக் கல்லூரி)

※ மாணவர் நிகழ்ச்சிகள்
※ பண்ணிசை
※ புராணபடனம்
※ கதாப்பிரசங்கம்

※ பரிசில்வழங்கல்

※ நன்றியுரை: திருமதி ர.சோதிலிங்கம் அவர்கள
(அதிபர். யா/ மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம்)

குறிப்பு: நிகழ்ச்சிகள் யாவும் புதிய நேரப்படி நடைபெறும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சங்கானைக் கோட்டக்கல்வி அலுவலகம். வட்டு. இந்துக்கல்லூரி. சித்தன்கேணி.
சைவசமய செயற்பாட்டுக்குழு.

விழா சிறப்புற வாழ்த்துவோர்:
றெமிங்ரன் கல்வி வளர் சோலை, மூளாய்.
மூளாய் சித்தி விநாயகர் ஸ்ரோர்ஸ், மூளாய்.
மூளாய் கணேசா ஹாட்வெயார்ஸ், மூளாய்.

(23816) (25-11-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## எதிரணியின் தப்புக் கணக்கு

"அரசின் போக்கை எதிர்த்து இந்த மாதம் முதல் மாவட்டம் தோறும் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்படும். இத்தொடரின் உச்சமாக டிசெம்பர் 16 ஆம் திகதி காலிமுகத்திடலில் மாபெரும் ஆர்ப்பாட்டம் நடத்தப்படும். அதில் கலந்துகொள்ளும் மக்கள் கூட்டத்தைப் பார்த்து ஜனாதிபதி குமாரதுங்கவுக்கு நிறைவேற்று அதிகாரம் மட்டுமல்ல மக்கள் ஆதரவும் உள்ளது என்பதை அரசு உணர்ந்துகொள்ளும்."

- இவ்வாறு பெருமிதத்தோடு அறிவித்திருக்கிறா பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சரத் அமுனுகம.

சமாதான முயற்சிகளை முன்னெடுத்து வரும் பிரதமர் ரணிலின் அரசை வீட்டுக்கு அனுப்புவது என்பதில் விடாப்பிடியாக கூடிநிற்கும் எதிரணியினர் அதற்காகப் பெரும் மக்கள் சக்தியைத் திரட்டுவதில மும்முரமாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர். அரசுக்கு அரசியல் ரீதியாக நெருக்கடி கொடுப்பதற காக மக்கள் எதிர்ப்பு அலை ஒன்றைத் தோற்றுவிப்பதற்கான ஆயுதமாக இனவாதத்தைக் கிளப்பும் போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் எதிர்ப்பு இயக்கங்களை திட்டமிட்டு பயன்படுத்த எதிர்க்கட்சிகள் திட்டம் தீட்டியிருக்கின்றன. அரச சேவைகளைச் சீர்குலைக்கின்ற வேலைநிறுத்தப் போராட்டங்களை முன்னெடுப்பதும் இத்திட்டத்தில் அடங்கும்.

இவை பற்றிய அறிவிப்புக்களை எதிர்க்கட்சித் தலைவர்கள் அண்மைக்காலமாக வெளியிட்டு வருகின்றனர்.


உண்மையில் அரசின் போக்குக்கு எதிராக மக்களைத் திரட்டி ஜனாதிபதிக்குள்ள ஆதரவை நிருபிப்பது என்பது தூண்டுதல் எதுவுமின்றி அமைதி வழியில் நிறைவேற்றப்பட்டால் அது ஏற்றுக் கொள்ளக் கூடியதுதான். ஆனால், அரசின் போக்கு என்று எதிரணிகூறும் காரணங்களும் அதற்கு எதிராக மக்கள் சக்தியைத் திரட்டுவதற்குரிய ஆயுதமாக இனவாதத்தை இன்னும் அது நம்பி இருப்பதும்தான் வேடிக்கையாக இருக்கின்றது.

விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தி - யுத்தத்தை நிறுத்தி - இனப்பிரச்சினைக்கு சமாதான வழியில் தீர்வுகாணப்படும் என்று வாக்குறுதி அளித்து அதற்கு மக்களின் அங்கீகாரத்தைப் பெற்று ஆட்சிக்கு வந்தவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க. அது மட்டுமன்றி தான் ஆட்சியமைத்தால் வடக்கு - கிழக்கின் நிர்வாகத்தை ஒரு குறிப்பிட்ட காலப் பகுதிக்கு விடுதலைப் புலிகளிடம் கையளிப்பேன் என்றும் தேர்தலுக்கு முன்னரே அவர் தெரிவித்திருந்தார். அதன்படி விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை வெற்றிகரமாக முன்னெடுத்தார். அதன் ஒரு கட்டமாக இடைக்கால நிர்வாகத்தை விடுதலைப் புலிகளிடம் வழங்குவது பற்றி அவரது அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. இந்தக் கட்டத்தில்தான் தேர்தலில் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முயலும் ரணிலின் அரசை நேர்வழியில் பதவி கவிழ்க்கத் திராணியற்று இனவாதப் பிரசாரங்கள் மூலம் மக்களைத் தூண்டி - வீதிக்கு இழுத்து - குறுக்கு வழியில் அதைச் சாதிக்க முயல்கின்றன எதிரணிக் கட்சிகள்.

மக்களின் விருப்பத்துக்கமைய தேர்தலில் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றவேண்டிய கடப்பாடு அரசுக்கு உள்ளது. மக்களுக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்ற விடாமல் தடுப்பதற்காக மக்களைத் திரட்ட எண்ணும் எதிர்க்கட்சிகளின் எண்ணம் மக்களின் விருப்புக்கு மாறானதாகவே இருக்கும்.

இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு விவகாரம் ஒரு தீர்க்கமான கட்டத்தை நெருங்கும் வேளை நாட்டில் சமாதான நிலையைக் குழப்பி, வன்முறை ஆர்ப்பாட்டங்களையும், இனக்குரோதத்தையும் உருவாக்கி, மக்கள் கொந்தளிப்பை ஏற்படுத்தி அதன்மூலம் ஜனாதிபதியின் ஆதரவை வெளிக்காட்டப் போகின்றது எதிரணி. ஆனாலும், சமாதான முயற்சிகளுக்கு எதிரான இந்த நடவடிக்கைக்கு தென்னிலங்கை மக்கள் எடுபடுவார்களா என்பது கேள்வியே. எதிரணி போடும் தப்புக்கணக்கு புரியாமல் இனவாத வலையில் அந்த மக்கள் சிக்குவார்களாக இருந்தால் அது முழு நாட்டுக்குமே பேரழிவைத்தான் முடிவாகத்தரும்.

## காலத்தின் பதிவு



விழுந்து விடவில்லை நம்பிக்கை... படம்: பிரேம்

### முட்கம்பி வேலிக்குள் கடற்றொழில் செய்யும் நிலை

# நாவற்குழி மீனவரின் நெருக்கடிகள் குறித்து சங்கத் தலைவர் விசனம்!

யாழ்ப்பாணம்,ஒக்.19

நாவற்குழி தெற்குப் பகுதி மீனவர்கள் கடற்றொழிலில் ஈடுபடுவதில் பலத்த நெருக்கடிகளை எதிர்நோக்கி வருவதாக நாவற்குழி தெற்கு மகாவிஷ்னு கடற்றொழிலாளர் சங்கத்தின் தலைவர் க.துரைநாதன் தெரிவித்துள்ளார்.

கரையிலிருந்து 4கிலோ மீற்றர் தூரத்திற்குட்பட்ட கடற்பரப்பிலேயே தாம் மீன்பிடிக்க அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் -

அந்த எல்லையைத் தாண்டிச் செல்ல முடியாதவாறு படையினர் கடலில் கம்பி வேலி அமைத்துள்ளனர் எனவும் - அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது:-

ஏனைய இடங்களைச் சேர்ந்த பெரும்பாலான மீனவர்கள் எல்லைக்கு அப்பால் பரந்த கடற்பரப்பில் கடற்றொழிலில் ஈடுபட்டு வருவதை நாம் தினமும் அவதானிக்கின்றோம். இவர்களுக்கு இராணுவம் எதுவித கட்டுப்பாடுகளையும் விதிக்கவில்லை. ஆனால், எமது நிலைமை அப்படியல்ல. கம்பி வேலி அமைக்கப்பட்டு கரையிலிருந்து 4கிலோ மீற்றர் தூரம் வரையிலான கடற்பரப்புக்குள்ளேயே மிக நீண்டகாலமாக தொழில்செய்து வருகின்றோம். எல்லையைத் தாண்டிச் சென்று தொழிலில் ஈடுபடுவதற்கு படைத்தரப்பு அனுமதி மறுத்துவருகின்றது. இதனால், எமது மீனவக் குடும்பங்கள் பாரிய பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்கின்றன.

இப்பிரச்சினை தொடர்பாக நாம் இப்பகுதி இராணுவ அதிகாரிகளுடன் பலமுறை பேச்சு நடத்தியிருந்தோம். எனினும், எதுவித பயனும் கிட்டவில்லை. அரச அதிபரிடம் இது தொடர்பாக நேரடியாகச் சென்று முறையிட்டதுடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் மகஜர் ஒன்றை அனுப்பியிருந்தோம். அவர் எமக்கு சாதகமான பதிலொன்றைத் தருவதாகக் கடிதம் அனுப்பியிருந்தார். எனினும், இதுவரை எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. இதனால், இப்பகுதியில் வசிக்கும் 170 இற்கும் மேற்பட்ட மீனவக் குடும்பங்கள் கஷ்ரங்களை எதிர்நோக்கியுள்ளன - என்றார் அவர். (ஒ-8)

## திருமலையில் 'பொங்கு தமிழ்'

தமிழ் மக்கள் தமது அபிலாஷைகளை சர்வதேச சமூகத்திற்கும், இலங்கை அரசுக்கும் எடுத்துரைக்கும் எழுச்சி நிகழ்வான 'பொங்கு தமிழ்' நிகழ்வு திருகோணமலையில் நடைபெறவுள்ளதாக இந்த நிகழ்வுக்கான ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

எதிர்வரும் ஜனவரி மாதமளவில் இந்தப் 'பொங்கு தமிழ்' எழுச்சி நிகழ்வு திருகோணமலையில் நடத்தப்படுமென தெரிவிக்கப்படுகிறது. ஏற்கனவே யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் 'எமது நிலம் எமக்கு வேண்டும்' என்ற உரிமைக் கோஷத்துடன் 'பொங்கு தமிழ்' நிகழ்வுகள் இடம் பெற்றிருந்தன.

இந்த மாவட்டங்களில் மக்களின் இடங்களில் பெரும்பாலானவை படையினராலேயே கையகப்படுத்தப்பட்டுள்ளன. ஆனால், திருகோணமலை மாவட்டத்தில் படையினரால் மட்டுமன்றி, அரசின ஆதரவுடன் சிங்களக் குடியேற்றங்கள் மூலமும் தமிழர் தாயகப் பிரதேசம் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. ஆகவே, திருகோணமலையில் இடம்பெற உள்ள 'பொங்கு தமிழ் நிகழ்வு அதிக அர்த்தபூர்வமானதாக அமையும். இவ்வாறு 'பொங்கு தமிழ்' ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்தனர்.(ஒ-8)

### நாளை

ஐப்பசி 03
திங்கட்கிழமை
(20.10.2003)
திதி : தசமி
பின்னிரவு 2.34 வரை.
நட்சத்திரம் : ஆயிலியம்
முன்னிரவு: 9.26 வரை.
சுபநேரம்: 12.02-1.32
ராகுகாலம்: 7.32-9.02
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

விவாதத்தில் கிடைக்கும் வெற்றி நிரந்தரமல்ல. செயலில் கிடைக்கும் வெற்றியே உறுதியானது.

## மழைகாலத்தில் அக்கறையுடன் சுகாதாரம் பேண அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,ஒக்.19

தற்போது மழைகாலம் ஆரம்பித்துள்ளதால் சுகாதாரத்தினை அதிக அக்கறை எடுத்து கடைப்பிடிக்குமாறு பொதுமக்களை யாழ். மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் மரியதாசன் கேட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்ததாவது:-

மழைகாலம் ஆரம்பமாகியுள்ளது. இதனால் சுகாதார சீர்கேடுக்கான வாய்ப்புக்கள் அதிகரித்து பலரும் நோய்வாய்ப்பட நேரிடுகின்றது. யாழ். குடாநாட்டில் தற்போது வயிற்றோட்டம், நெருப்புக்காய்ச்சல், செங்கமாரி போன்ற நோய்கள் பரவிவருவதாக முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இந்நோய்கள் பரவுவதற்கு முக்கிய காரணம் சுகாதாரச் சீர்கேடேயாகும். இதனை மக்கள் உணர்ந்ததாகத் தெரியவில்லை. வீடுகளில் வெட்டப்படும் மரங்களின் கழிவுகள், வீட்டுக்கழிவுகள் போன்றவற்றை வீதியோரங்களில் குவித்து வைக்கின்றனர். இவை மாநகராட்சியால் அகற்றப்பட்டாலும் கூட சில சந்தர்ப்பங்களில் இக்கழிவுகள் கேடுவிளைவிக்கின்றன. அத்துடன் நகரப் பகுதியின் வீதி ஓரங்களில் பழ வியாபாரிகளினால் வீசப்படும் கழிவுகளும் சுகாதாரச் சீர்கேட்டிற்கு காரணமாகின்றன. இதே சமயம் வீதியோரங்களில் வைத்து விற்பனை செய்யப்படும் உணவுப் பொருள்கள், வாகனப் புகை மற்றும் புழுதி காரணமாக அசுத்தமடைகின்றன. அவற்றை சுத்திகரிக்காது உண்பதால் நோய்கள் ஏற்படுகின்றன.

இவற்றினைக் கருத்திற்கொண்டு மக்கள் அதிகளவில் சுகாதாரத்தினைப் பேணவேண்டும் - என்றார் அவர். (ஒ-6)

## ஓர் அன்பான வேண்டுகோள்

நான் ஒரு பாடசாலை மாணவி. எனது நண்பி ஆண்டு 7 படிக்கின்றார். ஆண்டு ஐந்து புலமைப் பரீட்சையில் சித்தியடைந்திருந்தாலும் வறுமையினால் தனது கல்வியைத் தொடரமுடியாது மிகவும் கஷ்டப்படுகின்றார். நான் கடந்த சில மாதங்களாக உதவி செய்து வருகின்றேன். தொடர்ந்தும் இவரின் கல்வி மேம்பாட்டிற்கு உதவும்படி மாவட்ட சிறுவர் பாதுகாப்பு குழுவினரை வேண்டிக் கொள்கின்றேன்.

இது ஒரு நலன்விரும்பி மாணவியின் ஆதங்கம். உங்கள் பிரதேசத்திலும் பலர் கல்வியைத் தொடர முடியாமலும் சிறுவர் துஷ்பிரயோகங்களுக்குட்பட்டும் வாழலாம். அப்படியாயின் எமக்கு அறிவியுங்கள்.

உங்கள் தொடர்புகளுக்கான எங்கள் முகவரி:
மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு,
அறை எண் - 30,
யாழ். போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

அனுசரணை: சிறுவர் பாதுகாப்பு இலங்கை
(சி-30877) (24-18-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## உடன் விற்பனைக்குண்டு

அரியாலை, திருமகள் வீதியில் 2¼ பரப்புக் காணியுடன் வீடும் விற்பனைக்குண்டு. தொடர்பு: தி.சிவகுமார், இல.160 (184), நாவலர் வீதி, யாழ்ப்பாணம்,
தொ.பேசி: 077 6011256.(23782)

## விற்பனைக்கு

Sony (பாவித்த) 20"- 21" T.V கள் (Japan) விற்பனைக்குண்டு. 2060 - 11500/-, 2062 - 12000/-, 2182 - 14000/-, 2192 - 17500/-. தொடர்பு: R.மகேஸ்வரன், K.K.S. வீதி (சிறுவர் பூங்கா முன்பாக), மல்லாகம்.
(23811)

## வீடு விற்பனைக்கு

வட்டுக்கோட்டை, அடைக்கலந்தோட்டம் கந்தசாமி கோயில் வீதியில் அமைந்துள்ள 6 பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: சோ.நடராஜ ஐயர், C/o சோ.பாலகிருஸ்ண ஐயர், ஆயாக்கடவை, புன்னாலைக்கட்டுவன் அல்லது திரு.யசோதரசர்மா அடைக்கலந்தோட்டம், வட்டுக்கோட்டை.
(23778)

கோப்பாய் வடக்கு, பூதர்மடத்தடியில் பருத்தித்துறை வீதியில் சகல வசதிகளையும் கொண்ட வீடு, வளவு விற்பனைக்குண்டு. தொடர்பு: K.கனகசபாபதி, 92, பழம் றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். தொ.பே. 222 6734.
(23794)

கே.கே.எஸ். வீதி, உப்புமடப் பிள்ளையார் கோயிலுக்கு அருகில், ஸ்ரேசன் றோட், கோண்டாவில் மேற்கில் சகல வசதிகளுடனும் வீடு, 5 பரப்புக் காணியுடன் விற்பனைக்கு உண்டு (வீடு, காணி பிரித்தும் கொடுக்கப்படும்). தொடர்பு: 071 234 7564
(23769)

அச்சுவேலி தெற்கில், சிவசக்தி கோயிலுக்கு அண்மையில் காலியாகவுள்ள வீடு, வளவு உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: அச்சுவேலி தெற்கில் குமரையா நித்தியானந்தன், கொழும்பில் நடராசா T.P.: 01 2592381 (சி-30821)

## காணி விற்பனைக்கு

கல்வியங்காட்டில், புதிய செம்மணி வீதியில் (பருத்தித்துறை வீதியில் இருந்து 500யார் தூரத்தில்) 4 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. 1 பரப்பு - 1 லட்சம். பேசித் தீர்க்கலாம்: தொடர்பு: கொழும்பு, T.P.: 2679873.
(23804)

## கணனி வகுப்புகள்

Photo Shop, M.S. Office, Hard Ware With Net Working வகுப்புகள் நடைபெறுகின்றன. கம்பியூட்டர் றிப்பேயர் செய்தும் கொடுக்கப்படும். தொடர்புகளுக்கும் உடனடித் திருத்த வேலைகளுக்குமுரிய தொ. இல.: 0777- 666795.
(23809)

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

சுத்தமான Pedigreed Dobermann Pincher ஆண் நாய்க்குட்டியும், Great Dane நாய்க்குட்டிகளும் குறைந்த விலையில் விற்பனைக்கு உண்டு. க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (23774)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் விற்பனைக்குண்டு. 'விலை ரூபா 130. தொடர்பு: ப.றஞ்சன், கலைவாணி ஒழுங்கை, பொற்பதி றோட், கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.(23706)

தரமான Broiler இறைச்சிக் கோழிகள் விற்பனைக்குண்டு. ஒரு கிலோ 130/-, சுத்தம் செய்யப்பட்டது ஒரு கிலோ 220/-. தினமும் சுத்தம் செய்து வேண்டிய அளவுகளில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: திரு. சிவா, இராமலிங்கம் வீதி, முடமாவடி, திருநெல்வேலி கிழக்கு. (23777)

Prima, Broiler மற்றும் இறைச்சிக்கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம்செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம் (Electronic நிறுவை). தொடர்பு: நல்லூர் வீடியோ சென்ரர் வளவு, 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (23538)

## வீடு வாடகைக்கு தேவை

அரசாங்க உத்தியோகம் பார்க்கும் 3 பேர் கொண்ட சிறு குடும்பத்திற்கு (Attached Toilet & Bathroom) உள்ள சிறு வீடு யாழ். / மாநகரசபை எல்லைக்குட்பட வாடகைக்குத் தேவை. தொடர்பு: விள. இல. 2055, மே/பா உதயன்.(23745)

## மணமகன் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, செவ்வாய்க் குற்றமற்ற, கிரகபாவம் 50 கொண்ட, 28 வயது நிரம்பிய பட்டதாரிப் பெண்ணுக்கும், 30 வயது நிரம்பிய A/L படித்த, செவ்வாய்க் குற்றமற்ற, கிரகபாவம் 18 கொண்ட பெண்ணுக்கும் மணமகன் உள்நாட்டில் / வெளிநாட்டில் தேவை. தொடர்பு: வி.இல.2073, மே/பா உதயன். (23692)

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1974 இல் பிறந்த, அனுஷம், செவ்வாய் 7 (கர்க்கடகம்), அழகிய, ஆசிரிய மணமகளுக்கு கௌரவமான குடும்பத்தில் உத்தியோக மணமகன் தேவை. சீதனம் உண்டு. மணமக்கள் தேர்வுக்கு தொடர்பு கொள்ளுங்கள்: துரை விமலா, திருமணசேவை, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (23712)

யாழ். இந்து கௌவர குடும்பத்தைச் சேர்ந்த, 1969 ஆம் ஆண்டு, அனுசம் நட்சத்திர, சைவபோசன மணமகளுக்கு தகுந்த மணமகன் தேவை. சீதனம் உண்டு. தொடர்பு: விள.இல. 2075, மே/பா உதயன்.
(23737)

## வீடு வாடகைக்கு உண்டு

ஓட்டுமடம் வீதி, யாழ்ப்பாணத்தில் சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. 5 அங்கத்தவர்கள் கொண்ட குடும்பத்திற்கு ஏற்றது. தொடர்பு:- திரு.பொ.பிறேம்குமார் (சமாதான நீதிவான்), 53, ஓட்டுமடம் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 222 - 3582. (23803)

## தவறிவிட்டது

யோசப் பிரான்சிஸ் என்பவரின் தேசிய அ.அ., விசேட அ.அ. என்பன 10.10.2003 அன்று சாவகச்சேரியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 16, மடம் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (23792)

## திருமண சேவை

1963, பரணி, பாவம் 20, U.K. மணமகனுக்கு அழகிய, மெல்லிய மணப்பெண் தேவை. உடன் அழைத்துச் செல்வார். திருமண சேவைகளுக்கு தொடர்புகொள்க: துரை விமலா, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (23805)

## ஆறாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்
19 - 11 - 1930



மறைவு
24 - 10 - 1997

### அமரர் கார்த்திகேசு இரத்தினம் (சபா)

திதி: அபரபக்க நவமி (19.10.2003)

*ஆண்டுகள் ஆறு சென்றாலும் – எம்*
*ஆழ் துயரம் மாறவில்லை!*
*கண்ணீர் பெருகுது அப்பா – எம்*
*கவலைகள் வாட்டுதப்பா!*
*அம்மாவும், பிள்ளைகளும், பேரப்பிள்ளைகளும்,*
*அழுது புலம்ப எங்கே அப்பா சென்றீர்கள்?*
*எங்களை அநாதைகளாய் தவிக்க*
*விட்டு விட்டு எங்கே சென்றீர்கள் அப்பா?*

"மணிவாசம்"
*நுணாவில் கிழக்கு,*
*கல்வயல்,*
*சாவகச்சேரி.*

உங்கள் நினைவுடன் வாழும்:
மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், மருமக்கள், சகோதரன்.
(23566) (25-24-18-19)




ஹேமாஸ் கூட்டு நிறுவனமானது அரைநுற்றாண்டு காலத்திற்கு மேலான வியாபார அனுபவத்துடன் கூடிய இலங்கையின் முன்னணி வியாபார கூட்டமைப்புகளுள் ஒன்றாகும். ஹேமாஸ் மருந்தாக்கல் (Pte) லிமிடட் ஆனது இந்த கூட்டு நிறுவனத்தில் அதி விரைவுடன் வளர்ச்சி பெற்றுவருகின்ற வியாபார அமைப்பாக இருப்பதுடன் இலங்கையில் மிகப் பெரிய அளவில் மருந்தாக்கட் பொருட்களின் இறக்குமதியாளராகவும், உலகிலுள்ள 30ற்கு மேற்பட்ட முன்னணி சுகநல நிறுவனங்களை பிரதிநிதித்துவப் படுத்துவதாகவும் இருக்கின்றது. எமது வியாபாரமானது மருந்தாக்கட் பொருட்கள், சத்திரசிகிச்சைப் பொருட்கள், நோய்க்குணங்களை கண்டுபிடிக்கும் பொருட்கள் மற்றும் விலங்கு வைத்திய உற்பத்திப் பொருட்கள் என்பவற்றை உள்ளடக்குகிறது.

எமது வியாபாரத்தின் துரித விரிவாக்கலுக்குப் பொருந்தும் வகையில்சுயமான செயல் நோக்கமும், விற்பனை மற்றும் சந்தைப் படுத்தலை ஒரு தொழிற்துறையாகக் கொள்ள ஆர்வமிக்க ஒருவரை வேலையில் சேர்த்துக் கொள்ள நாம் எண்ணியுள்ளோம்.

## பிரதேச விற்பனை இணைப்பாளர்

### (வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள்)

இப்பதவிக்கு பொருத்தமானவர் என கருதப்படும் விண்ணப்பதாரர் 35 வயதிற்கு குறைந்தவராகவும் வடக்கு அல்லது கிழக்கில் வசிப்பவராகவும் இருத்தல் வேண்டும். இப்பதவிக்கு விண்ணப்பிப்பவர் விற்பனை குழுக்களை மேற்பார்வை செய்த ஆகக்குறைந்தது 2 வருடகால அனுபவத்தையாவது கொண்டிருத்தல் வேண்டும். தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரியானவர் கிழக்குப் பிரதேசத்தில் பணியாற்றுவதற்கு நியமிக்கப்படுவதோடு தமிழ் மொழியில் சரளமான ஆற்றலையும் கொண்டிருத்தல் வேண்டும். அத்துடன் அவர் சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் தேர்ச்சிபெறுஇருத்தல் வேண்டும். சந்தைப்படுத்தல் துறையில் பகுதி தகைமையைக் கொண்டிருத்தலும் ஒரு மேலதிக தகைமையாக ஏற்றுக்கொள்ளப்படும்.

விநியோகஸ்தர்களை! கையாளுவதில் உள்ள அனுபவம், மேற்பார்வை செய்யும் திறன், சுயசெயல் நோக்கம் மற்றும் விற்பனைக்குழுவை முன் நடத்திச் செல்லுதல் என்பன அத்தியாவசியமானவை ஆகும். குறிப்பிட்ட பிரதேசத்தில் விற்பனை மற்றும் விநியோக நடவடிக்கைகளில் திறமையான தலைமைத்துவத்தை கடைப்பிடிப்பதன் மூலமாக வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் இலாப வளர்ச்சிக் குறிக்கோளை கொண்டு வருவதும் தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரியின் பொறுப்புக்களாகும்.

கவர்ச்சிகரமான சம்பளப் பொதி மற்றும் வாகன வசதி உள்ளடங்கலாக மிகப் பொருத்தமான விண்ணப்பதாரருக்கு மிகச் சிறந்த வசதி வாய்ப்புக்கள் காத்திருக்கின்றன.

முழுமையான சுயவிபரம், உறவினர் அல்லாத பொறுப்பாளர் இருவரின் பெயர்கள், முகவரிகள் தொலைபேசி இலக்கங்கள் என்பவற்றை குறிப்பிட்டு விளம்பரப்படுத்திய நாளிலிருந்து 10 நாட்களுக்குள் தயவு செய்து விண்ணப்பியுங்கள்.

கூட்டு நிறுவன மனித வள பணிப்பாளர்
ஹேமாஸ் பார்மசியூட்டிகள்ஸ் (PTE) லிமிடட்
36, பிரிஸ்டல் வீதி, கொழும்பு 1.
மின்னஞ்சல்: careers@hemas.com

www.hemas.com

A&D ADVERTISING

## 6 ஆம் மாத நினைவில்....

*அன்னையிடம்*
15 - 01 - 1944



*ஆண்டவனிடம்*
19 - 04 - 2003

### திருமதி கந்தசாமி சிவநாயகி *(கிளி)*

(செங்குந்த வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.)

"தாயே உங்கள் உயிரது பிரிந்தாலும்
உறவு தான் பிரிந்திடுமோ?"

*இல.20, சின்னப்புதுக்குளம்,*
*வவுனியா.*
T.P:-74589592 (24-18)

உங்கள் நினைவுடன்:
கணவர், பிள்ளைகள், மருமக்கள், சகோதரர்கள்.

(23597)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கம்யூனிச சீனாவுக்குப் புத்துணர்வு தந்த யாங் லிவெயின் விண்வெளிப் பயணம்

பரந்து, விரிந்து, எங்கும் வியாபித்திருக்கும் பிரமாண்டமான விண்வெளியை வெறுமனே பார்த்துக் கொண்டிருந்த காலம்போய் மனிதன் விண்ணை வெற்றிகொள்ள ஆரம்பித்து பல ஆண்டுகள் உருண்டோடிவிட்டன. அதில் ஒரு மைல்கல்லாக ரஷ்யா, அமெரிக்கா ஆகிய நாடுகளை அடுத்து இதோ, இப்போது சீனாவும் தனது சார்பில் விண்வெளிக்கு மனிதனை அனுப்பி விட்டது. கடந்த புதன்கிழமை சீன தேசத்தின் வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஒரு நாள். ஆம், அன்றுதான் சீன விமானப்படையின் விமானியான 38 வயது நிரம்பிய யாங்லிவெய் என்ற விண்வெளி வீரரைச் சீனாவின் மனிதனைக காவிச்செல்லும் முதல் விண்வெளி ஓடமான "ஷென் ஷோவு" (தெய்வீக ஓடம்) விண்ணைநோக்கி சீறிப்பாய்ந்து சென்றது. அன்றுமுதல் யாங்லி வெய் சீனாவின் முதல் விண்வெளி மனிதன் என்ற பெருமையைப் பெற்றார்.

விண்ணைக் கிழித்துச் சென்ற பத்தாவது நிமிடத்தில் பூமிக்கு மேல் 350 கிலோ மீற்றர்கள் உயரத்தில் புவிச்சுற்றுப் பாதையைச் சென்றடைந்தது தங்களது விண்வெளி ஓடம் (Spaceship) எனச் சீனாவின் தொலைக காட்சி சேவை மகிழ்ச்சி பொங்க அறிவித்தது. கடுகதி வேகத்தில் பூமிப் பந்தை இருபத்து மூன்றே மணித்தியாலங்களில் பதினான்கு முறை வலம் வந்த 'ஷென் ஷோவு-5' மொங்கோலியாவிலுள்ள புற்றரையொன்றில் திட்டமிட்டபடி தரை இறங்கியது.

சீனாவின் வடமேற்கு மாகாணமான கன்சூவிலமைந்துள்ள ஜியுகுவான் செயற்கைக்கோள் ஏவுதளத்திலிருந்து, விண்ஊர்தி, (Rocket) காதுகளைச் செவிடாக்கும் பேரோசையுடன் அண்டவெளியை நோக்கிப் பாய்ந்து சென்று இருபது நிமிடங்களின் பின்பே சீனாவின் தொலைக்காட்சி சேவை அந்தக் காட்சியை ஒளிபரப்புச் செய்தது. முன்பு நேரடி ஒளிபரப்புச் செய்வதாக இருந்த தனது திட்டத்தை பின்னர் அந்த தொலைக்காட்சி சேவை கைவிட்டிருந்தது.

சீன அதிபர் ஹூஜின்டாவோ மற்றும் மத்திய அமைச்சு ஆணைக் குழுவின் தலைவர் ஜியாங் ஜெமின் போன்ற சீனாவின் உயர்மட்டத் தலைவர்கள் கடந்த புதன்கிழமை அதிகாலை 5.30 மணியளவில் யாங்லிவெயைச் சந்தித்துத் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்ததாக கெனன் மாகாணத்திலிருந்து வெளிவரும் டாகீபாஓ என்ற செய்தித்தாள் தெரிவித்தது.

"அனைத்துச் சீனமக்களினதும் எனது தாய்நாட்டினதும் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவதில் நான் தோலவியடைய மாட்டேன்" என்று வழியனுப்பு வைபவத்தில் யாங்லி வெய் சபதம் எடுத்துக்கொண்டார்.

பல்வேறு வகையான கடினமான பயிற்சிகளின் பின் தெரிவுசெய்யப்பட்ட மூன்று இறுதிப்போட்டியாளர்களைக் கொண்ட குழுவிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட யாங்லிவெய்க்குச் சீனாவின் முதல் விண்வெளிவீரராகும் அரிய வாய்ப்புக் கிடைத்தது. விண்வெளியில் எதிர்பாராத விதத்தில் விபத்துக்கள் ஏற்படும்போது அதிலிருந்து எவ்வாறு தப்புவது என்று கடந்த சில தினங்களாகப் பயிற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

தவறுகளைக் கண்டறிந்து காப்பாற்ற உதவும் அமைப்பு முறைகள் உட்பட 55 நவீன அதியுயர் தொழில்நுட்பங்களின் பிரயோகத்துடன் சீனாவின் விண்வெளி ஓடமும் விண்ணூர்தியும் அதிசிறந்த சர்வதேச தரத்தை கொண்டிருந்தன. இந்த விண்ணூர்தியின் நீளம் 58.3 மீற்றர்களாகும். விண்ணூர்தி மேலெழும்போது தேவையான எரிபொருள்களுடன் சேர்த்து அதன் மொத்த நிறை 479.8 தொன்களாகும். சீன தேசத்தின் விண்வெளி வரலாற்றில் தயாரிக்கப்பட்ட விண்ணூர்திகளில், இதுவே மிக நீளமானதாகவும் அதிக நிறையுடையதாகவும் கருதப்படுகின்றது.

'ஷென்ஷோவு' விண்கலங்களின் வரிசையில் ஏற்கனவே நான்கு ஆளில்லா விண்கலங்களை வெற்றிகரமாகப் புவிச்சுற்றுப்பாதையில் நிலைநிறுத்துவதில் சீனா வெற்றி கண்டிருந்தது. அண்டவெளியைச் செவ்வனே ஆராய்ந்து அங்கே செறிந்து காணப்படும் வளங்களைச் சிறந்த முறையில் பயன்படுத்துவதே, விண்வெளி ஆய்வில் சீனாவின் இறுதி இலக்காக இருக்கும் என்று சீனாவின் விண்வெளித் திட்டத்தின் இயக்குநரும் விண்வெளிப் பிரயோகக் கட்டமைப்புக்களின் பிரதான வடிவமைப்பாளருமான கு ஜிடோங் தெரிவித்தார். திரும்பும் திசையெல்லாம் எம்மை வியப்பில் ஆழ்த்தி கண்ணுக்கெட்டிய தூரம் வரையும் அதற்கும் அப்பாலுக்கப்பாலுமாய் விரிந்து கிடக்கும் இப்பரந்த வான் வெளியில மனித இனத்திற்குத் தேவையான சக்திகளும் வளங்களும் ஏராளமாகக கொட்டிக்கிடக்கின்றன. தன்னிறைவு காணத்துடிக்கும் மனித இனம் புதிய வழிகளைக் கண்டறிவதன் மூலம் விண்ணில் பரவிக் கிடக்கும் வளங்களை விரைந்து பயன்படுத்த முடியும். விண்ணை வென்றிடும் முயற்சியில் 1960களிலிருந்து ஈடுபாடு காட்டிவரும் பல நாடுகளும் விண்வெளியில் பல பரிசோதனைகளைச் செய்து விண்வெளி தொழில்நுட்பத்தில் குறிப்பிடத்தக்க பலவெற்றிகளை பெற்றிருக்கின்றன. விண்வெளி ஆய்வுகளை கைத்தொழில் நுட்பங்களுக்கேற்ற விதமாக மாற்றியதில் அமெரிக்கா ஏனைய நாடுகளுக்கு முன்னுதாரணமாகக் திகழ்கின்றது. அமெரிக்காவின் விண்வெளித் திட்டத்தில் சிறந்த முறையில் பரீட்சிக்கப்பட்டு விருத்தி செய்யப்பட்ட முக்கியமான முன்னேற்றங்களை அமெரிக்க கைத்தொழில்துறையில் பயன்படுத்தியதன் விளைவால் அமெரிக்கப் பொருளாதாரம் பிரதிபலனாகப் பெற்ற தொகை பல கோடி டொலர்கள் ஆகும்.

1975 ஆம் ஆண்டு முதல் மீண்டும் பூமியை வந்தடையக்கூடிய 17 செயற்கைக் கோள்களை சீனா வெற்றிகரமாக ஏவியுள்ளது. இச்செயற்கைக் கோள்கள் புவிச்சுற்றுப் பாதையில் பூமியை வலம் வந்துகொண்டு இருந்த வேளையில் பல்வேறு வகையான விண வெளிப் பொறியியல் தொடர்பான பரிசோதனைகளும் விவசாயம், உயிரியல், விஞ்ஞானம், விண்மூலப் பொருள்



கள் தொடர்பான பரிசோதனைகளும் சீனாவால் மேற்கொள்ளப்பட்டன.

விண்வெளி நிலையங்கள் அல்லது விண்வெளிக் கப்பல்களை அமெரிக்காவும் ரஷ்யாவும் விண்ணில் நிலை நிறுத்தியுள்ளன. அரை ஊடு கடத்திகள், மூக்குக்கண்ணாடிகள், மட்பாண்டங்கள் போன்ற பொருள்களை விண்வெளியில் வைத்துத் தயாரித்துள்ளார்கள். மேலும் பல்வேறு வகையான உலோகக் கலவைகளும் விண்ணில் வைத்து வெற்றிகரமாக உருவாக்கப்பட்டுள்ளன. பல்வேறு பொருள்களை விண்வெளியில் தயாரிக்கும் திறனை அமெரிக்கா பெற்றுள்ளது. அதேவேளை, ரஷ்யாவோ சுமார் 14 ஆயிரத்து 500 பரிசோதனைகளைப் புவிச்சுற்றுப் பாதையில் மேற்கொண்டுள்ளது.

விண்ணில் நிறைந்து கிடக்கும் வளங்களை ஏனைய நாடுகளுடன் பகிர்ந்துகொள்வதற்காகவே சீனா விண்ணிற்கு மனிதனை அனுப்பும் திட்டத்தை ஆர்வமுடன் செயற்படுத்தி வருகின்றது. அதிக எதிர்பார்ப்புடன் மேற்கொள்ளப்பட்டுவரும் சீனாவின் விண்வெளித் திட்டத்தில் மனிதனை விண்ணுக்கு அனுப்புவது என்பது ஒரு முதற்கட்ட நடவடிக்கைதான் இரண்டாவது கட்டமாக உயர்தொழில்நுட்ப நடவடிக்கைகளான விண்கலங்களை பழுதுபார்க்கும் நிலையமொன்றும் முனனேற்பாட்டுடன் கூடிய சந்திப்பு இடமொன்றும் விண்ணில் சீனாவால் அமைக்கப்படும். அத்துடன், அண்டவெளியில் விண்வெளி ஆய்வுகூடம் ஒன்றையும் சீனா நிறுவத் திட்டமிட்டுள்ளது. தனது விண்வெளி வீரர்கள் அணிந்து கொள்வதற்காகச் சீனா உருவாக்கிய விசேட உடைகள், பாதுகாப்பு மற்றும் நம்பகத்தன்மையில் இது போன்ற அமெரிக்க, ரஷ்யத் தயாரிப்புக்களுக்குச் சற்றும் குறைந்தவையில்லை என்று சீனாவின் விண்வெளி வீரர்களுக்கான உதவித் தயாரிப்புக்களின் கட்டமைப்பின் பிரதான வடிவமைப்பாளர் சூ சுவாங்னிங் தெரிவித்தார். ரஷ்யா அல்லது அமெரிக்காவினால் தயாரிக்கப்படும் விண்வெளி வீரர்களுக்கான உடைகளுக்கும் சீனாவில் தயாரிக்கப்படும் உடைகளுக்கும் இடையே வடிவமைப்பில் அதிக வேறுபாடுகள் கிடையாது. ஆனால், விண்வெளி வீரர்களின் உடைகளில் சீனா சிலமாற்றங்களை மேலதிகமாகச் செய்துள்ளது.

விண்வெளி வீரர்கள் அணியும் உடைகள் இருவகைப்படும். விண்கலத்தினுள் இருக்கும் வீரர் அணியும் உடைகள் ஒருவகையானவை. விண்கலத்தின் வெளியே நடமாடும் வீரர் அணியும் உடைகள் இன்னொரு வகையானவை. இம்முதல் விண்வெளிப் பயணத்தில் சீனவீரர், விண்கலத்தின் வெளியே வரவில்லை. ஆகையால் அவருக்கு விண்கலத்தினுள் அணியும் ஆடையே வழங்கப்பட்டது. விபத்துக்களினால் விண்கலத்தில் சிறிய வெடிப்புக்கள் ஏற்பட்டு, அதனால் கலத்தினுள் காற்றமுத்தம் அதிகரிப்பது போன்ற சம்பவங்கள் ஏற்படும் வேளையில் விண்கலத்தினுள் அணியப்படும் ஆடைகள், விண்வெளிவீரருக்குச் சிறந்த பாதுகாப்பு வழங்கும். இவ்வாறான விபத்து ஏற்படும் வேளையில், விண்கலத்தினுள் இருக்கும் வீரர் உடனடியாகத் தனது விண்வெளி ஆடையை அணிந்துகொண்டு, விண்கலத்தினுள் இருக்கும் பிராணவாயு வழங்கும் அமைப்புடன் தொடர்பை ஏற்படுத்துவதன் மூலம் ஆடையின் உள்ளிருக்கும் காற்றமுத்தத்தை மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டு வரமுடியும். இவ்வாறு செய்வதால், விண்வெளிவீரர் பாதுகாப்பாக மீண்டும் பூமிக்குத் திரும்பமுடியும்.

விண்வெளி வீரர்கள் அணியும் உடைகள் மூன்று அடுக்குகளைக் கொண்டதாக இருக்கும். அதியுயர் வெப்பநிலையையும் உராய்வுகளையும் தடுத்து உட்புற அடுக்குகளைப் பாதுகாக்கும் நோக்கில் வெளிப்புற அடுக்கானது விசேட இழைகளால் தயாரிக்கப்பட்டிருக்கும். விசேட மூலப் பொருள்கள் பூசப்பட்ட இழைகளினால் தயாரிக்கப்பட்ட காற்று இறுக்கமான இரண்டாவது அடுக்கு, காற்று அமுக்கத்தின் போது காற்று வெளியேறுவதைத் தடுக்கும் மனித கலங்களின் உயிரியல் தொழிற்பாட்டினால் வெளிவிடப்படும் வெப்பத்தையும் நீராவியையும் வெளியேற்றுவதில் மூன்றாவது அடுக்கு முக்கிய பங்கு வகிக்கின்றது. வெப்பம் மற்றும் ஒலியைக் கடத்தாத முறையில் 'பொலிக் காப்னேற்' மூலப் பொருளால் விண்வெளி வீரர்களின் தலைக்கவசம் விசேடமாகத் தயாரிக்கப்பட்டுள்ளது. விபத்துக்களின்போது இக்கவசம் விண்வெளி வீரர்களை பாதுகாக்கும். விண்வெளி வீரர்கள் அணியும் கையுறைகள், சுலபமாகக் கைகளை மடிப்பதற்கு ஏற்றவகையிலும் இதமான சூட்டைத் தரும் வகையிலும் தயாரிக்கப்பட்டிருக்கும். விண்கலத்தினுள் அமுக்கம் தொடர்பான பிரச்சினைகளில்லாதபோது அது புவிச்சுற்றுப்பாதையில் வலம்வரும் வேளையில் கலத்தினுள் இருக்கும் விண்வெளி வீரர், தனது உடையை அணிந்திருக்க வேண்டிய அவசியமில்லை. சீனாவின் முதல் விண்வெளி வீரரான யாங்லிவெய் தனது பயணத்தை வெற்றிகரமாக நிறைவேற்றி மீண்டும் பூமியை வந்த அடைந்த சம்பவமானது சீனாவின் தொழில்நுட்ப ஆற்றலை மேலும் உறுதி செய்வதாக அமைந்துள்ளது.

**- தாரணி -**

தொழில்நுட்ப ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் இந்த விண்வெளிப் பயணம் சீனாவுக்கு பல வழிகளில் உதவும் என்பது உண்மை. இதே சமயம், சீனாவில் கம்யூனிசத்தின் மீதான நம்பிக்கை குறைந்து வருவதாகக் கூறப்படும் நிலையில், கம்யூனிச சீனாவின் குடிமக்களுக்கு இந்த விண்வெளிப் பயணம் புத்துணர்ச்சி கொடுத்துள்ளது என்பதும் உண்மையே. ✪



பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபாவினால் சர்வதேச ரீதியில் இரத்ததான தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்ட செப்ரெம்பர் 14 ஆம் திகதி யாழ்ப்பாணம் சத்திய சாயி சேவை நிலையத்தில் இடம்பெற்ற இரத்ததான நிகழ்வில் எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இரத்ததானம் செய்ய முன்வந்தோர் பதிவு செய்வதையும் பெண் ஒருவர் இரத்தம் வழங்குவதையும் படங்களில் காணலாம். (ஜ)

# கலைப்பேரரசின் தாளக்காவடி இன்றும் கண்முன் ஆடுகின்றது

கலைப்பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை அவர்கள் தமிழ் நாடக உலகின் மங்கா ஒளிவிளக்கு. காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி பல அறிஞர்களை உருவாக்கிய பெருமைமிக்க கல்லூரி. நடேஸ்வராக் கல்லூரியின் மூத்த ஆசிரியர்களில் ஒருவராக ஏ.ரி.பொன்னுத்துரை அவர்களும் அடங்குவார்.

## நீத்தார் நயப்புரை

மாணவர்களுக்கு பாடங்களைக் கற்பிப்பதோடு மட்டும் நிற்காது, இக் கல்லூரியை ஒரு கலைக்கல்லூரியாகவும் வளர்த்தெடுத்தார். பரிசளிப்புவிழா, பெற்றோர்தினவிழா, வாணிவிழா முதலிய விழாக்களில் நடைபெறும் நிகழ்ச்சிகளில் கலைநிகழ்ச்சிகளுக்குப் பொறுப்பாக இருந்து கலைச்சேவை செய்தார். பாடசாலையில் கலைநிகழ்ச்சிகள் வந்துவிட்டால், நடிகமணி வைரமுத்துவின் இல்லம் தேடி வருவார். நடிகமணியிடம் உள்ள திரைச்சீலைகள் (சீன்ஸ்), காட்சிப் பொருள்கள், ஒப்பனைப் பொருள்கள் மற்றும் பக்க வாத்தியக் கருவிகள் ஆகியவற்றைப் பெறுவதற்கு அனுமதி பெறுவார்.

நிறைகுடம், மந்தரை சூழ்ச்சிப் படலம், குசேலர், கோவலன் கண்ணகி, தண்டனை, தாளக் காவடி மற்றும் பல நாடகங்களை மேடையேற்றினார். 'தாளக் காவடி' எனும் நாடகத்



தில் இவரின் நடிப்பு வித்தியாசமானது. 'மந்தரை சூழ்ச்சிப் படலம்' எனும் நாடகத்தில் ஈழத்தின் பிரபல எழுத்தாள் குறமகள், திருமதி இராமலிங்கத்தின் சகோதரியை தசரதராகவும் நடிகமணியின் பிள்ளைகளான வஸந்தாவை கைகேகியாகவும் லலிதாவை பரதனாகவும் நடிகமணியின் மைத்துனி காந்தாமணியை இராமராகவும் மற்றும் மாணவிகளையும் சேர்த்து சிறந்த நாடகப் பயிற்சிகளைக் கொடுத்து இந் நாடகத்தை மேடையேற்றினார். ஆசிரியைகளைக் 'கோவலன் கண்ணகி' எனும் நாடகத்தில் நடிக்க வைத்தார். இதற்கு நடிகமணியின் உதவியோடு பெரும் வெற்றி கண்டார். இந்நாடகங்கள் காங்கேசன்துறையில் மட்டுமல்லாது கொழும்பு, நீர்கொழும்பு, மலை நாடுகளிலும் இடம்பெற்றன.

1953ஆம் ஆண்டு நடிகமணியால் ஸ்தாபிக்கப் பெற்ற வஸந்தகான சபாவின் கலைஞர்களுடன் அமரர் அவர்கள் அன்போடும் பண்போடும் பழகி வந்தார். கர்வம் இல்லாத கலைஞனாகவே வாழ்ந்தார். நடிகமணியின் மிகநெருங்கிய நண்பனாகவும் இருந்தார். இருவருக்கும் உள்ள கலைத் தொடர்பு மிக நீண்டது.

**நடிகமணி வைரமுத்து**
**வஸந்த கான சபையினர்.**
*காங்கேசன்துறை.*

அமரர் பொன்னுத்துரை அவர்கள் கலைத்தாய் ஈன்றெடுத்த பெருமகனாவார். ஒரு பிறவிக் கலைஞனாகவே திகழ்ந்தார். அந்தளவிற்கு கலையை மிகமிக நேசித்தார். நல்ல மாணவர்களை உருவாக்கினார். இன்று எம்மிடையே கலைப்பேரரசு இல்லை. மறைந்துவிட்டார். ஆனால், அவர் தந்த 'தாளக்காவடி' எம்கண்முன்னே ஆடிக் கொண்டே இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தியேட்டி அழைப்பிதழும் நன்றி நவிலலும்

| மண்ணின் மடியில் | | இறைவன் அடியில் |
|---|---|---|
| 26 | | 21 |
| 11 | | 09 |
| 1953 | | 2003 |



திருமதி

## பத்மாதேவி சிவசுப்பிரமணியம்

*எம்மைப் பெற்றவளே – நீ*
*எங்கே தூங்குகின்றாய்?*
*முகம் தெரியாத இருட்டறையிலா?*
*முகவரி தெரியாத மந்திரக் கோலிலா?*
*திசை தெரியாது பயணப்பட்டவளே – உன்*
*முகத்தை நாம் எங்கே தேடுவது?*
*இரவுகளும் பகல்களும் – எமக்கு*
*கண்ணீராய்ப் போய்விடவே*
*நிம்மதி இழந்து தவிக்கின்றோம்.*

எமது அன்பு அன்னையார் சிவபதமடைந்த செய்தி கேட்டு நேரில் வந்து அனுதாபம் தெரிவித்தவர்களிற்கும் தொலைபேசி, தந்திமூலம் ஆறுதல் கூறியவர்களிற்கும் இறுதிக்கிரியைகளில் பங்குபற்றியவர்களுக்கும் மற்றும் பல வகையிலும் உதவிகள் புரிந்தவர்களிற்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை (21.10.2003) அன்று நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மார்ட்டின் ஜெயராஜா
*புதுவளவு,*
*சுன்னாகம்.* (23690) (25-15-19)

- குடும்பத்தினர்.

PC House (p) Ltd, Jaffna.

## கணிப்பீட்டு அலுவலருக்கு பயிற்சி வகுப்பு

வலி.மேற்கு,ஒக்.19

நாடளாவிய ரீதியில் கைத்தொழில் நிறுவனங்களின் கணிப்பீட்டுத் தொகை மதிப்பீடு புள்ளி விவரத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படவுள்ளது. இதற்கான ஆரம்பக்கட்ட நடவடிக்கைகளை தொகை மதிப்பீட்டு புள்ளி விவரத்திணைக்களம் மேற்கொண்டுள்ளது. கணிப்பீட்டு உத்தியோகத்தர்களாக கிராம உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் கணிப்பீட்டு உத்தியோகத்தர்களாக நியமிக்கப்பட்டுள்ள கிராம உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி ஒன்றினை நடத்துவதற்கு யாழ் மாவட்ட புள்ளிவிவர அதிகாரி கே.வேலுப்பிள்ளை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார். பிரதேச செயலகங்களில பயிற்சிகள் நடத்தப்படவுள்ளன. முதல்கட்டமாக வலிகாமம் மேற்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில இப்பிரதேசத்தைச் சேர்ந்த கிராம அலுவலர்களுக்கு எதிர்வரும் 23 ஆம் திகதி காலை 9 மணியளவில் பயிற்சி வகுப்புக்கள் நடைபெறவுள்ளன. (ஒ-175)

## காணி விற்பனைக்கு

118, அத்தியடி, அம்பலவாணர் வீதியில் கிணற்றுடன் 3 பரப்புக் காணி உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:

**இராசரத்தினம் இராஜாராம்**
(சமாதான நீதிவான்)
மே/பா. சட்டத்தரணி
மதியாபரணம்,
சுதுமலை வீதி, தாவடி.

T.P: 222 2347
0777 242042 (23783) (25-15-19)

## மேர்வின்ஸ்

கொம்பியூட்டர் உதவியுடன் தயாரிக்கப்படும் பொலிமர் றபர் ஸ்ராம்புகள், பிளாஸ்ரிக் வீட்டுப் பெயர்ப் பலகைகள், பிளாஸ்ரிக் என்கிறேவிங் ஆகியவற்றை குறித்த தவணையில் தரத்துடன் செய்து பெற்றிட நாடுங்கள்:

91/1. மின்சார நிலைய வீதி.
யாழ்ப்பாணம்.

(23667) (25-15-19)

## இறக்குமதி செய்யப்பட்ட தரமான விதை உருளைக்கிழங்கை மலிவானவிலையில் பெற்றுக்கொள்ளலாம்

கடந்த 32 வருடங்களாக யாழ். மண்வளத்திற்கேற்ப தரமான விதை உருளைக்கிழங்கை இறக்குமதி செய்து விநியோகிக்கின்றோம்.

**ரோப்பிக்கல் சீட்ஸ் கூட்டு நிறுவனத்தினால் இறக்குமதி செய்யப்பட்ட விதை உருளைக்கிழங்குகள் மலிவான விலையில் உடன் விற்பனைக்கு உண்டு.**

☞ உழவர் களஞ்சியம் – திருநெல்வேலியிலும்
2223785

☞ கமக்காரர் மாளிகை – சுன்னாகத்திலும்

| இனம் | நிறை | விலை |
|---|---|---|
| 1. டிசாரி | - 50கிலோ | 4900.00 |
| 2. ராஜர் | - 50கிலோ | 5200.00 |
| 3. லயிரா | - 50கிலோ | 5200.00 |
| 4. ஆனோவா | - 50கிலோ | 5700.00 |

மட்டுப்படுத்தப்பட்ட தொகையே இறக்குமதி செய்யப்படுவதால் முற்பணம் செலுத்தி உங்கள் தேவையை உடன் ஒதுக்கீடு செய்து கொள்ளுங்கள்.

**ரொப்பிக்கல் சீட்ஸ் கூட்டு நிறுவனம்**

குறிப்பு:- *ரொப்பிக்கல் சீட்ஸ் கூட்டு நிறுவனத்தினரால் இறக்குமதி செய்யப்பட்ட விதை உருளைக்கிழங்குதான் என்பதை உறுதிசெய்து பெற்றுக்கொள்ளவும்.*

(23705) (26-15-19)

## 31 ஆம் நாள் நினைவும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 30 | | 20 |
| 04 | | 09 |
| 1928 | | 2003 |



### அமரர் முருகேசுப்பிள்ளை சிதம்பரப்பிள்ளை

(பிரபல வர்த்தகர் - நொச்சிகாமம்).

*தந்தை சொல்மிக்க மந்திர மில்லையென்ற*
*தாரக மந்திரமாய் விளங்கிய தந்தையே!*
*சிந்தையிலே கோயில் வைத்து எந்நாளும்*
*சிரம் தாழ்த்தி நாம் காணும் தெய்வமே!*

நாளை (20.10.2003) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ள ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

54/10. பண்டாரிக்குளம் அம்மன் கோவில் வீதி.
வவுனியா.
*T.P: 222 3313* (23654) (25-15-19)

- மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 04 | | 20 |
| 04 | | 09 |
| 1919 | | 2003 |



அமரர்

### ஆழ்வாப்பிள்ளை சிவசம்பு

சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர் ஆழ்வாப்பிள்ளை சிவசம்பு அவர்களின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும் பல்வேறு வகைகளில் எமக்கு உதவி புரிந்தவர்களுக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நாளை (20.10.2003) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ள ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும்படி உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

*புதுவீடு,*
*கரவெட்டி மத்தி, கரவெட்டி.*

- குடும்பத்தினர்.
(23673) (25-15-19)


# கியுபிட் போர்ட் KUPID FORT

(இது ஒரு இந்தியன் தயாரிப்பு) Capsules



பிரசித்தி பெற்ற, ஆயுர்வேத மூலிகைகளைக் கொண்டு இந்தியாவில் தயாரிக்கப்பட்ட ஒரு மாத்திரை, சர்வதேச உலகில் எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்ட ஒரு சிறந்த ஔஷதம். கியுபிட் போட் கீழ்க்காணும் பிரச்சினைகளை சீர்செய்யும்.

- ஆண் வீரியமின்மை, மலட்டுத் தன்மையைப் போக்க
- வயது முதிர்ந்தோரின் பாலியல் பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வு
- சாதாரண பாலியல் குறைபாடுகளை சரிப்படுத்த

100% ஆயுர்வேத மூலிகைகளால் தயாரிக்கப்பட்டது.
எதுவித பக்க விளைவுகளும் கிடையாது.
கியுபிட் போட் வில்லைகள் தாம்பத்திய வாழ்வில் ஒரு மறுமலர்ச்சி.
கியுபிட் போட் என்று பெயர் சொல்லிக் கேட்டு வாங்குங்கள்.

**நாடெங்கிலும் உள்ள சகல பார்மஸிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்**

விசாரணைகள் யாழ் நகரில்
தொலைபேசி 222-3191


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மோட்டார் திணைக்களம் நடத்தும் நடமாடும் சேவை யாழ். செயலகத்தில்

யாழ்ப்பாணம்,ஒக்.19

மோட்டார் தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் வகையில் நடமாடும் சேவை ஒன்று எதிர்வரும் 31 ஆம் திகதி தொடக்கம் 2 ஆம் திகதி வரை யாழ். செயலகத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன தலைமையில் இடம்பெறும் இந்த நடமாடும் சேவையை நடத்துவதற்காக கொழும்பு மோட்டார் போக்குவரத்து திணைக்களத்திலிருந்து கொழும்பு மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் காமினி எஸ்.செனரத் தலைமையிலான 26 பேர் கொண்ட குழுவினர் யாழ்ப்பாணம் வர உள்ளனர். இக்குழுவில் மேலதிக மோட்டார் போக்குவரத்து ஆணையாளர், பிரதம கணக்காளர், தலைமை அலுவலக உதவி மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் மற்றும் 12 மோட்டார் வாகனப் பரிசோதகர்கள் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

இந்நடமாடும் சேவை தினமும் காலை 9 மணிமுதல் பிற்பகல் 4 மணிவரை இடம்பெறவுள்ளது. அங்கு ஆற்றப்படவுள்ள சேவைகள் தொடர்பாக யாழ். மாவட்ட உதவி மோட்டார போக்குவரத்து ஆணையாளர் வி.பத்மநாதன் அறிவித்துள்ள விவரங்கள் வருமாறு:-

***ஆவணங்கள் தொலைந்தமையால் இதுவரை பதிவுசெய்யப்படாத வாகனங்களைப் பதிவுசெய்தல்:-***

இதன் நிமித்தம் உரிமையாளர் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள் வருமாறு:

✪ ஆவணங்களைத் தொலைத்தமையையும், வாகனம் பற்றிய விவரங்களையும், உறுதிப்படுத்தும் கிராம அலுவலர் ஊடான பிரதேச செயலரின் கடிதம்(ஆங்கிலத்தில்).

✪ அதேபோன்று ஆவணங்கள் தொலைத்தமையையும், வாகனம் பற்றிய விவரங்களையும் உறுதிப்படுத்தும் சமாதான நீதிவானின் கடிதம் (ஆங்கிலத்தில்)

மேற்படி கடிதங்களில் வாகன வகை, இயந்திர அடிச்சட்ட இலக்கங்கள், வாகன நிறம், வாங்கிய திகதி, வாங்கிய நிறுவனத்தின் பெயர் (தெரிந்திருப்பின்), ஆவணங்கள் தொலைந்த காரணம், இதுவரை பதிவு செய்யாமைக்கான காரணம் போன்றன தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும்.

✪ கிராம அலுவலரால் உறுதிப்படுத்திய இரண்டு கறுப்பு வெள்ளை புகைப்படம்.

✪ கிராம அலுவலரால் உறுதிப்படுத்தப்பட்ட தேசிய அடையாள அட்டை, கடவுச்சீட்டு (வலுவில் உள்ளது)/சாரதி அனுமதிப்பத்திரம்./தபால் அறிமுக அட்டை(வலுவில் உள்ளது) ஏதாவது ஒன்றின் தெளிவான பிரதியும் அதன் மூலப்பிரதியும்.

✪ அத்துடன் உரிமையாளர் நேரில் வாகனத்துடன் சமுகமளிக்க வேண்டும்.

***ஆவணங்கள் தொலைந்தமையால் இதுவரை உடைமைமாற்றம் செய்யப்படாத வாகனங்களை உடைமைமாற்றம் செய்தல்:-***

இவ்விடயம் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள் வருமாறு:

✪ ஆவணங்கள் தொலைத்தமையையும், வாகனங்கள் பற்றிய விவரங்களையும், முன்னைய பதிவுசெய்யப்பட்ட உரிமையாளரின் விவரங்கள் தெரிந்திருப்பின் அது பற்றியும் உறுதிப்படுத்தும் கிராம அலுவலரூடான பிரதேச செயலரின் கடிதம் (ஆங்கிலத்தில்).

✪ மேற்கூறியது போன்று சகல விவரங்களையும் உள்ளடக்கிய சமாதான நீதிவானின் கடிதம்(ஆங்கிலத்தில்).

மேற்படி கடிதங்களில் வாகன வகை, இயந்திர இலக்கம் அடிச்சட்ட இலக்கம், வாகன நிறம், வாங்கிய திகதி (உடைமை மாற்றத் திகதி), முனனைய பதிவுசெய்த உரிமையாளர் பெயர், முகவரி ஆவணங்கள் தொலைந்த காரணம், பதிவுசெய்யாமைக்கான காரணம் போன்றன தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும்.

✪ கிராம அலுவலரால் உறுதிப்படுத்திய இரண்டு கறுப்பு வெள்ளை புகைப் படம்.

✪ கிராம அலுவலரால் உறுதிப்படுத்தப்பட்ட தேசிய அடையாள அட்டை/கடவுச்சீட்டு (வலுவில் உள்ளது)/சாரதி அனுமதிப்பத்திரம்/தபால் அறிமுக அட்டை (வலுவில் உள்ளது) ஏதாவது ஒன்றின் தெளிவான பிரதியும் அதன் மூலப்பிரதியும்.

✪ அத்துடன் உரிமையாளர் நேரில வாகனத்துடன் சமுகமளிக்கவேண்டும்.

சாரதி அனுமதிப்பத்திர பரீட்சையில் சித்தியடைந்து தற்காலிக அனுமதிப்பத்திரம் பெற்று ஒரு வருடமாகியும் நிரந்தர சாரதி அனுமதி அட்டை கிடைக்கப்பெறாதவர்கள் தமது முறையீடுகளை கொழும்பு, மோ.போ.ஆணையாளருக்கு எழுத்து மூலம்(ஆங்கிலத்தில்) சமர்ப்பிக்க முடியும். அதேபோன்று சாரதி இணைப்பிரதி, சாரதி அனுமதிப் புத்தகங்களை அட்டைகளாக மாற்றுதல், சாரதி அனுமதி அட்டைகளைப் புதுப்பித்தல் போன்றவற்றுக்கு விண்ணப்பம் செய்தும் இன்றுவரை சாரதி அனுமதிப்பத்திர அட்டை கிடைக்காதவர்கள் தமது முறையீடுகளை கொழும்பு மோ.போ. ஆணையாளருக்கு சமர்ப்பிக்க முடியும்.

இதேவேளை -

பூர்த்திசெய்யப்பட்ட ஒரு தொகுதி சாரதி அனுமதி அட்டைகளும், தபால் மூலம் அனுப்பித் திருப்பிச் சென்ற ஒரு தொகுதி சாரதி அனுமதி அட்டைகளும் வாகனப் பதிவுச் சான்றிதழ்களும் எடுத்து வரப்படுவதால் விண்ணப்பதாரிகள் தங்களது அட்டைகள், பதிவுச் சான்றிதழ்கள் எடுத்துவரப்படின் நேரில் அவற்றைப் பெற்றுக்கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது.

புதிய வாகனப் பதிவு, உடைமை மாற்றம், பதிவுச் சான்றிதழின் நகல் பிரதி மற்றும் பதிவுச் சான்றிதழில் திருத்தம் செய்தல் போன்றவற்றுக்கு விண்ணப்பம் செய்து ஒரு வருடத்திற்கு மேலாகியும் இன்றுவரை கிடைக்கப் பெறாதவர்களும் தமது முறையீடுகளை கொழும்பு மோட்டார் போ. ஆணையாளருக்கு எழுத்து மூலம் (ஆங்கிலத்தில்) சமர்பிக்க முடியும்.

சாரதி அனுமதிப்பத்திரம் பெற விரும்பும் அங்கவீனர்களும் தமது கோரிக்கைகளை நடமாடும் சேவையில் முன்வைக்கலாம்.

சக்தியற்றோர் உபயோகிக்கின்ற இதுவரை பதிவுசெய்யாத வாகனங்களுக்குரிய உரிமையாளர்களும் தமது கோரிக்கைகளை நடமாடும் சேவையில் முன்வைக்கலாம்.

வேறு எந்த மோ.போ.திணைக்கள செயற்பாடுகள் பற்றியும் தங்களது பிரச்சினைகளை நடமாடும் சேவையில் முன்வைக்கலாம்.

இதேசமயம் தவிர்க்க முடியாத காரணங்கள் இருந்தால் மட்டும் தமிழிலும் முறைப்பாடுகளை சமர்ப்பிக்க முடியும். ஆயினும், தமிழில் சமர்ப்பிக்கப்படும் முறைப்பாடுகளை மொழி பெயர்ப்பதற்கு காலதாமதம் ஏற்படக் கூடும் என்று கூறப்பட்டது.

(ஒ-9)




**அச்சுவேலி வட்ட லயன்ஸ் கழகத்துக்கு வருகை தந்த சர்வதேச லயன்ஸ் கழக 306பி மாவட்ட ஆளுநர் டாக்டர் றோகான் பெரேராவுக்கு அச்சுவேலி வட்ட லயன்ஸ் கழகத் தலைவர் டாக்டர் சி.இராஜலிங்கம் பொன்னாடை போர்த்துக் கௌரவிப்பதைப் படத்தில் காணலாம்.**

***(படம்: கோப்பாய் செய்தியாளர்)***

# நிவாரணம் வெட்டப்பட்டமைக்கு மீனவக் குடும்பங்கள் ஆட்சேபம்

யாழ்ப்பாணம்,ஒக்.19

குடத்தனைப் பகுதியைச் சேர்ந்த 85 குடும்பங்களுக்கு கடந்த ஆறு மாத காலமாக மீனவ நிவாரணம் வெட்டப்பட்டுள்ளது தொடர்பாக அப்பகுதி மீனவ குடும்பங்கள் நேற்று முன்தினம் யாழ் அரச அதிபர் செபத்மநாதனை சந்தித்து கலந்துரையாடியுள்ளன.

கடந்த 7 வருடங்களாக வழங்கப்பட்டு வந்த நிவாரணத்தை கடந்த ஏப்ரல் மாதம் முதல் நிறுத்தியுள்ளமையால் தமது குடும்பங்கள் நாளாந்த ஜீவனோபாயத்துக்கு மிகவும் கஷ்டப்படுவதாகவும் -

தமது சொந்த இடங்கள் உயர் பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளமையினால் தமது தொழில முயற்சிகளும் பாதிக்கப்பட்டுள்ளது. என்றும் -

குடத்தனைப் பகுதி மீனவ குடும்பங்கள் யாழ். அரச அதிபரிடம் தெரிவித்துள்ளன.

எனவே, மீண்டும் தமக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென அக்குடும்பங்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

இது தொடர்பில் அக்குடும்பங்களின் சரியான நிலைவரம் குறித்து மீள்பரிசீலனை செய்யப்பட்ட பின்னர் முடிவு எடுக்கப்படும் என யாழ். அரச அதிபர் தெரிவித்ததாக குடத்தனைப் பகுதி மீனவர் குடும்பத்தை சேர்ந்த ஒருவர் கூறினார்.

(ம-9)

# ஊழல் மலிந்த உலக நாடுகளின் பட்டியல்

இன்று நமது நாட்டில் மட்டுமன்றி உலகின் பல நாடுகளிலும் சகல துறைகளிலும் ஊழல்கள் மலிந்துள்ளதாகக் குற்றஞ்சாட்டப்படுகிறது. அரச மற்றும் தனியார் துறைகளில் பரவலாக இடம்பெறும் இந்த ஊழல் சம்பவங்களைக் கட்டுப்படுத்த அரசுகள் பலவித நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் நிலையில், அவற்றை இலகுவில் நிறைவேற்ற முடியாதிருப்பதைக் கண்கூடாகக் காணமுடிகிறது. இதற்கான முக்கிய காரணம் உயர் பதவிகளை வகிக்கும் அரச அதிகாரிகள் மட்டுமன்றி, அதிகாரத்திலுள்ள அரசியல்வாதிகளும் இந்த ஊழல் நடவடிக்கைகளில் வெளிப்படையாகவோ அல்லது மறைமுகமாகவோ சம்பந்தப்பட்டிருப்பதேயாகும்.

இவற்றைக் கருத்தில்கொண்டு இவ்வகை ஊழல் நடவடிக்கைகளில சம்பந்தப்படும் நாடுகள் குறித்து உலக மக்களுக்குத் தெரியப்படுத்தும் நோக்கில் "சர்வதேச டிரான்ஸ்பெரன்சி" என்ற அமைப்பு தான் மேற்கொண்ட மதிப்பீடுகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட பட்டியலொன்றை அண்மையில் பகிரங்கமாக வெளியிட்டுள்ளது. இந் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டுள்ள பட்டியலில் தற்போது ஊழல் நடவடிக்கைகள் இடம்பெறும் 133 நாடுகளின் பெயர்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அந்த நாடுகளின் அரச அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகளால் மேற்கொள்ளப்பட்ட ஊழல் சம்பவங்கள் தொடர்பாக விரிவாக, நுணுக்கமாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டதன் அடிப்படையிலேயே இப்பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

மிகக்குறைந்த அளவிலான ஊழல் நடவடிக்கைகள் இடம்பெறும் நாட்டை முதலாவதாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டு அதிகூடிய ஊழல் இடம்பெறும் நாட்டை கடைசியாகக் குறிப்பிடும் வகையில் தயாரிக்கப்பட்ட இப்பட்டியலில் சுவாரஸ்யமான பல தகவல்களைக் காணக் கூடியதாகவுள்ளது.

இப்பட்டியலின்படி உலகிலேயே மிகக்குறைந்த அளவில் ஊழல் நடவடிக்கைகள் இடம்பெறும் நாடாகப் பின்லாந்து தெரிவு செய்யப்பட்டிருப்பதுடன் அதிகூடிய ஊழல் நடவடிக்கைகளில் சம்பந்தப்பட்டுள்ள நாடாகப் பங்களாதேஷ் குறிப்பிடப்பட்டுள்ளது.

சின்னஞ்சிறு நாடான இலங்கையில் எங்கும் எதிலும் ஊழல் மலிந்து காணப்படுவதாக அண்மைக்காலத்தில் கூக்குரல் எழுப்பப்படுவது நாமெல்லாம் அறிந்தவொன்றே. இந்த வகையில் இலங்கை இந்தப் பட்டியலில் 66 ஆவது இடத்தை வகிக்கிறது.

இந்த வகையில் ஊழல் சம்பவங்கள் ஆகக்குறைந்த அளவில் இடம்பெறும் முதல் ஐந்து நாடுகளில் தென்கிழக்கு ஆசியாவைச் சேர்ந்த சிங்கப்பூர் ஐந்தாவது இடத்தை வகிப்பது குறித்து ஆசிய நாட்டவர்கள் என்ற வகையில் நாமெல்லோரும் பெருமைப்பட்டுக் கொள்ளமுடியும்.

நாகரிகத்தில் முன்னேறிய நாடுகள் எனக் கூறப்படும் வல்லரசு நாடுகளெல்லாம் இப்பட்டியலில் பின்தளளப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

அதேவேளை, 'சார்க்' கூட்டமைப்பு நாடுகளில் அங்கம் வகிக்கும் 'பங்களாதேஷ்' உலகில் ஊழல் அதிகம் இடம்பெறும் நாடாக கணிக்கப்பட்டிருப்பது ஆசிய நாட்டவர்கள் என்ற வகையில் நமக்குத் தலைகுனிவை ஏற்படுத்தும் ஒரு விடயமாக அமைகிறது.

இக்கணிப்பீட்டின் பிரகாரம் ஆகக் குறைந்த அளவில் ஊழல் இடம்பெறும நாடான பின்லாந்து 10 புள்ளிகளில் 9.7 புள்ளிகளைப் பெற்று முன்னணியில் உள்ளது. இதில் சிங்கப்பூருக்கு 9.4 புள்ளிகளும், நோர்வேக்கு 8.8 புள்ளிகளும் வழங்கப்பட்டுள்ளன. அந்த வகையில் ஸ்ரீலங்கா, இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கு முறையே 3.4, 2.8 மற்றும் 2.5 புள்ளிகள் வழங்கப்பட்டுள்ளன.

**ஆகக்குறைந்த ஊழல் இடம்பெறும் நாடுகளிலிருந்து ஆரம்பித்து............**

| வகிக்கும் நிலை | | நாடுகள் |
|---|---|---|
| 1 | - | பின்லாந்து |
| 2 | - | அயிஸ்லாந்து |
| 3 | - | டென்மார்க், நியூஸிலாந்து |
| 5 | - | சிங்கப்பூர் |
| 6 | - | சுவீடன் |
| 7 | - | நதர்லாந்து |
| 8 | - | ஆஸ்திரேலியா, நோர்வே, சுவிற்சர்லாந்து |
| 11 | - | பிரிட்டன், கனடா, லக்ஷம்பர்க் |
| 14 | - | ஹொங்ஹொங், ஒஸ்ரியா |
| 16 | - | ஜேர்மனி |
| 17 | - | பெல்ஜியம் |
| 18 | - | அயர்லாந்து, அமெரிக்கா |
| 20 | - | சிலி |
| 21 | - | இஸ்ரேல், ஜப்பான் |
| 23 | - | பிரான்ஸ், ஸ்பெயின் |
| 30 | - | பொஸ்வானா, தாய்வான் |
| 37 | - | மலேசியா, ஐக்கிய அரபு இராச்சியம் |
| 46 | - | பொலீவியா, சவூதி அரேபியா |
| 48 | - | தென் ஆபிரிக்கா |
| 50 | - | தென்கொரியா |
| 66 | - | சீனா, இலங்கை, பனாமா |
| 70 | - | பொஸ்னியா, எகிப்து, தாய்லாந்து |
| 78 | - | ஈரான், லெபனான், பலஸ்தீனம் |
| 83 | - | இந்தியா,ருமேனியா |
| 86 | - | ரஷ்யா, மொசாம்பிக் |
| 92 | - | பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ், சம்பியா |
| 124 | - | அங்கோலா, கமரூன் |
| 129 | - | மியன்மார், பரகுவே |
| 131 | - | ஹயிட் |
| 132 | - | நைஜீரியா |
| 133 | - | பங்களாதேஷ் |



**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் ஆரம்பக்கல்வி மன்றத்தின் 'ஆரம்ப அருவி' சஞ்சிகை அண்மையில் வெளியிட்டு வைக்கப்பெற்றது. சஞ்சிகையினை கல்லூரியின் உபபீடாதிபதி பா.தனபாலன் பீடாதியிடம் கையளிக்கின்றார்.**

# சாவகச்சேரி அஞ்சல் அலுவலக கட்டடம் இடிந்து வீழ்ந்தது

தென்மராட்சி,ஒக்.19

சாவகச்சேரி அஞ்சல் அலுவலகக கட்டடம் இடிந்து வீழ்ந்ததில் அங்கு நிறுத்திவைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளும் இரண்டு சைக்கிள் களும் பலத்த சேதமடைந்தன. ஊழியர்கள் வெளியே பாய்ந்ததால் எவருக்கும் காயமேற்படவில்லை.

கடந்த வியாழக்கிழமை காலை 10 மணியளவில் இச்சம்பவம் இடம் பெற்றது.

சாவகச்சேரி அஞ்சலகக் கட்டடம் சேதமடைந்ததால் அருகில் உள்ள முன்னர் தபால் வண்டில்கள் நிறுத்தப் பயன்படுத்தப்பட்ட இடத்திலேயே தற்போது ஊழியர்கள் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். அந்த வேளையில் திடீரென தூண் சாய்ந்தது. இதனைக் கண்டு ஊழியர்கள் வெளியே பாய்ந்தோடினர். அப்போது கூரைப்பகுதி முழுமையாக வீழ்ந்து சேதமடைந்தது.

(ஒ-117)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்/ ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம்

## பதவி வெற்றிடங்கள்

மேற்படி நிறுவனத்திற்கு தொழில்நுட்ப பயிலுநர் ஒருவரும் புனர்வாழ்வுப் பணியாளர் (Rehabilitation Worker) ஒருவரும் உடனடியாகத் தேவைப்படுகின்றனர்.

G.C.E.A/L இல் உயிரியல் விஞ்ஞானத்தில் சித்தியடைந்த பெண்கள் மட்டும் நேர்முகத் தெரிவிற்கு சுயவிவரங்களுடன் எதிர்வரும் 22 ஆம் 23 ஆம் திகதிகளில் காலை 10.00 - 12.30, மாலை 3.00 - 4.30 மணிக்கிடையில் இல.5, பழைய பூங்கா வீதி, சுண்டிக்குளியில் அமைந்துள்ள எங்கள் பணிமனைக்கு நேரில் சமுகம் தரவும்.

தி.யோகநாதன்
தலைவர்.

(C/30848) (24-19-18)

## வழிப்பறித் திருடன் விரட்டிப்பிடிப்பு!

கடைக்குச் சென்ற பெண்ணின் தாலிக்கொடியை அபகரிக்க முயன்றவர் பொது மக்களிடம் சிக்கினார். நாயன்மார்கட்டு, குளத்தடி வீதியில் நேற்றுமுன்தினம் இச்சம்பவம் இடம்பெற்றது.

இப்பெண்மணி கடைக்குச் சென்ற போது சைக்கிளில் வந்த நபர் ஒருவர் தாலிக்கொடியை பற்றி இழுத்ததாகவும் - அப்போது தாலியைப் பிடித்தபடி அப்பெண் அவலக்குரல் எழுப்பியதாகவும் -

இதனால், சைக்கிளில் தப்பமுயன்ற திருடனை அவ்வழியே ஓட்டோவில் வந்தவர்கள் விரட்டிப் பிடித்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-180)

## 21 ஆவது நாள் நினைவஞ்சலி

எமது முன்னாள் இணைப்பதிகாரியான

அமரர்

### நடராஜா ஜீவேஸ்வரா



தோற்றம் 25.04.1935 மறைவு 29.09.2003

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சோமசுந்தரம் அவனியூ,
யாழ்ப்பாணம்.
- மனித உரிமைகள் ஆணைக்குழு.

(C/30876) (24-19-18)




தித்திக்கும் தீபாவளியை முன்னிட்டு.....!

உங்களுக்குத் தேவையான அனைத்து ஜவுளி, ஆடை, சாறி வகைகளை மலிவு விலையில் பெற்றுக்கொள்ள

மிலேனியம் பெஷன் & பொம்பே பஸார்

10, மின்சார நிலைய வீதி,
பெரியகடை, யாழ்ப்பாணம் (மலாயன் கபே முன்).

3000/= ரூபாவுக்கு மேல் கொள்வனவு செய்பவர்களுக்கு சிறுவர்களுக்கான ஸ்கூல் பாக் ஒன்று இலவசமாக வழங்கப்படும்.

0777 311486 (C/30690) (25-24-19-18)


## ஈர விழிகளுடன் 90ஆம் நாள் நினைவு

தோற்றம் 23 - 04 - 1953



மறைவு 23 - 07 - 2003

### அமரர் சிற்றம்பலம் ராதாகாந்தி

நகர்ந்தது நாள் தொண்ணூறு
நாம் இங்கு ஆறவில்லை இன்னும்
வேண்டியதை தரும் அந்த இறைவனிடம்
வேண்டிடுவோம் ஆத்மசாந்தி கொடு என்று.
*சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

உங்கள் பிரிவுத்துயரில்:
சி.சிற்றம்பலம் (காந்தி - தந்தை),
மனைவி, பிள்ளைகள் (கனடா).

புலோலி கிழக்கு,
புலோலி. (24-19-18) (23790)








உலகப் புகழ் பெற்ற L.G
குளிர்சாதனப் பெட்டிகள்
Abans நிறுவனத்தின்
உத்தரவாதத்துடன்
இலவச விநியோக
சேவையில் பெற்றிட

LG
Digitally yours

JAFFNA ELECTRICALS
Authorised Dealer For
Abans
141, POWER HOUSE ROAD, JAFFNA TEL: 021-222-5766 (C-20881)

சிறுக சிறுக
பிள்ளைகளுக்காக
குடும்பத்துக்காக
நாட்டுக்காக
நமக்காக
சில்லறைகளானாலும்
சேமிப்போம்.



ஒக்டோபர் மாதம் தேசிய சேமிப்பு வங்கியின் சேமிப்பு மாதமாகும். சேமிப்பு பழக்கத்தை ஊக்குவிப்பதற்கு உதவுங்கள். "சிக்கனமும் சேமிப்பும்" என்ற தலைப்பிலான சுவரொட்டி போட்டியில் கலந்துகொள்ளுமாறு நாம் உங்களை அழைக்கின்றோம். உங்கள் சுவரொட்டிகள் மூலம் நீங்கள் நாம் ஏன் சேமிக்க வேண்டுமென்பதை முழு உலகத்துக்கும் எடுத்துரைக்கவேண்டும். ஒவ்வொரு நாளும் சிறிதளவு சில்லறை இதற்கு எவ்விதம் உதவும் என்பதையும் தெரிவிக்க வேண்டும். வெற்றி பெறுபவர்களுக்கு பெறுமதியான பரிசுகளும் வழங்கப்படும். 3 பிரிவுகளாக போட்டிகள் நடத்தப்படும். 10 வயதுக்கும் 18 வயதுக்கும் குறைந்த இரு பிரிவுகளிலும் போட்டிகள் இடம்பெறும். சுவரொட்டிகளுக்கு 10 வயதுக்கு குறைந்த பிரிவுக்கு பாடசாலை அதிபரினதும் 18 வயதுக்கு குறைந்த பிரிவுக்கு பாடசாலை அதிபர், பிரதேச தபால் அதிபர் அல்லது NSB வங்கி கிளை முகாமையாளரின் சான்று கையெழுத்து அவசியமாகும். 3வது திறந்த பிரிவு ஆகும். உங்கள் சுவரொட்டிகளை ஒக்டோபர் மாதம் 31ம் திகதிக்கு முன்னர், சுவரொட்டி போட்டி, சந்தைப்படுத்தல் பிரிவு, தேசிய சேமிப்பு வங்கி, 255, காலி வீதி, கொழும்பு 3 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

NSB
தேசிய சேமிப்பு வங்கி

PHOENIX O&M 1963


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தத்தால்

# அழிந்த வடகிழக்கு

20 வருடகாலமாக இடம்பெற்று வந்த யுத்தத்தால் முழுமையாக அழிந்த வட கிழக்கு மாகாணத்தை கட்டியெழுப்பி இடம்பெயர்ந்த மக்களை மீண்டும் குடியமர்த்தல் உட்பட கடினமான பணிகளை மேற்கொள்ள தென்னிலங்கையிலிருந்து நியமனம் பெற்ற பேராசிரியர் ஜயலத் ஜயவர்த்தன அவர்களை வடக்கிற்கு பொறுப்பான அமைச்சராக கௌரவ பிரதமர் ரனில் விக்ரமசிங்க அவர்கள் நியமித்தார்.

அன்றும் எதிர்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினராக ஜயலத் ஜயவர்த்தன வடகிழக்கு யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு விஷேட பணிகளை மேற்கொண்ட மக்கள் பிரதிநிதியாவார். அவரது இந்தபணி பிரதமர் ரணில் விக்ரமசிங்க அவர்களின் சமாதான பணிகளுக்கும் உந்துசத்தியாக இருந்தது. 2001 பொதுதேர்தலுக்கு பின்னர் அமைக்கப்பட்ட புதிய அமைச்சரவையில் புனருத்தாரன மீள் குடியமர்த்தல் மற்றும் அகதிகள் விவகார அமைச்சராக பாரிய சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது.

வடக்கை மீண்டும் கட்டியெழுப்புதல் எட்டு இலட்சம் அளவிலான அகதிகளை மீள்குடியமர்த்தல் போன்ற பணிகள் குறுகியகால வரையறைக்குள் மேற்கொள்ள முடியாதவை. சமாதான முயற்சிகளின் போக்குடன் செய்யவேண்டியவை.

அது ஒரு பக்கத்தின் யதார்த்தமானபோதும் இரு தசாப்த காலமாக துன்பங்களை அனுபவித்த மக்களின் அவசர அபிலாஷைகள் தேவைகள் மூலமாக உடனடி பெறுபேறுகளை எதிர்பார்க்கிறார்கள்.

புதிய அமைச்சரான ஜயலத் ஜயவர்த்தன அவர்களுக்கு குறுகிய காலத்தில் தடைகள் மற்றும்பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க நேரிட்டுள்ளது.அதேபோலவே கேலி பேச்சுகளுக்கும், ஆளாக வேண்டியுள்ளது.இவ்வெல்லா செயற்பாடுகளுக்கு மத்தியிலும் மனந்தளராமல் வடக்கை மீண்டும் கட்டியெழுப்ப இரவு பகல் பாராமல் பணிசெய்து வருகிறார்.புனருத்தாரன மற்றும் மீள் குடியமர்த்தும் பணி சமாதான முயற்சிகளை பலப்படுத்துவதில் நேரடியாக தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

இத்தேசிய பணிக்காக பல்வேறு சர்வதேச அமைப்புகளின் மனதை கவர்ந்து அதன் ஒத்துழைப்பை தமது அமைச்சுக்கு பெற்றுகொள்ள ஜயலத் ஜயவர்த்தன குறுகிய காலத்துக்குள் வெற்றிகரமான முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

1968 முதல் இலங்கையில் இயங்கிவரும் ஐக்கிய நாடுகள் அமைப்புக்கு சார்ந்த உலக உணவு வேலைதிட்டத்தின் கீழ் PRRO SRI 10067 நிகழ்ச்சி திட்டம் புனருத்தாரன மீள்குடியமர்த்தல் மற்றும் அகதிகள் அமைச்சுக்கு பெற்று கொண்டார். அதன் மூலம் அழிந்துபோன வடகிழக்கை கட்டியெழுப்ப டொலர் மில்லியன் 22.89 பங்களிப்பு எமது நாட்டுக்கு கிட்டியது.

உலக உணவு திட்டத்தின் தற்போதைய வதிவிட பிரதிநிதி ஜெப் டெப் டிக் அவர்கள் யுத்தத்தால் அழிந்து போன பிரதேசங்களின் மக்களுடைய உடல் உள்ளத்துக்கு உலக உணவு திட்டத்தை இணைத்து மக்கள் இயக்கமாக செய்துள்ளார்.

அழிந்துபோன பாதைகள், பாலங்கள், வயல்வெளிகள், மீண்டும் புனரமைக்க மட்டுமல்ல அகதிகளை மீள் குடியமர்த்த, அப்பாவி சிறார்களுக்கு கல்வி கற்பதற்கு ஒத்துழைப்பு வழங்க, குழந்தைகளினதும் கர்ப்பிணி தாய்மார்களினதும் போஷாக்கின்மையை இல்லாதொழிக்க சுகாதார சேவைகளை வழங்கிய ஜயலத் ஜயவர்த்தன உலக உணவு திட்டத்தை மிக சிறப்பாக பயன் படுத்தியுள்ளார்.

வடகிழக்கில் இம்முறை கிடைத்த பாரிய அளவிலான நெல் விளைச்சலுக்கும் உலக உணவு திட்டத்தின் பங்களிப்பை வழங்கியது. பல ஆண்டுகளாக அழிந்து போய் கிடந்த குளங்களை கட்டியெழுப்ப சிரமத்துக்கு உணவு வழங்கும்- வேலைத்திட்டத்தின் கீழ் ஜயலத் ஜயவர்த்தன அவர்கள் செயல்பட்டதாலே ஆகும்.

**2003 அக்டோபர் மாதம் 16 ம் திகதி உலக உணவு தினம் கொண்டாடப்படுகிறது.**
**வடகிழக்கு பிரதேசத்துக்காக அமைச்சருடன் உலக உணவு திட்டம் வழங்கிய பங்களிப்புகளில் ---**

### a சிரமத்துக்கு உணவு வழங்கல்

| மாவட்டம் | நன்மை அடைந்த மக்கள் | பணப்பெறுமதி (ரூ.மில்லியன்களில்) |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | 65,382 | 30.761 |
| கிளிநொச்சி | 76,167 | 29.117 |
| முல்லைத்தீவு | 92,515 | 38.372 |
| வவுனியா | 18,914 | 13.372 |
| மன்னார் | 46,038 | 27.116 |
| திருகோணமலை | 80,145 | 46.014 |
| பொலன்னறுவை | 38,521 | 21.791 |
| மொத்தம் | 417,682 | 206.924 |

### b கல்விக்கு உணவு

| மாவட்டம் | நன்மை அடைந்த மாணவர்கள் | பணப்பெறுமதி (ரூ.மில்லியன்களில்) |
|---|---|---|
| கிளிநொச்சி | 5,150 | 2.719 |
| வவுனியா | 7,454 | 3.935 |
| பொலன்னறுவை | 7,533 | 3.977 |
| மட்டகளப்பு | 4,684 | 2.473 |
| மொத்தம் | 24,821 | 13.104 |

### c குழந்தை மற்றும் தாய்மார்களின் போசன நிகழ்ச்சி திட்டம்

| மாவட்டம் | நன்மை அடைந்த குழந்தைகள் மற்றும் தாய்மார்களின் எண்ணிக்கை | பணப்பெறுமதி (ரூ.மில்லியன்களில்) |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | 38,040 | 13.123 |
| கிளிநொச்சி | 10,325 | 6.442 |
| முல்லைத்தீவு | 10,909 | 6.296 |
| வவுனியா | 15,079 | 9,409 |
| மன்னார் | 9,549 | 5.955 |
| பொலன்னறுவை | 15,557 | 54.884 |
| மொத்தம் | 99,459 | 96,109 |

### d சுகாதார தொண்டர் பணியாளர்கள்

| மாவட்டம் | நன்மை அடைந்த பணியாளர்கள் | பணப்பெறுமதி (ரூ.மில்லியன்களில்) |
|---|---|---|
| கிளிநொச்சி | 284 | 6.3376 |
| முல்லைத்தீவு | 216 | 4.769 |
| மன்னார் | 84 | 1.854 |
| மொத்தம் | 584 | 12.96 |

சிரமத்துக்கு உணவு வழங்கும் நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் 2002/2003 ஆண்டுகளில் வடகிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களில் குளக்கட்டுக்கள், கால்வாய்கள் 85 மற்றும் வீதிகள் 173 அளவில் ஏற்கனவே புனரமைக்கப்பட்டுள்ளன.

பேராசிரியர் ஜயலத் ஜயவர்த்தன அவர்களின் விஷேட வேண்டுகோளுக்கிணங்க வடகிழக்கு பகுதிகளின் எல்லைப்புறத்தில் அமைந்துள்ள அநுராதபுரம் மற்றும் பொலன்னறுவை மாவட்டங்களுக்கும் உலக உணவு திட்டம் வியாபிக்கப்பட்டுள்ளது. அதனால் யுத்தத்தால் துன்பம் அநுபவித்த சிங்கள ,தமிழ்,முஸ்லிம் மக்களுக்கும் நன்மை கிடைக்கும் .

புனருத்தாரன மீள்குடியமர்த்தல் மற்றும் அகதிகள் விவகார அமைச்சு
மற்றும்
உலக உணவு திட்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மங்களகரமான திறப்பு விழா

நிகழும் சுபானு வருடம் ஐப்பசி மாதம்
3 ஆம் நாள் நாளை (20.10.2003)
திங்கட்கிழமை காலை 6.10 மணிமுதல்
காலை 7.20 மணிக்குள் வரும் சுபநேரத்தில்
ஆரம்பிக்கவிருக்கும்





## நெல்லை சில்க்

# Nellai Silk

**MAIN STREET, NELLIYADI. Tel.: 021 2263207**

புடைவையகத்தின் திறப்பு விழாவிற்கு இந்த
அழைப்பினையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்று
அன்பர்கள் அனைவரையும் தங்கள்
குடும்ப சகிதம் வருகை தந்து
எமது வளர்ச்சிக்கு வாழ்த்துக்களைத்
தெரிவிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

திருமகள் கட்டடம்,
பிரதான வீதி,
நெல்லியடி.
☎ 021 - 2263207

S.அகிலன்
நெல்லைக்குமரன் ரேடர்ஸ்.

(சி-30894) (24-18-19)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னையின் மடியில்
1948 - 11 - 17

ஆண்டவன் அடியில்
2002 - 10 - 19

அமரர் கலைஞானகேசரி / அண்ணாவியார்

### சூசைப்பிள்ளை றோக் (யோகராசா)

தந்தையாய் எங்களைத் தயவுகள் காட்டி
தத்தித்தவழ்ந்து நடக்கக் கரம்பிடித்து
தரணி புகழோங்க கல்வியும் புகட்டி
தலைநிமிர்ந்து வாழத்தடைகளை நீக்கி
தலைவனாய் விருட்சமாய் நடிகனாய் வாழ்ந்து
தமிழுக்கும் கலைகளால் குரல்வளம் ஈந்து
தத்தளிக்க வைத்தெம்மைத் துயின்று மீளாததேனோ?

மணற்காடு,
குடத்தனை.

தற்போதைய முகவரி:
சூசையப்பர் கோவில் வீதி.
புலோலி கிழக்கு, புலோலி.

- குடும்பத்தினர்.

(23807) (25-24-18-19)

## மரண அறிவித்தல்

### போல்ப்பிள்ளை எட்வேட் நவராஜசிங்கம் (ராஜன்)

பழைய பூங்கா வீதியைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், புது வீதி, கொய்யாத்தோட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட போல்ப்பிள்ளை எட்வேட் நவராஜசிங்கம் அவர்கள் 17.10.2003 வெள்ளிக்கிழமை இரவு காலமாகிவிட்டார்.

அன்னார் ரட்ணசிங்கம் போல்ப்பிள்ளை - தவமணி அவர்களின் அன்பு மகனும் காலஞ்சென்ற சின்னத்துரை மற்றும் மேரிதிரேசா அவர்களின் அன்பு மருமகனும் சத்தியவதனி (ராசாத்தி) அவர்களின் அன்புக் கணவரும் சுமைதிலி (கனடா), சுரேஸ்குமார் (தனியார் கல்வி நிறுவன ஆசிரியா), சாந்தினி (சூட்டி, யாழ். பல்கலைக்கழக 2 ஆம் வருட மாணவி, சித்திரமும் வடிவமைப்பும் - நுண்கலைப்பீடம்), சுகுணா, லக்ஷாயினி ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் றூபன் (பிரான்ஸ்), றஞ்சன் (பிரான்ஸ்), ஜொய்சி (கனடா) ஆகியோரின் அருமைச் சகோதரனும் ராஜன் (கனடா) அவர்களின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (20.10.2003) திங்கட்கிழமை மாலை 3.00 மணிக்கு யாழ். மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின்னர் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 4, புது வீதி,
கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்.

(23817) (24-18-19)

# ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலய
## மாணவர்கள் தேசியமட்டத்தில் கால்பதித்தமைக்கான
# பாராட்டு விழா - 2003



வடக்கு - கிழக்கு மாகாண சம்பியனாகி
தேசியமட்டத்தில் கால்பதித்த வீரர்கள் (உடற்பயிற்சி - 2003)



வடக்கு - கிழக்கு மாகாணத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்றவர்களும்
தேசியமட்டத்தில் கால்பதித்த வீரர்களும் பயிற்றுநர்களும்
(கரபந்தாட்டம் - 2003)

இடம்: பாடசாலை மண்டபம்
காலம்: இன்று (19.10.2003) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 1.00 மணி (பு.நே.)

தலைமை
திரு.க.பிரபாகரன் (பழைய மாணவர் சங்க செயலாளர்)
திருமதி சூ.ஜெயவீரசிங்கம் (அதிபர் ஆனைக்கோட்டை, பாலசுப்பிரமணியம் வித்தியாலயம்)

பிரதம விருந்தினர்
திருமதி றெஜீனா இருதயநாதன் (வலயக் கல்விப் பணிப்பாளர், வலிகாம வலயம்)

சிறப்பு விருந்தினர்கள்
திரு.க.தனபாலசிங்கம் (கோட்டக் கல்விப் பணிப்பாளர், சண்டிலிப்பாய் கோட்டம்)
திரு.கவியன்பன் (தமிழீழ கல்விப் பொறுப்பாளர், யாழ். மாவட்டம்)
திரு.மு.லோகநாதன் (ஆசிரிய ஆலோசகர், உடற்கல்வி, வலிகாம வலயம்)

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

பழைய மாணவர் சங்கம்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம், நலன் விரும்பிகள்.

(23821) (24-18-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருணோதயா, வசாவிளான் சென்றல் உதைபந்தாட்டத்தில் சம்பியன்கள்

வலி.வடக்கு,ஒக்.19

வலிகாமம் கல்விவலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் அருணோதயாக் கல்லூரி, வசாவிளான் மத்திய மகாவித்தியாலயம் என்பன வலயச்சம்பியன்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இந்தச் சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டங்கள் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் வலிகாமம் கல்விவலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் க.சுந்தரசிவம் தலைமையில் இடம்பெற்றன.

16 வயதுப்பிரிவில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரியும், மானிப்பாய் இந்துக்கல்லூரியும் மோதின. முதல் பாதி ஆட்டம் முடிவடைவதற்கு சில நிமிடம் இருந்த நிலையில் அருணோதயாக் கல்லூரி ஒரு கோலை பெற்றுக் கொண்டது.

இரண்டாவது பாதி ஆட்டம் ஆரம்பமாகியதைத் தொடர்ந்து மீண்டும் ஒரு கோலை போட்டு முன்னிலையை உறுதிப்படுத்திக் கொண்டது அருணோதயாக் கல்லூரி. மானிப்பாய் இந்துக் கல்லூரி கோல்கள் பெறுவதற்கு முயற்சித்த போதிலும் கோல்களைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை. ஆட்டமுடிவில் 2 இற்கு 0 என்ற கோல்கணக்கில் அருணோதயாக் கல்லூரி வெற்றி பெற்று சம்பியனாகியது.

18 வயதுப் பிரிவில் வசாவிளான் மத்திய மகாவித்தியாலயமும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும் மோதின.

முதல்பாதி ஆட்டம் தொடங்கிய சில நிமிட நேரத்தில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி ஒரு கோலை பெற்றுக்கொண்டது. முதல்பாதி ஆட்டம் முடிவடையும் வரை தொடர்ந்து கோல்களைப் பெற முடியாத நிலையில் 1 இற்கு 0 என்ற கோல் கணக்கில் முதல் பாதி ஆட்டம் முடிவடைந்தது.

இரண்டாம் பாதி ஆட்டம் தொடங்கியதும் வசாவிளான் மத்திய மகாவித்தியால வீரர்கள் விளையாட்டை வேகப்படுத்திக் கொண்டனர். சில நிமிட நேரத்தில் தமது முதலாவது கோலைப் பெற்று வசாவிளான் வீரர்கள் ஆட்டத்தை சமப்படுத்திக் கொண்டனர். தொடர்ந்து இரண்டாவது கோலையும் வசாவிளான் வீரர்கள் பெற்று முன்னிலைக்கு வந்தனர். மீண்டும் ஆட்டம் முடிவடைவதற்கு சில நிமிடங்கள் இருக்கும்போது மீண்டும் ஒரு கோலை வசாவிளான் வீரர்கள் பெற்று தமது வெற்றியை உறுதிப்படுத்திக் கொண்டனர்.

ஆட்ட முடிவில் 3 இற்கு ஒன்று என்ற கோல் கணக்கில் வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியை வெற்றி கொண்டு சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.

இறுதி ஆட்டத்தில் கலந்துகொண்ட இரு அணிகளும் தொடர்ந்து இடம்பெறவுள்ள மாவட்டப் போட்டிகளுக்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளன. (ஒ-86)

## லீக் கூட்டம்

வலி.வடக்கு,ஒக்.19

வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் கூட்டம் இன்று காலை 10.00 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் சேது விபுலானந்தா தலைமையில் இடம்பெறவுள்ளது.

இக்கூட்டத்தில் வலிகாமம் உதைபந்தாட்ட லீக்குக்கு உட்பட்ட கழகங்களின் பிரதிநிதிகளை கலந்துகொள்ளும்படி வேண்டப்பட்டுள்ளனர்.(ஒ-86)

# தேசிய சதுரங்க அணியில் இடம்பிடித்தார் யாழ்.வீரர்



யாழ்ப்பாணம்,ஒக்.19

யாழ். மாவட்ட சதுரங்க சம்மேளனத்தைச் சேர்ந்த எஸ்.சிவோதயன் இலங்கை தேசிய அணிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அண்மையில் கொழும்பில் இடம்பெற்ற தேசிய சதுரங்க வீரர்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிகளில் சிறப்பாக விளையாடிய சிவோதயன் 8 புள்ளிகளைப் பெற்று தேசிய சதுரங்க அணியில் இடம்பிடித்தார்.

இவருடன் அத்துல் ரஸல்ட், டுவான் எதிரி சிங்க, ஏ.ரீ.பி. அத்துகோறள மற்றும் எம்.டி. ஜெயசிங்க ஆகியோரும் இவ்வணிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

நல்லூரைச் சேர்ந்த டாக்டர் சிவானந்தன் - கமலராணி தம்பதிகளின் புதல்வரான சிவோதயன் யாழ்.இந்துக் கல்லூரி பழைய மாணவனும், சதுரங்க பயிற்றுநருமாவார்.

கடந்த 10 வருடங்களாக யாழ். மாவட்ட மட்ட சதுரங்கப் போட்டிகளில பங்குபற்றி பல தடவைகள் முதலாம் இடத்தைப் பெற்ற இவர் அண்மையில் கொழும்பு இஸபத்தான கல்லூரியில் நடைபெற்ற சதுரங்கப்போட்டியில் தங்கப் பதக்கத்தினைப் பெற்றிருந்தார். (ஒ-5)

# உதைபந்தாட்ட தெரிவுப் போட்டி

யாழ்ப்பாணம்,ஒக்.19

இலங்கைப் பாடசாலைகளின் உதைபந்தாட்டச் சங்கம் 19 வயதுப் பிரிவினர்களுக்கிடையே நடத்தும் 'சங்ஸ்தா' வெற்றிக்கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் யாழ்.மாவட்டத் தெரிவுப் போட்டிகள் எதிர்வரும் 21 ஆம், 22 ஆம் திகதிகளில் யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இவற்றுக்கான அணித்தெரிவு நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது. இதில் பங்குபற்ற விரும்பும் பாடசாலை அணிகள் உரிய விண்ணப்பப் படிவத்தைப் பெற்று விண்ணப்பத்துடன் வீரர்களுக்கான இலங்கைப் பாடசாலைகளின் உதைபந்தாட்டச் சங்கத்தின் அடையாள அட்டையை பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் -

இதற்கான படிவங்களையும் விதிகளையும் இப்போட்டியின் இணைப்பாளரான யாழ்.மத்திய கல்லூரி ஆசிரியர் வி.எஸ்.மகேந்திரனிடம் பெற்றுக்கொள்ளுமாறும் -

யாழ். மத்திய கல்லூரி அதிபர் க.இராசதுரை அறிவித்துள்ளார்.ஒ-5)

## உதைபந்தாட்ட சங்கம் மீளமைப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.19

வலிகாமம் பகுதியில் இயங்கும் உதைபந்தாட்டச் சங்கத்தை மீள ஒழுங்கமைப்பது தொடர்பான கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் பத்து மணிக்கு மருதனார்மடம இராமநாதன் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

வலிகாமத்தில் இயங்கும் சகல விளையாட்டுக்கழகங்களின் பிரதிநிதிகள், உதைபந்தாட்ட மத்தியஸ்தர்கள், விளையாட்டு ஆர்வலர்கள் ஆகியோரை இக்கலந்துரையாடலில் கலந்துகொள்ளுமாறு விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் வி.மாதுளன் கேட்டுள்ளார்.

# விளையாட்டு

## கூடைப்பந்தாட்ட கனிஷ்ட அணி தெரிவுப் பயிற்சி

யாழ்ப்பாணம்,ஒக்.19

யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கத்தின் கனிஷ்ட கூடைப்பந்தாட்ட அணியை தெரிவு செய்வதற்கான பயிற்சிகள் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு யாழ். வேம்படி மகளிர் கல்லூரி ஆடுகளத்தில் இடம்பெறவுள்ளது.

22 வயதிற்குட்பட்டவர்களை இப்பயிற்சியில் பங்குபற்றலாம் என யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டச் செயலாளர் தெரிவித்துள்ளார். (ஒ-5)

## 'டெஸ்ட்' கிரிக்கெட் போட்டி

# வலுவான நிலையில் நியூஸிலாந்து; இந்தியாவும் சிறப்பான தொடக்கம்

மொகாலி,ஒக்.19

இந்திய - நியூஸிலாந்து அணிகளுக்கிடையே மொகாலியில் நடைபெற்று வருகின்ற இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் 3 ஆவது நாளான நேற்று ஆட்டநேர முடிவில் இந்திய அணி ஒரு விக்கெட் இழப்பிற்கு 203 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் வீரேந்தர் ஷேவாக் ஆட்டமிழக்காமல் 128 ஓட்டங்களையும் சோப்ரா 60 ஓட்டங்களையும் பெற்றனர்.

முன்னதாக நேற்றுக்காலை ஆட்டத்தை ஆரம்பித்த நியூஸிலாந்து அணி 630 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்களை இழந்த நிலையில முதல் இன்னிங்ஸ் ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது.

இதில் மக்மிலன் ஆட்டமிழக்காமல் 100 ஓட்டங்களையும் டானியல் வெட்டோரி ஆட்டமிழக்காமல் 48 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

நியூஸிலாந்து அணியின் சார்பில் 4 பேர் சதங்களைப் பெற்றுக்கொண்டனர். லூ வின் சன்ற், மார்க் றிட்சட்ஸன், ஸ்கொட் டைரிஸ், மக்கிமிலன ஆகிய நான்கு பேரும் முறையே 106, 145, 119, 100 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டனர்.

நியூஸிலாந்து அணியின் முதல் இன்னிங்ஸ் ஆட்டத்தில் இந்திய அணி வீரர் அனில் கும்ளே மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினார். (ஒ-10)

# விளையாட்டுப் போட்டிகள்

தென்மராட்சி-ஒக்.19

யாழ். சமூக செயற்பாட்டு மையததின் அனுசரணையுடனும் அகதிகளுக்கான ஐ.நா தூதுவராலயத்தின் நிதி உதவியுடனும் நடத்தப்படும் சாவகச்சேரி பாலர் பாடசாலைகளின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று பி.ப.1.30மணிக்கு மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலய மைதானத்தில யாழ். சமூக செயற்பாட்டு மைய இணைப்பாளர் கு.வி.நிஷாந்தன் தலைமையில நடைபெறும்.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக அகதிகளுக்கான ஐ.நா. தூதுவராலய இணை வெளிக்கள உத்தியோகத்தர் செல்வி சொபியாவும், சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி நகரசபை செயலாளர் மு.செ.சரவணபவ, தென்மராட்சி கல்விவலய பிரதிக கல்விப் பணிப்பாளர் கோ.வரதராசமூர்த்தி, முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர் சு.பாக்கியராசா ஆகியோரும் கலந்துகொள்வர். (ஒ-117)

# குறைந்த செலவில் அதி உச்ச மின்சார பயனைப் பெறமுடியும்

ஒரு காலத்தில் ஒளியைப் பெறுவதற்காகவும் பாரிய இயந்திங்களை இயக்குவதற்காகவும் பயன்படுத்தப்பட்டு வந்த மின்சாரம் இன்று மக்களின் அன்றாட அலுவல்கள் அத்தனைக்கும் அவசியமான தொன்றாகிவிட்டது.

மனித நாகரிகத்தின் வளர்ச்சி மனித தேவைகளை அதிகரிக்கச் செய்து சகலவற்றையும் இயந்திரமயமாக்கியதால் ஒவ்வொரு தேவைக்கும் மின்சாரத்தைப் பயன்படுத்தவேண்டிய அவசியத்தை அது ஏற்படுத்தியுள்ளது.

சனத்தொகை அதிகரிப்புக்கு ஏற்ப மின்சார பாவனையும் அதிகரித்துவிட்டது. வீடுகளில் ஒளியைப் பெறுவதற்கு மட்டுமன்றி தொலைக்காட்சி, வானொலி போன்ற பொழுதுபோக்குச் சாதனங்களை இயக்கவும், குளிர்சாதனப் பெட்டி, மின்சார விசிறி, சமையல் அடுப்பு, துணிகளை துவைக்கும் இயந்திரம், அயன், மிக்ஸி, கிறைண்டர் போன்றவற்றை இயக்கவும் நீர் இறைக்கும் இயந்திரங்களை இயக்கவும் என பல்வேறு தேவைகளுக்கும் மின்சாரம் அத்தியாவசியமாகிவிட்டது.

மனித தேவைகளை நிறைவு செய்வதற்காகவே உற்பத்திகள் நடைபெறுகின்றன. ஏழைகள், பணக்காரர்கள் என்ற வேறுபாடின்றி அனைவருக்கும் தேவைகள் அதிகரித்திருப்பதால் மின்சார உற்பத்தியையும் அதிகரிக்க வேண்டி ஏற்படுகிறது.

இலங்கை மின்சாரசபை தம்மால் முடிந்த வரையில் மின்சாரத்தை உறபத்தி செய்து வழங்கினாலும் கூட, யாழ்ப்பாணத்து மக்களைப் பொறுத்தவரை மின்சாரம் எல்லோருக்கும் திருப்திகரமாகக் கிடைக்கவில்லை என்றே கூறலாம்.

கடந்த காலங்களில் நடைபெற்ற போர் நடவடிக்கைகளால் யாழ்ப்பாண குடாநாட்டின் மின்சாரம் சீர்குலைந்து காணப்பட்டது.

தற்போது ஓரளவுக்கு மின்விநியோகம் இடம்பெற்றாலும் பல இடங்களுக்கு இன்னமும் மின்சார வசதிகள் கிடைக்கவில்லை.

மின்சாரத்தைச் சீராக வழங்க முடியாதிருப்பதால் மின்சாரத்தை பெற்றவர்களாலும், மின்சாரத்தை பெறாதவர்களாலும் ஏற்படும் பல்வேறு பிரச்

**செய்திக் கட்டுரை**

சினைகளை மின்சாரசபை எதிர்கொள்ள வேண்டிய நிலையில் உள்ளது.

மின்சார துஷ்பிரயோகம், சிக்கனததைக் கடைப்பிடிக்காமை, களவாக மின்சாரம் பெறல், பாவனையாளருக்கு வழங்கப்படும் மின் அளவைவிட மேலதிக மின்பாவனை, சட்டபூர்வமாக மின்சாரம் இணைக்கப்பட்ட வீடுகளில் இருந்து மேலதிக வீடுகளுக்கு மின்சாரம் பாவிக்கச்செய்தல், மின்மானியில் மாற்றங்களைச் செய்து மின் அலகை குறைவடையச் செய்தல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளை மக்கள் மேற்கொள்வதால் மின்சார சபைக்கு கூடிய செலவு ஏற்படுவதுடன் உரிய முறையில் கிடைக்கவேண்டிய வருமானமும் கிடைக்காமல் போய் விடுகின்றது.

இக்காரணங்களால் பாவனையாளர்களுக்கு திருப்திகரமான மின்சார வழங்கலை மேற்கொள்ள முடியாமல் இருப்பதாக மின்சார சபையினர் தெரிவிக்கின்றனர்.

பாவனையாளர்கள் அதிசக்தி வாய்ந்த மின் குமிழ்களைப் பாவிப்பதனால் கூடிய மின் அலகுகளுக்கான பணத்தையும் அதிக அளவில் செலுத்த வேண்டி ஏற்படுகிறது.

எனவே, மின்சாரத்தைச் சேமிக்கவும், பலருக்கு மின்சார இணைப்பை வழங்கவும், பயனாளிகள் குறைந்த செலவில் உச்சக்கட்ட மின்சார பயனை பெறுவதற்கும் 'சக்தி சேமிப்பு மின் குமிழ்களை' பயன்படுத்துமாறு மின்சார சபையினர் அறிவுறுத்தி வருகின்றனர்.

### சக்தி சேமிப்பு மின்குமிழ்கள்

சுன்னாகம் மின்சார சபை மின் அத்தியட்சகர் அ.நாகராசா 'சக்தி சேமிப்பு மின்குமிழ்' பாவனை பற்றி விளக்கமாகக் கூறியுள்ளார்.

மின்சார சக்தியைச் சேமிக்கவும் அதன்மூலம் பலருக்கு மின்சாரம் வழங்கவும் சக்தி சேமிப்பு மின்குமிழ்களை அறிமுகப்படுத்தி அவற்றை வாங்கிப் பயன்படுத்துமாறு ஆலோசனைகள் வழங்கி வருவதுடன் மின்குமிழ்களைப் பெறுவதற்கான வழிமுறைகளையும் செய்து வருகின்றோம்.

சக்தி சேமிப்பு மின்குமிழ்களை நாம் வழங்குவதன்மூலம் மின்சார அலகு வீழ்ச்சியடைந்து, எமது வருமானம் குறைவடைந்து எமக்கு நஷ்டத்தையும் ஏற்படுத்துகின்றது. மக்களின் நன்மைகருதி நாம் இதனை நடைமுறைப்படுத்துகின்றோம்.

### மின்குமிழ் வகைகள்

சக்தி சேமிப்பு மின்குமிழ்களாக ஒஸ்ரம் குமிழ் (OSTRAM BULB), கிளிப்சால் குமிழ் (CLIPSALL BULB), பிளாஸ் குமிழ் (FLASH BULB) ஆகியவற்றை சிபார்சு செய்துள்ளோம். இவை 15-20 வாட்ஸ் (WADS) சக்தி கொண்டவையாக இருப்பினும் சாதாரண குமிழ்களுடன் ஒப்பிடும்போது 60, 75 வாட்ஸ் (WADS) ஒளியைத் தரக்கூடியன.

இம்மின்குமிழ்களின் விலை சற்று அதிகமானவை. ஒஸ்ரம் குமிழ் ஒன்று ஆயிரத்து 100ரூபா, கிளிப்சால் குமிழ் ஒன்று 700ரூபா, பிளாஸ் குமிழ் 400 ரூபா. முதல் இரண்டும் இரண்டு வருட உத்தரவாதமும், பிளாஸ் குமிழ் ஒருவருட உத்தரவாதமும் கொண்டவை.

இக்குமிழ்களைப் பாவிப்பதனால் சாதாரண குமிழ்களைவிட இதன் மூலம் சக்தி சேமிக்கப்படுகின்றது. பாவனை மின்கூறுகள் மாதாந்தம் குறைவடைகின்றன. கண்களுக்கும் குளிர்ச்சியானவை. பாவனை உத்தரவாதம் கொண்டவை.

ஒரு வீட்டின் மின் பாவனையாளர் அதிகபட்சம் நான்கு ஒரே ரக குமிழ்களையே பெற்றுக்கொள்ளமுடியும். மின்குமிழ்களை கலந்துபெறமுடியாது.

ஒரேமுறையில் இவற்றுக்கான மொத்த விலையைச் செலுத்த முடியாதவர்களுடைய நன்மைகருதி, தவணை அடிப்படையில் பணம் செலுத்த வசதி செய்துள்ளோம். தவணைக் கட்டணத்தை மாதாந்த மின் கட்டணத்துடன் 12 தவணைகளில் சேர்த்துக் கட்டலாம்.

உதாரணமாக கிளிப்சால் குமிழ்கள் நான்கை பெற்றுக்கொண்டால் 700X4 =2800÷12=233 ரூபா 33சதம் ஒரு தவணைக்கான கட்டணமாகும். இதனை அந்த மாத மின்கட்டணத்துடன் இணைத்துச் செலுத்தலாம்.

### மின்குமிழ்களை பெறும் வழிமுறை

பாவனையாளர்கள் கடைசியாகப் பெற்ற மின் சிட்டைக்கான பணத்தை முழுமையாக (நிலுவையின்றி) மின்சார சபையில் செலுத்தவேண்டும் அல்லது பணத்தை தபாலகங்களிலோ வங்கிகளிலோ செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டை மின்சாரசபை அலுவலகத்தில் சமர்ப்பிப்பதுடன் வீட்டின் உரிமையாளர் தாமே என்பதை அடையாள அட்டையினைத் காண்பித்து உறுதிப்படுத்தவேண்டும்.

**வி.பி.சர்மா,**

*வலிகாமம் தெற்கு செய்தியாளர்*

அப்போது அவர்கள் விரும்பும் ரக மின்குமிழ்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய பற்றுச்சீட்டு மின்சார சபையால் வழங்கப்படும்.

யாழ்ப்பாணத்தில் உள்ள மின்சாரப் பொருள்கள் விற்பனையாளரிடம் அப்பற்றுச்சீட்டை கொடுத்து பாவனையாளர்கள் மின் குமிழ்களை இலவசமாகப் பெற்றுக் கொள்ளமுடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீபாவளியை முன்னிட்டு

5 ரூபா விசேட சலுகை



வெளிநாட்டு அழைப்புகள் விசேட கட்டணத்தில்
இன்று (19.10.2003) ஞாயிறும் நாளை (20.10.2003) திங்களும்

ஒரு நிமிடத்துக்கான கட்டணம் ரூபா மட்டுமே! 5/=

அருள் கொமினிக்கேஷன்

233, பிறவுண் வீதி,
(நாவலர் வீதிச் சந்தி)
யாழ்ப்பாணம்.

5/=

(24-11-18) ☎ 222 3536 (23813)



தொலைத்தொடர்பு சேவையில் இன்னும் பல சேவைகள்

Dialog GSM

kit

டயலொக்
தொலைபேசி அட்டைகளை
மொத்தமாகவும்,
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள,

Sri Murugan
Tele Communication & Agency Post Office,
303,K.K.S ROAD, JAFFNA T.P- 021-222 5392,
FAX-222 3214, email-del-smskr@eureka.lk


## திலக நர்த்தனாலயத்தின்
# இதய அஞ்சலி



அமரர் பிரம்மஸ்ரீ
மகாவித்துவான்
**மா.த.ந.வீரமணிஜயா**

கீர்த்தனை சாகித்திய நாவலராய்
கீதமிசைப்பதில் பாவலனாய்
கிண்கிணி நடனத்தின் காவலனாய்
கீர்த்தி மிகப் பெற்ற நாயகனாய்

இயல் இசையின் பேறென
இணுவையில் உதித்த கவி
இறைவனடியில் இன்புற்றிருக்க
இருகரம் கூப்பி இறைஞ்சுகிறோம்.

சாவகச்சேரி.

திலக நர்த்தனாலய
அதிபர், மாணவர்கள்.

(23820) (19-24-11-18)

# மரண அறிவித்தல்கள்

## சங்கரசிவம்பிள்ளை தயாபரன்

தாவடியைப் பிறப்பிடமாகவும் கனடா ரொறன்ரோவை வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரசிவம்பிள்ளை தயாபரன் 15.10.2003 புதன்கிழமை அகால மரணமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சங்கரசிவம்பிள்ளை மற்றும் சிவபாக்கியம் ஆகியோரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சிவராசா மற்றும் லிங்கேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்பு மருமகனும் சியாமளா (கலா - கனடா) அவர்களின் அன்புக் கணவரும் யதுனன், ஜனனி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் மாலதி, ஜெயசீலன், சுதாயினி (கனடா), மஞ்சுளா தேவதாசன் (கனடா), ஜெயதேவன் (லண்டன்), கீத்தா, முரளீதரன், ஜெயந்தி (கனடா), ஜெயரங்கன் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.10.2003) திங்கட்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பொன்னையா லேன்,*
*ஆனைக்கோட்டை.*

தகவல்:
சி.மாலதி (மைத்துனி),
கீத்தா, முரளீதரன்
(மைத்துனி, மைத்துனன்).

(23817) (24-11-19)

## கதிரன் இலங்கைநாதன்

(K.K.S. சிமெந்துக் கூட்டுத்தாபன ஓய்வுபெற்ற தொழிலாளி)

காட்டடைப்பு வீதி, காங்கேசன்துறையைச் சேர்ந்த கதிரன் இலங்கைநாதன் நேற்று (18.10.2003) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரன் - சின்னாச்சி தம்பதிகளின் அன்பு மகனும் எலிசபெத்தின் அன்புக் கணவரும் பரமேஸ்வரி, சித்திரவேல், லதா, கீதா, சுகிர்தா, விஜிதா, ரேவதி (ஜேர்மனி), சுமதி, தமயந்தி, கஜன், சுஜேந்திரன் (டுபாய்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (19.10.2003) ஞாயிற்றுக்கிழமை 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

முகவரி: *188, ஆடியபாதம் வீதி,*
*திருநெல்வேலி*
*(பிரதேச சபை நல்லூர் முன்பாக).*

தகவல்:
**கஜன்** (மகன்).

(23827) (24-11-19)

## சமுர்த்தி அலுவலருக்கு செயலகம் மூலம் கொடுப்பனவுகள்

பிரதேச செயலகங்கள் ஊடாக சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு இதுவரை காலமும் வழங்கப்பட்டு வந்த கொடுப்பனவுகள் இந்த மாதத்தில் இருந்து யாழ்மாவட்ட செயலகத்தினால் வழங்கப்படவுள்ளன.

கடந்த மூன்று மாதங்களாக சமுர்த்தி முகமையாளர்களுக்கு மட்டும் செயலகத்தினால் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டதாகவும்

இந்த மாதத்தில் இருந்து சகல சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கும் செயலகம் மூலமாக கொடுபபனவுகள் வழங்கப்படவுள்ளதாகவும்-

செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ஓ-10-30)

## கூத்துப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம் திருமறைக்கலா மன்றத்தினால் அண்மையில் நடத்தப்பட்ட தென்மோடி நாட்டுக்கூத்துப் போட்டியின் முடிவுகள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன.

இப்போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற கூத்துக்களின் விவரம் வருமாறு:

முதலாமிடம்:- 'பண்டார வன்னியன்' (பாஷையூர் கலைஞர்கள்)

இரண்டாமிடம்:- 'பண்டாரா வன்னியன்' (தம்பாட்டி காந்திஜீ நாடக மன்றம்)

மூன்றாமிடம்:- 'புனிதவதி' (நாவாந்துறை கலைஞர்கள்)

இவர்களுக்கான பரிசு வழங்கும் நிகழ்வு விரைவில் நடைபெறவுள்ளதாக திருமறைக் கலாமன்றம் அறிவித்துள்ளது. (ஓ-4)

## 'வித்தகம்' வெளியீடு

யாழ்.உயர் தொழில்நுட்ப நிறுவன மாணவர் ஒன்றியத்தின் "வித்தகம்" நூல் வெளியீட்டு விழா நாளை காலை 10மணிக்கு உயர் தொழில் நுட்ப ஒன்று கூடல் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

உயர் தொழில்நுட்ப மாணவர் ஒன்றியத் தலைவர் எஸ்.வி.ஜெயதீசன் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் யாழ்.மாவட்ட அரசியல் துறை பொறுப்பாளர் சி.இளம்பரிதி பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

நூலின் வெளியீட்டுரையினை யாழ்.பல்கலைக்கழக வணிகத் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கே.சிவராஜா நிகழ்த்தவுள்ளார். (ஓ-6-9)


**புறொயிலர் விற்பனைக்கு**

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் விற்பனைக்குண்டு. மொத்தமாகவும். சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். ஒரு கிலோ 120/=.
தொடர்பு:
நொதேண் பாம் (Pvt)Ltd,
விநாயகர் வீதி.
கல்வியங்காடு.
(23819)(11-18)



STP

**புதிய வகுப்புகள்**

**Certificate Courses**

Auto CAD (for Engineer Student)
CorelDRAW
Visual Basic
Quick Book (Accounting Package for University Student)

Start: 25/10/2003, 10.00 am

STP Your Partner in IT Solution
73, Palaly Road, Kantharmadam



அச்சுவேலியில்

**CIIT இன்,**
புதிய கணனிப் பிரிவுகள் ஆரம்பம்
(ஆங்கிலக் கல்லூரியில்)

* Diploma in DTP
  * Corel Draw
  * Page Maker
  * Photo shop
  * Photopaint
* Diploma in M.S. Office
  * Ms Word
  * Ms Excel
  * Ms Access
  * Ms Powerpoint

ஆரம்பம்: 21.10.2003 செவ்வாய் 7.00 a.m.

Note: 14.09.2003 இல் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் சான்றிதழ் பெறாதவர்கள் [illegible]

[illegible] வீதி, Director,
அச்சுவேலி. CIIT.
(23810) (11-18)



பாதுகாப்பு உத்தியோகத்தர்
**தேவை**

திடகாத்திரமான 55 வயதுக்குட்பட்ட ஆண்கள் விண்ணப்பத்துடன் நேரில் வரவும். முன்னாள் பொலீஸ், இராணுவத்தோர் விரும்பத்தக்கது. அனுபவம் உள்ளோருக்கு முன் உரிமை வழங்கப்படும். வேதனம் நேரில் பேசித் தீர்த்துக் கொள்ளப்படும்.

தொடர்பு: தேசிய பாதுகாப்புத் திட்டம்,
181/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (23826)

(24-11-18)


# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு
05
-
03
-
1939



உதிர்வு
19
-
09
-
2003

அமரர் **கதிரித்தம்பி மகேஸ்வரன்**
(Charted Accountant)
(சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும்
கனடாவை வசிப்பிடமாகவும் கொண்டவர்)

**அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.**

அன்னாரின் பிரிவால் நரம் துயருற்ற வேளையில் அனுதாபச் செய்திகளை அனுப்பியோருக்கும் பல்வேறு வழிகளில் உதவி புரிந்து ஆறுதல் கூறியோருக்கும், கனடாவில் நடைபெற்ற இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டோருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், தாயார்,
சகோதரன்.

(C/30901) (24-11-18)

# முதலாம் ஆண்டு கண்ணீராறு

தாயின்
மடியில்
07
-
05
-
1948



கோயில்
அடியில்
30
-
10
-
2002

திருமதி
**சிவயோகநாயகி நாகேந்திரம்**
திதி: (19.10.2003) நவமி

*சித்தம் சிவன்பால் சென்றதோ சிவயோக நாயகியை*
*பத்தினியாய் பெற்று பார்புகழ வாழ்ந்திடவே*
*எத்தனை இன்பங்கள் எத்தனை துன்பங்கள் உனை என்னவளாக்கிடவே*
*அழகுத்திருமகளே. அலங்காரத் திருஉருவே. அழித்தெழுதாச் சித்திரமே!*
*பழகப் பழக பாலும் புளிக்கும் பாசக்கனியே உன்பனித்த பார்வை*
*என் எண்ணத்துளிகள் ஒவ்வொன்றையும் வெறிக்க வைக்கும் போதெல்லாம்*
*இன்பக் கிறக்கில் இருத்தி மகிழ்விக்கும் நாளெல்லாம்*
*தலைமேல் உனை வைத்து தலைகால் தெரியாது தளிராய் தளிர்த்த காதல்*
*மலைபோல் நான்கு மக்களை நீ மகிழ்ச்சியுடன் தந்தகோயில்*
*துள்ளித் திரிந்து துயர் காணா அவர் மீது சிறுதுரும்பும் பொறுக்காத தாயவளே!*

*அள்ளித்தந்து. ஆசைமொழிபேசி அன்பு பொழிந்து மக்களவர் இருக்க*
*கள்ளமில்லா வெள்ளைமனம் கொண்ட காதற்கணவன் நான் இருக்க*
*வெள்ளை மனத்தோடுவேறென்ன வேண்டியம்மா விழுபனை அன்னையிடம் போனாயோ*
*ஓடி ஓடி உன்சுகம் தேடி தேடி உன்குஞ்சுகள் கோயிலெல்லாம் கும்பிட்டு குறுகினவே*
*தாடி தாடியாய் வளர்த்து தளிர் மேனிகாணாது கோடி கோடி தலையில் இட்ட புழுவாய் தறுகினவே*

*ஓடி ஒளிந்து கூடி மகிழ்ந்த குளிர்நிலாக் கோலங்கள்*
*வாடிவதங்கி. விம்மிவெதும்பி நான் அழும் சத்தமில்லா ஓலங்கள்*
*ஊனை. உயிரை. உள்ளுணர்வை உருக்கிடும் நீயே என் வேதங்கள்!*
*நிலவும். வானும். நீள்கடலும் இங்கிருந்து நீங்கிடலாம் உன்*
*நினைவும். கனவும். நீள்கதையும் என்னுடலில் எங்கிருந்து நீங்கிடுமோ?*
**ஆசைநாயகியே! அன்புத் தாயவளே! உன் ஆத்மசாந்தியை நாடிடுவோம் விழுபனை நாயகியை விரைந்திடவே வேண்டுகிறோம். விம்முகின்றோம்.**

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**கணவர்,பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரன்,**
**பேர்த்தி.**


நிரந்தர முகவரி:
எழுதுமட்டுவாழ் தெற்கு,
எழுதுமட்டுவாழ்.

தற்காலிக முகவரி:
மானிப்பாய் வீதி,
உரும்பிராய்.

(23829) (26-11-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் மண் எப்போது கிடைக்கும்?



பச்சை உடுப்புக்கும் பழுதான பீரங்கிக்கும்
ஆழத்தில் தாட்ட காணாமல் போனோரின் எலும்புக்கும்
என் பாட்டன் வளர்த்த தென்னை சாய்த்து
முட்கம்பிக்குள் சிறை வைத்தனர் என் தாய் மண்ணை
நீண்ட வயலிடை கண்ணிகள் விளைந்தன
வீடுகள் கூட்டி பேரரண் எழுந்தது
பந்தடித்த வெறும் நிலமும் பனம் காடும்
பட்டம் விட்ட கடற்கரையும் எனக்கில்லை இன்று!

சலனமற்ற குளத்தின் தாமரையின் இனிமையையும்
சின்னக் காற்றுக்கு கரை தேடும் சிற்றிலையையும்
ஆழ உழுகையில் சேற்றில் புதையும் காலையும்
என் சின்ன மகனும் உணர்ந்து சிலிர்க்க
எப்போது எனக்கு என் மண்?

ந- தனேஷ்

# கவிதைக் கணைகள்



## யாழ்ப்பாணம் எங்கு போச்சு?



அடிதடி சண்டை
வாள் வெட்டு
ஐயோ! யாழ்ப்பாணம்
எங்கு போச்சு?

குடிவெறி குதர்க்கம்
கும்மாளம்
ஐயோ! யாழ்ப்பாணம்
எங்கு போச்சு?

கட்டிக்காத்த பண்பாடு
கரைந்து போகுது ஏன்தானோ?
முட்டி மோதும் விகாரங்கள்
முளைத்து வளர்வதும் ஏன்தானோ?

பாதை திறந்த பக்குவத்தில்
பாதகங்கள் வந்தது முறைதானோ?
சீதைகளான பெண்ணினமே
சீர்கெட்டழிவதும் முறைதானோ?

புதுப்புது வடிவில் சந்தியெங்கும்
மதுக்கடைத் திறப்பு முடியாதோ?
புதுப்புது விதத்தில் நீலப்படம்
புகுந்து வருவதும் முடியாதோ?

அபச்சாரத்தின் விளைவுகளை
அகற்ற மக்களும் விழியாரோ?

-சூரியநிலா-
ஈச்சமோட்டை.

## நான் வரைந்த மடல்

முகவரியிடப்படாத
மொட்டைக் கடிதமாய்
உனக்காக நான் வரைந்த மடல்
என்
இதய தபால் பெட்டிக்குள்
உறங்கிக் கிடக்கிறது.

~மனோசியா, ஓட்டுமடம்.

## இதுதான் சமாதானமா?

நான் பிறந்தது பங்கரில்
அன்று முதல் மழையைக் கண்ட நாள்களை விட
குண்டு மழையைக் கண்ட நாள்கள் தான் ஏராளம்
என் காதுகளுக்கு இடியோசைகளை விட
ஷெல் ஓசைகள் தான் பலமுறை கேட்டிருக்கின்றன
நான் பாடசாலை சென்ற நாள்களை விட
பங்கரில் பதுங்கியிருந்த நாள்களே ஏராளம்
என்னுடைய நண்பிகளில்
பலர் இன்று செம்மணியில்
சமாதான வேளையில்
எம் மண்ணில் சந்தனக் காற்று வீசவில்லை
பிண வாடையே வீசுகின்றது
வீட்டை விட்டு வெளியே செல்வோர்
வீதிகளில் அனாதைப் பிணமாக
படை வாகனத்தின் கீழ் சிதைந்து கிடக்கின்றனர்.
அன்று பங்கரினுள் இன்று பவளின் கீழ்
இதற்குப் பெயர்தான் சமாதானமா???

~செல்வி எம்.பி.லக்ஷனா
கண்டுக்குளி.

## எதற்காக விசாரிக்கிறாய்???

தொலைபேசியில் விசாரிக்கின்றாயே....
அதுவும் அந்நியக் குரலில்!
எதற்கு.....?
மயானமருகே உலவியதால்
மரணித்து விட்டதாய் நினைத்தாயா?
ஏன் ..... உனக்குத் தெரியாதா?
உள்ளம் கவர்ந்த
உறவொன்றை - நீ
உருவாக்கிக் கொண்டது
எனக்குத் தெரியுமென்று.

அன்றே - நான்
மரணித்துப் போனது
உண்மையென்று
உனக்குத் தெரியாதா....?
இன்னும் ஏன் வஞ்சிக்கத்
துடிக்கிறாய்?
அதற்காகவே விசாரிக்கிறாய்.....?
உனக்கென்ன பைத்தியமா.....?
உயிரற்ற ஒன்றை
வஞ்சிக்கவும்!
விசாரிக்கவும்!

-சக்தி.

## போலிகள்

நேசந்தனில் கறைபடிந்தால்
நெஞ்சமது தாங்கிடுமோ?
பாசந்தனில் குறைபடிந்தால்-அன்பு
பஞ்சமதில் வீழ்ந்திடுமோ?

காசளவில் பாசந்தனை
கணக்கிட்டுக் காட்டிவிட்டு
பேச்சளவில் உறவுகளை - இங்கு
பேணுவதில் என்ன சுகம்

வேடிக்கை காட்டுவதிங்கு
வாடிக்கை யாகிவிட்டதையா
காசியில் குளித்தாலும் - பாவப்
பாசி அகலாதையா.

-இ. கார்த்திகா
கோண்டாவில்.

## காத்திருப்பு



கோயில் கிணற்றடியில்
காத்திருக்கின்றேன்
ஒரு நல்லவனுக்காக

சீதனம் வேண்டி நிற்காத
என் மனம் பார்க்க
அழகு தேடி அலையாத
என் குணம் நாட
தெரிந்தவனுக்காக

தலைக்கு மேல் வேலையிருந்தும்
இன்னும்.........
யாராவது ஒரு நல்லவனுக்காக
காத்திருக்கிறேன்?
அதுவும்
அம்மன் கோயில் கிணற்றடியில்.

-[illegible]
நிலாவாசன்.

## அன்பினால் அரவணைப்போம்

ஒளியற்ற விழி யுடனே
ஓரத்தால் செல்லுகின்ற
பழுதற்ற மானிடத்தின்
பரிதாப நிலை பாரீர்!

உலகத்தை உற்று நோக்கும்
உன்னத நிலை யிழந்து
சலனத்தால் வாடு கின்ற
சால்பினைச் சற்றுப் பாரீர்!

பட்ட மரமா யெண்ணி
பாரினி லொதுக் காதீர்!
திட்டமா யவர் வாழ்வு
திகழ்ந்து ஒளி வீசும்!

அன்பினா லர வணைத்து
ஆதர வவர்க் களித்து
இன்பமே நல்கு வோர்க்கு
இறையருள் இனிதே கூடும்!

எம்மவரின் இனிமை களை
எள்ளளவும் குறை வின்றி
[illegible]
அனைத்தும் பெற் றிடுவோம்!

-கூத்தாடி வி.சி.குஞ்சிதபாதம்.

# மானம் காத்த மறக்குடி வேந்தன்!



5

ஆக்கம்: புலவர் ம.பார்வதிநாதசிவம்

தொடராகப் போரினிலே காணுகின்ற
சேரனே சேனைக்குத் தலைவன் ஆனான்
வடவருக்குத் தோல்வி எனல் சொன்ன பின் தான்
வையத்தோர் உணர்வாரோ? உணர்வார்முன்னே!

ஆய்வேதும் செய்யாதே தமிழ் வேந்தர் தம்
ஆற்றலினை அறியாத வடநாட்டார்கள்
வாய்ப் பேச்சை நிகழ்த்தியதின் விளைவைப் போரில்
வாள் வீச்சிற் கண்ட திர்ந்தார்! சேரவேந்தன்
பாய் வேங்கை என ஆனான்! வடவர் எல்லாம்
பயந்தோடும் மான் ஆனார்! வீரம் சொன்ன
ஆய்வறியாக் கனக விசயர்கள் தாமோ
அகப்பட்டார் கூண்டெலியே ஆகினார்கள்!

அன்றிருந்த மன்னர் தம் செவியில் எல்லாம்
அதிசய வேந்தன் சேரன் வீரச் செய்தி
சென்றடைந்த தன்மையினால் தமிழர் வீரம்
தேச மெங்கும் உலகமெங்கும் சேர்ந்ததாலே
வென்றிமிகும் தமிழர் என்றால் உலகோர் எல்லாம்
வியக்கின்ற இனமாக விளங்கினார்கள்
நன்று புரிந்தே மானம் காத்த சேரன்
நாட்டாலும் ஏட்டாலும் புகழப் பெற்றான்.

தமிழ் புகழும் கண்ணகிக்குச் சிலை செய்தற்கு
கல்லதனைச் சுமப்பதற்குத் தகுதியானோர்
தமிழ் இகழ்ந்த வட நாட்டார் தாமே என்ற
கருத்தினால் கனகனொடு விசயன் என்ற
தமிழறியார் தம்தலையிற் கல்லை ஏற்றித்
தமிழ்நாடு கொண்டுவந்தான் சேரவேந்தன்
அமிழ்தனைய மொழி பேசும் மக்கள் எல்லாம்
அக்காட்சி காண்பதற்குத் திரளலானார்!

வஞ்சி மாநகரத்தின் வீதி எங்கும்
மனையெங்கும் மற்றுளவாம் இடங்கள் எங்கும்
நெஞ்சு வந்த மக்கள் எலாம் ஒன்று சேர்ந்தே
மாவிலை தோரணம் தொங்கச் செய்திட்டார்கள்
வெஞ்சமரில் வென்றிட்ட சேரன் தன்னை
மேவி நின்றே எல்லோரும் வரவேற்றார்கள்
அஞ்சுதலே அறியாத சேர வேந்தன்
அக மகிழ்ந்தே வஞ்சி நகர் அடைந்திட்டானே!

இளையோர்கள் விற்கொடியை ஏந்தி நின்றே
"எம்மரசே வருக!" வென வரவேற்றார்கள்
வளையோர்கள் சுடர் வீசும் கும்பம் வைத்தே
"மன்னவனே வருக!" வென வரவேற்றார்கள்
களிறொன்றில் சேரன்தான் முன்னே வந்தான்
கடைசியிலே கல்சுமந்த தலையராகி
இனி செய்த கனக விசயர்கள் வந்தார்
இக்காட்சி எல்லோர்க்கும் புதிதே அன்றோ?

நகரடைந்த குட்டுவன் தன்வீரர்க்கெல்லாம்
நல்ல பல பரிசளித்தான் பொன்னாற் செய்த
மிகச்சிறந்த வாகை மலர் தன்னைச் சூட்டி
மேன்மை செய்தான் வீரர் எல்லாம் உவகை உற்றார்

வளரும்....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தச்சன்தோப்பு விநாயகர் ஆலயம்
## வள்ளியம்மன் திருமணப் படனமும் கந்தபுராணப் பூர்த்தியும்

அன்புடையீர்!

நாளை ஐப்பசித் திங்கள் 3ஆம் நாள் (20.10.2003) திங்கட்கிழமை வள்ளியம்மன் திருமணப் படனமும் கந்தபுராண பூர்த்தியும் சிறப்பாக நடந்தேற இறையருள் வேண்டுகிறோம்.

அன்றையதினம் காலை 6.00 மணிக்கு மூலவர் பூசை ஆரம்பமாகி கந்தபுராணப் படனம் தொடரும். பிற்பகல் 4.00 மணிக்கு வசந்த மண்டபப் பூசை நடைபெற்று, முருகப் பெருமான் வள்ளி, தெய்வானை சமேதராக எழுந்தருளி அருள்பாலிப்பார்.

பௌராணிகர்களும் ஆர்வலர்களும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

அனைவரும் வருக! முருகன் அருள் பெறுக!

கரவெட்டி. (C/30895) (29-13-16) ஆலய பரிபாலன சபையார்.



THE REFUGEES REHABILITATION ORGANIZATION

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்
106, 4th Cross Street, Jaffna.

## VACANCY

**Team Co-ordinator**

- Degree Holder (Preferably Management)
- Five years experience in Social work
- Communication skill and experience in communication
- Proficient in English (Speaking and Writing)
- Efficient in preparing project proposals and submitting reports
- A good knowledge in human relationship and social mobilization programmes
- Administrative talents and works regarding administra tion.
- Knowledge in Computer.
- Age limit 25 - 40 years.

விண்ணப்ப முடிவு திகதி: 31.10.2003

விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி:
தலைவர்,
அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்,
106, 4ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம். (C/30903) (29-13-16)


# தென்னைகளுக்கு நஷ்டஈடு தராவிடில் அபிவிருத்திச் சபைமீது வழக்குத் தாக்கல்
## தெங்குச் செய்கையாளர் சங்கம் எச்சரிக்கை

சாவகச்சேரி,ஒக்.19

யுத்தத்தால் அழிந்த தென்னை மரங்களுக்கு நஷ்டஈடு பெற்றுத்தரா விட்டால் தெங்கு அபிவிருத்திச்சபை மீது வழக்குத் தொடரப் போவதாக வடமாகாண தெங்குச் செய்கையாளர் சங்கம் எச்சரித்துள்ளது.

இராணுவ நடவடிக்கைளின் காரணமாக வட பகுதியில் அழிக்கப்பட்ட தென்னை மரங்களுக்கு நஷ்டஈடு பெற்றுத்தர தெங்கு அபிவிருத்திச் சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வடமாகாண தெங்குச் செய்கையாளர் சங்கத்தின் செயலாளர் எஸ். பத்மநாதன் கோரியுள்ளார்.

இது தொடர்பாக பிரதமருடனும் உரிய அமைச்சுடனும் தெங்கு அபிவிருத்திச்சபை தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்கத் தவறும் பட்சத்தில் ஐ.நா.விதிகளின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாகவும் அவர் எச்சரித்துள்ளார்.

இராணுவ நடவடிக்கைகளின காரணமாக வடபகுதியில் 7 லட்சத்துக்கும் மேற்பட்ட தென்னை மரங்கள் அழிக்கப்பட்டுள்ளன. இத்தென்னை மரங்களை மீள்நடுகை செய்வதற்கு ஏக்கருக்கு 16ஆயிரம் ரூபாவை மானியமாக வழங்க அரசு முன்வந்துள்ளது. இத்தொகை 50 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஒ-10-31)

## காணாமற்போனோர் சங்க கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஒக்.19

குடாநாட்டில் படையினரால் கைதுசெய்யப்பட்டு காணாமற்போனோர் விவகாரம் குறித்து படையினரால் கைதாகி காணாமற் போனோரின் பாதுகாவலர் சங்கத்தினர் விரைவில் ஜனாதிபதியைச் சந்தித்துப் பேச உள்ளதாக சங்கச் செயலாளர் தெரிவித்தார்.

ஜனாதிபதியுடனான சந்திப்புப் பற்றிய கலந்துரையாடல் இன்று காலை 10மணிக்கு பருத்தித்துறை வீதி ஆனைப்பந்தியடியில் உள்ள அன்னையர் முன்னணித்தலைவி வீட்டில் நடைபெறும் என்றும் அவர் தெரிவித்தார்.

## சமயசந்நிதியில்

யாழ்ப்பாணம்,ஒக்.19

வட்டு. வீயோடை இலுப்பையடி ஸ்ரீமுத்துமாரி அம்பாள் ஆலய இராஜகோபுர அடிக்கல் நடும் நிகழ்வு நாளை திங்கட்கிழமை முற்பகல் 10.15 மணி தொடக்கம் 11மணிவரையான சுப வேளையில் நடைபெறவுள்ளது. (ம-10)


# கொம்ஸ்ரா - "KOMSTA"
## இலவச மருத்துவ சேவை
### கொரியன் நாட்டு தேசிய மருத்துவ சேவைக்குழுவினரின் இலவச சிகிச்சை முகாம்

இடம்: கைதடி சித்த போதனா வைத்தியசாலை
காலம்: நவம்பர் 4ஆம், 5ஆம், 6ஆம், 7ஆம் திகதிகளில்
காலை 9மணிமுதல் மாலை 4மணிவரை.

முற்கூட்டியே பதிவுகளை கைதடி போதனா வைத்தியசாலையில் மேற்கொள்ளவும்.

(C/30906) (29-13-16) - நிர்வாக அதிகாரி.



## விற்பனைக்கு

அதிநவீன முறையில் பார்மஸி மற்றும் புடைவை விற்பனைக்கு உகந்த தேவையான அலுமினிய FITTINGS SHOWCASES COUNTERS விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:
060 221 3313
அல்லது
இரவு 8.00 மணிக்குப் பின்னர்
077 - 6103210 என்ற
இலக்கத்துடன்
தொடர்புகொள்ளவும். (C/30909) (29-16-177)



**லஷ்சுமி சினிமா** இணுவில்

அஜித், லைலா, நக்மா நடித்த
தீனா (ரீல்ஸ்)
காட்சி நேரம் 11.00, 3.00, 7.00 (பு.நே.) (C36907)

**நாகம்ஸ்** சுன்னாகம்

M.G.R. (இரு வேடம்), சரோஜாதேவி, நாகேஸ் நடித்த
எங்க வீட்டுப் பிள்ளை (ரீல்ஸ்)
காட்சி நேரம் : 11.00, 3.00, 7.00 (பு.நே.)
தீபாவளி வெளியீடு:
இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரே தினத்தில் இளைய தளபதி விஜய் நடித்த
திருமலை (C/29905)

**நிறஞ்சனாஸ்** சங்கானை

விஜயகாந்த், சங்கீதா நடித்த
அலெக்ஸாண்டர் (ரீல்ஸ்)
காட்சி நேரம் : 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 இற்கு
WAR LOCK - II (C/30657)

**ராஜா** யாழ்ப்பாணம்

21 வரை
பிரசாந்த், கிரண், வடிவேல் நடித்த



காட்சிகள் : 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே.)
21முதல்
மன்னன் (C/29904)

**லிபேட்டி** அச்சுவேலி

ரஜனி, மீனா, கவுண்டமணி, செந்தில் நடித்த
எஜமான் (ரீல்ஸ்)
காட்சி நேரம்: 3.00, 7.00 (பு.நே.) (C/30851)


# 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 24 - 07 - 1918



மறைவு 20 - 09 - 2003

## திருமதி சின்னத்தம்பி தெய்வானைப்பிள்ளை

அன்புடன் பண்பையும் கலந்திழைத்து - அறமுணர்த்தி
தென்புடன் எமைவளர்த்துக்களித்த அம்மா!
இன்புடன் நாம் வாழத்துணையாயிருந்து
நோன்புடன் நற்றவத்தின் பயனுரைத்த மாமி!
என்புருகப் பாசமதை ஊட்டி எம்மை
மாண்புற வளர்த்த அம்மாவை, அப்பாவைப் பெற்றவரே!
எமைத் துன்புறத் துடிக்கவிட்டுச் சென்றதேனோ!
உன்நினைவு எக்காலும் எமைவிட்டகலாதம்மா!

'சாத்தனை',
கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(23823) (26-29-13-16)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 27 - 05 - 1942



மறைவு 19 - 09 - 2003

## அமரர் நவரத்தினம் அருமைராசா

(உரிமையாளர், ஜனா டென்ஸ் - இணுவில், பண்டத்தரிப்பு)

உங்கள் ஆத்மசாந்திக்காக கண்ணீர் மலர்களைக் காணிக்கையாகச் சமர்ப்பிக்கின்றோம்.

எமது குடும்பத் தலைவரின் பிரிவின் போது சமுகமளித்து ஆறுதல் கூறியவர்களுக்கும் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் தபால், தந்தி, தொலைபேசி மூலமாக அனுதாபந் தெரிவித்தவர்களுக்கும் எங்கள் நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அத்துடன் -

இன்று (19.10.2003) ஞாயிற்றுக்கிழமை முற்பகலில் பம்பலப்பிட்டி தொடர்மாடி சனசமூக நிலையத்தில் நடைபெறுகின்ற வீட்டுக்கிருத்தியத்திலும் பங்குபற்றி ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

40/5, ஹம்டன் லேன்,
கொழும்பு - 6.
T.P. No: 2587346 (C/30903) (29-16-17)

உங்கள் நினைவில் வாழும்
குடும்பத்தினர்.

# கண்ணீர் அஞ்சலி

எமது கல்வி நிறுவன ஆசிரியர் திரு.ந.சுரேஸ் அவர்களின் அன்புத் தந்தையார்

## போல்ப்பிள்ளை எட்வேட் நவராஜசிங்கம்

அவர்கள் 18.10.2003 அன்று இறைவனடி சேர்ந்தமையையிட்டுத் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

எலைற் கல்வி நிறுவனம்,
147, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம். (23833) (29-13-16)

நிர்வாகி, ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

# காயமான எம் மனங்களில் காவியமான மஹாவித்துவான்



அமரர் மஹாவித்துவான் பிரம்மஸ்ரீ
## மா.த.ந.வீரமணி ஐயா

அவர்களின் திடீர் மறைவுச்செய்தி எம் மனங்களைக் காயமாக்கிஅன்னாரைக் காவிய மாக்கி முற்றுப்புள்ளி வைத்தது. பிரம்மஸ்ரீ ஐயா அவர்கள் கடைசியாகப் பங்குகொண்ட மிருதங்க அரங்கேற்றம் எமது என்ற பெருமையோடும், உரிமையோடும். கவிமாமணிக்கு இதயாஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

620, காங்கேசன்துறை வீதி,
நாச்சிமார்கோவிலடி,
யாழ்ப்பாணம். (23837) (29-13-16)

கலாவித்தகர்
நடராஜா சதீஸ்குமார்
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி கந்தசாமி நந்தினி

இளவாலையைப் பிறப்பிடமாகவும் இத்தாலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தசாமி நந்தினி நேற்று (18.10.2003) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் வை.கந்தசாமியின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சின்னகுட்டி - செல்லம்மா தம்பதிகளின் நான்காவது புத்திரியும் காலஞ்சென்ற வைரமுத்து - பரமேஸ்வரி தமபதிகளின் மருமகளும் கலையரசி, சுரேந்திரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் வசந்தறாணி, வனஜகுமாரி, மகேந்திரன், சாந்தி, நளினி, காமினி, மாலினி ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இத்தாலியில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கல்லூரி வீதி,
இளவாலை. (23839) (29-16-17)

தகவல்:
தாயார், சகோதரி.

## தம்பையா செல்லத்துரை

(முன்னாள் உரிமையாளர், மலாயன் ஹாட்வெயர்ஸ் ஸ்ரோர்ஸ், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்)

மானிப்பாய் மேற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட தம்பையா செல்லத்துரை 17.10.2003 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் கண்மணியின் அன்புக் கணவரும் சறோஜினிதேவி, பத்மலிங்கம் (ஆஸ்திரேலியா), சற்குணதேவி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் சந்திரராஜ் (சுவிஸ்), அருள்மணி (ஆஸ்திரேலியா), கேதீஸ்வரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் சிவகுமார், தேவகுமார், ஜீவகுமார், ஜனனி, சோபியா, கோபி, துஸ்யன், இந்துஜன் ஆகியோரின் பாசமிகு பேரனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.10.2003) திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பிப்பிலி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மானிப்பாய் மேற்கு,
மானிப்பாய். (23835) (29-13-16)

தகவல்:
சறோஜினிதேவி (மகள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பேரணியில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினர்.

# பாப்பரசரின் 25 வருட பூர்த்தி: யாழ்.நகரில் நேற்று பேரணி

யாழ்ப்பாணம்,ஒக்.19

கத்தோலிக்க திருச்சபையின் தலைவர் இரண்டாவது பரிசுத்த பாப்பரசர் ஜோன் போல் பாப்பரசராகப் பதவியேற்ற 25ஆவது ஆண்டு நிறைவையொட்டிய நிகழ்வுகள் குடாநாட்டிலும் இடம்பெற்று வருகின்றன.

இதனை ஒட்டிய செபமாலைப் பேரணி ஒன்று நேற்று யாழ்.நகரில் இடம்பெற்றது. நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் நாவாந்துறை புனித பரலோகமாதா தேவாலயத்தில் இருந்து ஆரம்பமாகிய பேரணி நகர வீதிகளூடாக யாழ். மரியன்னை பேராலயத்தைச் சென்றடைந்தது. நாவாந்துறை புனித பரலோகமாதா தேவாலயத்தில் இருந்து ஆரம்பமான பேரணி நாவாந்துறை புனித நீக்கிலார் ஆலயத்தைச் சென்றடைந்து பின்னர் அங்கிருந்து புறப்பட்டு கஸ்தூரியார் வீதியில் உள்ள புனித வேளாங்கண்ணி மாதா ஆலயத்தை அடைந்தது.

பின்னர் அங்கிருந்து மாலை 4.30 மணிக்குப் புறப்பட்ட பேரணி யாழ். நகரப் பகுதியூடாக யாழ். புனித அடைக்கலமாதா ஆலயம், புனித யாகப்பர் ஆலயம் ஆகியவற்றை அடைந்து இறுதியாக யாழ். மரியன்னை பேராலயத்தைச் சென்றடைந்தது. அங்கு திருப்பலிப் பூசையுடன் நிறைவுபெற்றது.

இந்தப் பேரணியில் சிறுவர்கள், பாடசாலை மாணவர்கள், பெண்கள் மற்றும் கன்னியாஸ்திரிகள் என நூற்றுக்கணக்கானோர் கலந்துகொண்டனர். பேரணியில் கலந்துகொண்டவர்கள் மஞ்சள் - வெள்ளை நிறத்திலான கொடிகளையும் பாப்பரசரின் உருவப்படங்களையும் தம்முடன் எடுத்துச்சென்றனர். (ஐ-10-51-88)

# கிரனேட் தாக்குதலில் வவுனியாவில் நால்வர் காயம்

வவுனியா, பண்டாரிக்குளம் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு 11.40 மணியளவில் இடம்பெற்ற கிரனேட் தாக்குதலில் நால்வர் காயமடைந்தனர்.

பண்டாரிக்குளம் பகுதியில் உள்ள மைதானம் ஒன்றில் சிலர் முயல் பிடிக்க சென்ற சமயம் அப்பகுதியில் உள்ள பற்றைக்குள் பதுங்கியிருந்த இரு இளைஞர்கள் தப்பி ஓடியுள்ளனர்.

முயல் பிடிக்கச் சென்றவர்கள் அவ்விரு இளைஞர்களையும் துரத்திச் சென்ற சமயம் இளைஞர்கள் கைக்குண்டு ஒன்றை எறிந்து விட்டு தப்பி விட்டனர்.

கைக்குண்டு வெடித்ததில் என். லோகேஸ்வரன், பி.தவேந்திரன், கே. கேதீஸ்வரன், கே.விக்னேஸ்வரன் ஆகியோர் காயமடைந்து வவுனியா ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ம-3-164)

## பயங்கரவாத...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மனுப்பண்ணியும் இருக்கின்றன என்று தமிழ்ச்செல்வன் எரிக் சொல்ஹெய்மிடம் தெரிவித்தார். அமெரிக்காவின் போக்கு பேச்சுக்களை நல்ல முறையில் எடுத்துச்செல்வதில் சிக்கல்களை ஏற்படுத்தும் என்றும் தமிழ்ச்செல்வன் விளக்கினார்.

இந்த நிலையில், அமெரிக்கா தனது கடும்பிடியைத் தளர்த்தி, தனது பயங்கரவாதப் பட்டியலில் இருந்து புலிகளின் பெயரை நீக்குவது பற்றி ஆலோசிக்கவேண்டும் என்ற பரிந்துரையை நோர்வே அரசின் சார்பாக முன்வைக்க சிறப்புத் தூதர் எரிக் சொல்ஹெய்ம் இணங்கினார் என்று கூறப்பட்டது.

விடுதலைப் புலிகளின் அதிருப்தியையும் கோரிக்கையையும் நோர்வேயின் பரிந்துரையையும் உள்ளடக்கிய விசேட செய்தி ஒன்றை அமெரிக்காவுக்கு நேரடியாக எடுத்துச்சென்று கையளிப்பதாக சொல்ஹெய்ம் தமிழ்ச்செல்வனுக்கு இணக்கம் தெரிவித்தார். (ம-3)

## ஐக்கிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தற்சமயம் மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகளின் பலன் அதனால் எதிர்காலத்தில் ஏற்படும் நிலைமை ஆகியன தொடர்பாக மக்களுக்கு விரிவாக விளக்கும் வகையில் பிரசாரங்கள் அமையும் என்றும்-

அத்துடன் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்ந்து, அவற்றுக்கு உடனடித் தீர்வு காண ஏற்பாடு செய்யப்படும் என்றும் -

முன்னணியின் பேச்சாளர் ஒருவர் உதயனுக்கு தெரிவித்தார்.

இத்தகைய பிரசாரங்கள் மாகாண ாதியாக நடத்தப்படும் என்றும் - இப்பிரசாரங்களின் சகல அமைச்சர்களும் பிரதமர் தலைமையில் கலந்து கொள்வர் என்றும் - அவர் கூறினார். (ஐ-3)

## தொலைபேசி குறியீட்டு இலக்கம் மாற்றம்

கொழும்பு, கண்டி மற்றும் காலி ஆகிய பிரதேசங்களின் குறியீட்டு இலக்கங்களில் (Code Number) நேற்றிலிருந்து மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக இலங்கை ரெலிகொம் நிறுவனம் அறிவித்துள்ளது.

01ஆக இருந்த கொழும்பு பிரதேசத்திற்கான குறியீட்டு இலக்கம் 011ஆகவும், 08ஆக இருந்த கண்டிப் பிரதேசத்திற்கான குறியீட்டு இலக்கம் 081 ஆகவும், 09ஆக இருந்த காலிப் பிரதேச குறியீட்டு இலக்கம் 091 ஆகவும் மாற்றம் செய்யப்பட்டுள்ளன. (ஐ-10)

## வருட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடயங்கள் முடிவு செய்யப்பட்டதும் பேச்சுக்கள் ஆரம்பிக்கும் என்றும் பிரதமர் ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளார்.

தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் சமாதானப் பேச்சுக்கள் தொடர்பாக இரு பிரதான கட்சிகளும் கலந்துரையாட வேண்டும் என அரசு விரும்புகின்றது என்றும் -

இடைக்கால நிர்வாகம் தொடர்பான வரைவை அடுத்த இரு வாரங்களில் விடுதலைப் புலிகள் அரசிடம் கையளிப்பர் என எதிர்பார்க்கிறோம் என்றும் -

அந்த வரைவு எந்த வகையிலானதாக இருந்தாலும், அரசு மாற்றுத் திட்டத்தை முன்வைக்காது. அரசின் திட்டத்துக்கும் புலிகளின் திட்டத்துக்கும் இடையில் உள்ள இடைவெளி தொடர்பாக பேச்சு இடம்பெறும் என்றும் -

பிரதமர் ஜனாதிபதியிடம் மேலும் தெரிவித்தார். (ம-3)

# சர்வதேச என்.ஐ.ஐ.ரி. நிறுவன கிளை இன்று யாழ்.நகரில் திறப்பு

தகவல் தொழில்நுட்பத் துறையில் புகழ் பெற்ற சர்வதேச நிறுவனமான என்.ஐ.ஐ.ரி. நிறுவனம் தனது கிளை ஒன்றை இன்று முற்பகல் 11 மணிக்கு யாழ்ப்பாணத்தில் சம்பிரதாயபூர்வமாகத் திறந்துவைக்கவிருக்கின்றது. யாழ்நகரில், கஸ்தூரியார் வீதியில் 347ஆம் இலக்கக் கட்டடத்தில் இந்த நிறுவனக் கிளை திறக்கப்படுகின்றது.

சர்வதேச நிறுவனமான எம். எம். பி.எல். சைபர் ஸ்கின் நிறுவனமும் 'உதயன்' ஐ.ரி.ஐலண்ட் நிறுவனமும் இணைந்து ஆரம்பிக்கும் என்.ஐ.ஐ.ரி. கிளையை யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் எஸ். மோகனதாஸ் சம்பிரதாயபூர்வமாகத் திறந்துவைக்கின்றார்.

தகவல் தொழில்நுட்பத் துறையில் சர்வதேச பல்கலைக்கழகங்களில் இணைந்து கல்வி கற்பதற்கான வாய்ப்புகளைப் பெற்றுத்தரக்கூடிய சான்றிதழ்களை வழங்கும் நிறுவனமாக விளங்கும் என்.ஐ.ஐ.ரி. குடாநாட்டு மாணவர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ-3)

# திருடர் கோஷ்டி மாட்டியது!

யாழ்ப்பாணம்,ஒக்.19

குடாநாட்டில் கோயில்கள் மற்றும் வீடுகளில் திருடி வந்ததாகக் கூறப்படும் கோஷ்டி ஒன்று சுன்னாகம், சூராவத்தைப் பகுதியில் பொதுமக்களிடம் வகையாக மாட்டிக்கொண்டது.

கல்வியங்காட்டைச் சேர்ந்த ரி. ரஜீவ், ஆ.சூரியகுமார், வி.சூரியகுமார், எஸ்.ஜெகதீஸ்வரன் ஆகியோர் அடங்கிய கோஷ்டியே பொதுமக்களிடம் மாட்டியது.

சூராவத்தைப் பகுதியில் நேற்று முன்தினம் திருட்டு முயற்சி ஒன்றில் ஈடுபட்டிருந்த சமயம் இவர்கள் பொதுமக்களிடம் வகையாக மாட்டிக்கொண்டனர் என்று கூறப்பட்டது.

நால்வரையும் நையப்புடைத்து பொதுமக்கள் அவர்களை சுன்னாகம் பொலீஸாரிடம் ஒப்படைத்தனர்.

பொலீஸார் அந்த நால்வரையும் மல்லாகம் நீதிவான் முன் நேற்று ஆஜர் செய்தனர். நால்வரையும் விளக்கமறியலில் வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார். (ம-3)

## கழுவாஞ்சிக்குடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்பட்டது.

மட்டு. நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.கிருஷ்ணபிள்ளை இது தொடர்பாக சம்பந்தப்பட்ட படை அதிகாரிகளுக்கு முறையிட்டார். (ம-3-6-12)

எமது புதிய வீடியோCD வெளியீடு
ஆனந்தராஜ், லிவிங்ஸ்டன், பாண்டியராஜனின்
வடக்கு வாசல்
வீடியோ விமல்
யாழ்ப்பாணம்.

தீபாவளி மலிவு விற்பனை
சகலவித சாறி வகைகள், துணி வகைகள், றெடிமேட் ஆடை வகைகள், சேட், ரீ சேட் அனைத்தையும் விசேட தள்ளுபடி விலையில் மலிவாகப் பெற்றுக்கொள்ளலாம்.
இந்தியன் சாறி வகைகள் 600 550 700 350/= மட்டுமே!
சோதி ரெக்ஸ்ரைல்ஸ்
21, நவீன் சந்தை மேல்மாடி, யாழ்ப்பாணம்.
T.P. 222 2139
சகலவிதமான சாறி பிளவ்ஸ் பீஸ் வகைகளும் ஒரே கூரையின் கீழ் பெற்றிட நாடுங்கள்!
(C/30800) (22-13-16)

வடமராட்சி, யாழ். - கொழும்பு பயணிகள் வான் சேவை
நேரடியாகவும் தொலைபேசி மூலமும் ஆசனப் பதிவு செய்யலாம்.
வாடிக்கையாளர் கட்டணம் 900/=
ஜெயா ட்ரான்ஸ்போட் & கொமினிகேசன்
கொடிகாமம் வீதி, நெல்லியடி, தொ.இ. 021-226-3500
JEYA COMMUNICATION COLOMBO-13
Tel:01-2478444, 01-2478443, 0777-271478
லொறி மூலம் பொருள்களை அனுப்பலாம்.

வேலை ஆள் தேவை
புன்னாலைக்கட்டுவன் பகுதியில் இயங்கிவரும் வியாபார நிலையம் ஒன்றுக்கு பொருள்களை விற்பனை செய்வதற்கு ஆள் தேவை (இரும்புப் பொருள்கள் விற்பனையில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை).
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.
தொடர்பு:
விளம்பர இல. 2076
மே/பா உதயன்,
யாழ்ப்பாணம்.
(23798) (22-13-16)

யாழ் மக்களுக்கோர் அரிய வாய்ப்பு
SINGAPORE AIRLINES வழங்கும் உல்லாசப் பயண சேவை
SINGAPORE AIRLINES உங்களோடு மிகக் குறைந்த செலவில்
இவ்விசேட சலுகை
டிசம்பர் 31 வரை மட்டுமே
தீபாவளி, கிறிஸ்மஸ் பண்டிகைக்கால சுற்றுலாவிற்காக ரூ30300/- மட்டுமே (வரி நீங்கலாக)
சந்தர்ப்பத்திற்கு முந்துங்கள்
இருவழி விமானப் பயணச்சீட்டு
இரு இரவுகள்/ மூன்று நாள்கள் சிங்கப்பூரில் காலை உணவுடன் நட்சத்திர விடுதி வசதி
சிங்கப்பூரில் விமான நிலையத்திற்கும் விடுதிக்குமான இருவழி போக்குவரத்துச் சேவை
மேலும் பல விசேட சலுகைகள்
எற்கின் ஸ்பென்ஸ் ஓவசீஸ் ரவல் சேவிசஸ் பிறைவேற் லிமிடெட்
இல. 487, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சிற்றி மெடிக்கல் கட்டடம்) தொலைபேசி. 021.222.3771

EXPOAIR எக்ஸ்போ எயார்
your friend in the skies... வானில் உங்கள் நண்பன்...
யாழ் பயணத்தின் போது றோள்ஸ் றெய்ஸ் இயந்திரத்தின் சொகுசுப் பயணத்தினை அனுபவியுங்கள்!
யாழ்ப்பாணம் – 021 2223891, 021 2226297, 071 2348888
கொழும்பு – 074 512666, 360290/1
E-mail:jaffna@expoavi.com
இலங்கையின் நம்பத்தகுந்ததும் முன்னணியுமான யாழ் – கொழும்பு விமான சேவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19.10.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.